# பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 175

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
ஒன்பதாவது பாராளுமன்றம்
(நான்காவது கூட்டத்தொடர்)

## அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் இரண்டாவது அறிக்கை

(2022.10.21 தொடக்கம் 2023.01.19 வரை)

அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர்
பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார ,
பாராளுமன்ற உறுப்பினர் அவர்களினால்
2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது

அச்சிடப்பட வேண்டுமென 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தினால் கட்டளையிடப்பட்டது

## அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு
## ஒன்பதாவது பாராளுமன்றம் (நான்காவது கூட்டத்தொடர்)

கௌரவ சபாநாயகர் அவர்களின் 2023 பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதிய அறிவித்தலின் பிரகாரம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 இன் ஏற்பாடுகளுக்கமைவாக 2023 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாக தெரிவுக்குழுவினால் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடருக்கான அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவிற்கு பின்வரும் 31 பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

1. கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார
2. கௌரவ ஜகத் புஷ்பகுமார
3. கௌரவ ஜானக வக்கும்புர
4. கௌரவ லொஹான் ரத்வத்தே
5. கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்
6. கௌரவ டி.வீ. சானக
7. கௌரவ சாந்த பண்டார
8. கௌரவ அநுர திசாநாயக்க
9. கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்
10. கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா
11. கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே
12. கௌரவ தயாசிறி ஜயசேக்கர
13. கௌரவ ரோஹித அபேகுணவர்தன
14. கௌரவ இரான் விக்கிரமரத்ன
15. கௌரவ நிமல் லான்சா
16. கௌரவ ஜயந்த சமரவீர
17. கௌரவ எஸ். எம். முஸ்ஸாரப்
18. கௌரவ நலீன் பண்டார ஜயமஹ
19. கௌரவ எஸ்.எம். மரிக்கார்
20. கௌரவ சமிந்த விஜேசிறி
21. கௌரவ ஹெஷா விதானகே

22. கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன
23. கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி
24. கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய
25. கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த
26. கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ
27. கௌரவ எம். ராமேஷ்வரன்
28. கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்
29. கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ
30. கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே
31. கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

## அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு
## ஒன்பதாவது பாராளுமன்றம் (மூன்றாவது கூட்டத்தொடர்)

கௌரவ சபாநாயகர் அவர்களின் 2022 ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதிய அறிவித்தலின் பிரகாரம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 இன் ஏற்பாடுகளுக்கமைவாக 2022 ஓகத்து மாதம் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைவாக தெரிவுக்குழுவினால் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவிற்கு பின்வரும் 30 பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

1. கௌரவ ஜகத் புஷ்பகுமார
2. கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார
3. கௌரவ ஜானக வக்கும்புர
4. கௌரவ லொஹான் ரத்வத்தே
5. கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்
6. கௌரவ டி.வீ. சானக
7. கௌரவ சாந்த பண்டார
8. கௌரவ அநுர திசாநாயக்க
9. கௌரவ ரஊப் ஹகீம், சட்டத்தரணி,
10. கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க
11. கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே
12. கௌரவ தயாசிறி ஜயசேகர
13. கௌரவ ரோஹித அபேகுணவர்தன
14. கௌரவ இரான் விக்கிரமரத்ன
15. கௌரவ நிமல் லான்சா
16. கௌரவ எஸ். எம். முஸ்ஸாரப்
17. கௌரவ நலீன் பண்டார ஜயமஹ
18. கௌரவ எஸ்.எம். மரிக்கார்
19. கௌரவ முஜிபுர் ரஹுமான்
20. கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,
21. கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன
22. கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி
23. கௌரவ (மேஜர்) சுதர்சன தெனிபிடிய
24. கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த, சட்டத்தரணி,
25. கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

26. கௌரவ எம் ராமேஷ்வரன்
27. கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்
28. கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ
29. கௌரவ மதுர விதானகே, சட்டத்தரணி
30. கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

## குழுச் செயலக பணியாளர்கள்

அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தற்போதைய பணியாளர்கள் பின்வருமாறு.

- உதவிப் பணிப்பாளர் ( நிருவாகம்) – திருமதி. நிஷாந்தி எஸ். விக்கிரமரத்ன
- பிரதான உத்தியோகத்தர் - திருமதி. சீ.எம். சுபசிங்ஹ
- பிரதிப் பிரதான உத்தியோகத்தர் – திருமதி. டி.ஆர்.யு. கமகே
- உதவிப் பிரதான உத்தியோகத்தர் - திருமதி. ஜீ.எம்.எச்.எஸ்.கம்லத்
- உதவிப் பிரதான உத்தியோகத்தர் - திருமதி.ஆர்.சீ.குலதிலக்க
- பாராளுமன்ற உத்தியோகத்தர் – செல்வி. ஜீ.வீ.எஸ். கே. குமாரி
- பாராளுமன்ற உத்தியோகத்தர் – திருமதி. ஐ.எஸ். கோமிஸ்
- பாராளுமன்ற உத்தியோகத்தர் – திருமதி. ஜீ.எல்.டி. பெர்னாந்து

## சான்று வாசிப்பு

- திரு. எஸ்.ஏ.எம். சஹீட் – பிரதிப் பிரதான உத்தியோகத்தர் (ஆவண அலுவலகம்)
- திரு. எம்.என்.எம். சிபாக் – சிரேஷ்ட இணைய பதிப்பாசிரியர் (ஆ/த) (தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவ திணைக்களம்)
- திரு. எஸ். ரஜனிமாலா – சுருக்கெழுத்தாளர் (தமிழ்) (துறைசார் மேற்பார்வைக் குழு)

## குழு அறிக்கைகள்

- www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்து பின்வரும் படிமுறைமூலமாக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் வெளியீடுகளை தரவிறக்கம் செய்துகொள்ளமுடியும்.

www.parliament.lk → **தமிழ்** → **வெளியீடுகள்** → **குழு அறிக்கைகள்**

# பொருளடக்கம்


பக்க எண்

1. தவிசாளரின் குறிப்பு 11
2. ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடருக்கான அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் இரண்டாவது அறிக்கை 13
3. நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வின் அபிப்பிராயம் 17
4. அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவினால் புலனாய்வு செய்யப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகளும் புலனாய்வு செய்யப்படட நிறுவனங்களும்

| | | |
|---|---|---|
| i. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 19 |
| ii. | இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பெனி | 41 |
| iii. | தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை | 43 |
| iv. | மத்திய கலாசார நிதியம் | 55 |
| v. | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் | 77 |
| vi. | ஶ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை | 89 |
| vii. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 115, 117 |
| viii. | பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை | 139 |

5. இணைப்பு 165-175
6. அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களின் வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்) அல்லது மிகை / (பற்றாக்குறை) 177

## தவிசாளரின் குறிப்பு

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட 08 அரச தொழில் முயற்சிகளுக்குரிய உசாவல்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்விசாரணைகள் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரில் இடம்பெற்றதுடன் அவ்விசாரணை அறிக்கையை ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரில் சமர்ப்பிப்பதற்குரிய இணக்கப்பாட்டினையும், அங்கீகாரத்தையும் வழங்கியமை தொடர்பாக குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148ஆவது உறுப்புரைக்கு அமைவாக பாராளுமன்றம் பகிரங்க நிதிமீது கொண்டுள்ள கட்டுப்பாட்டுடன் நேரடியாக தொடர்புபடும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் விசாரணை நடவடிக்கைகள் மூலம் நாட்டின் சொத்துக்களின் முகாமைத்துவமானது மிக முக்கியமான ஒரு பணியாக இனங்காணப்பட்டுள்ளது. அதற்கமைவாக நாட்டில் உள்ள காணிகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்காக தாபிக்கப்பட்டுள்ள முதன்மை நிறுவனமான காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, குழுவின் முன் அழைக்கப்பட்டதுடன், அந்நிறுவனம் வசம் தற்போதுள்ள காணிகளின் அளவு மற்றும் அதன் பெறுமதி என்பன இற்றைப்படுத்தப்பட வேண்டுமென விதப்புரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு மத்தியில் விசேட நிறுவனமொன்றாக கருதப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) நிறுவனம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட குழு, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் விசேட கணக்காய்வு அறிக்கைக்கு அமைவாக நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கு பின்பற்றியிருந்த பெறுகை நடைமுறையில் பல குறைபாடுகள் நிலவியமையினை அவதானித்தது. அதற்கமைவாக அவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 223 என விசேட அறிக்கையொன்றினையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்துள்ளது.

இதேவேளை, தேசிய பொருளாதாரத்திற்கு வலு சேர்ப்பதற்கான ஆற்றலுடைய தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை, குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், உள்நாட்டு பொருளாதாரத்திற்கும், உள்நாட்டு உணவுத் தேவைக்கும் அந்நிறுவனத்தினால் வழங்கக்கூடிய மற்றும் வழங்க வேண்டிய பங்களிப்புத் தொடர்பாக விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மத்திய கலாசார நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அந்நிறுவனத்தை குழுவின் முன் அழைத்து, முறையான மற்றும் சுயாதீனமான

விசாரணையொன்றினை மேற்கொள்வதற்கு விதப்புரை வழங்கப்பட்டது. மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் மீன் நுகர்வோருக்காக சேவையாற்றும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை குழுவின் முன் அழைத்து, அரச தொழில் முயற்சி என்ற வகையில் வெற்றிகரமாக இயங்க முடியாமைக்கான காரணங்கள் தொடர்பாக வினவப்பட்டதுடன், அது தொடர்பான விதப்புரைகள் பலவும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை பற்றிய விசாரணையின் போது, நியாயமான கட்டணத்தில் தரமான சுகாதார சேவையை போட்டித்தன்மையுடன் வழங்குவதற்குத் தவறியமை தொடர்பாக அவ்வைத்தியசாலையின் உள்ளக நிர்வாகத்தில் நிலவிய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய குழு, அதன்போது வழங்கிய விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனை பரீட்சிப்பதற்காக உப குழுவொன்றினையும் நியமித்துள்ளது. அத்துடன், வெளிநாடு செல்வதற்கு அதிக அக்கறை காட்டப்படும் இக்காலப்பகுதியில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குழு, அங்கு நிலவிய பல முரண்பாடுகளை வெளிக்கொணர்ந்ததுடன், அவற்றை துரிதமாக சரிசெய்வதற்கு பல விதப்புரைகளையும் வழங்கியுள்ளது.

உள்நாட்டு நுகர்வோரை பாதுகாப்பதற்காக செயற்படும் பலம் பொருந்திய நிறுவனமான பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினை அழைத்து, முட்டை விலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டதுடன், மீண்டும் அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் இருப்பதற்கும், நடைமுறை ரீதியாக ஏற்படும் சிக்கல்களை நிறுவனங்களுக்கிடையிலான இடைத் தொடர்புகள் ஊடாக தீர்ப்பதற்கும் தேவையான வழிகாட்டுதல்களையும், விதப்புரைகளையும் குழு வழங்கியுள்ளது.

அற்கமைவாக, இவ்விசாரணைகளில் கலந்து கொண்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிப்பதுடன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் உட்பட பணியாட்டொகுதிக்கும், கணக்காய்வாளர் தலைமையதிபதி உட்பட தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பணியாட்டொகுதிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**(பேராசிரியர்) ரஞ்சித் பண்டார (பா.உ.)**
**தவிசாளர்,**
**அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு**

# ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடர் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் இரண்டாவது அறிக்கை

அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவானது அதன் ஒன்பதாவது பாராளுமன்றத்திற்கான நான்காவது கூட்டத் தொடரின் இரண்டாவது அறிக்கையை பெருமகிழ்ச்சியுடன் முன்வைக்கின்றது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரைக்கு அமைவாக கணக்காய்வாளர் தலைமையதிபதி அரசாங்கத்தின் எல்லா பகிரங்கக் கூட்டுத்தாபனங்களும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் வேறு பொறுப்புமுயற்சிகள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அல்லது பதிவு செய்யப்பட்டதாக கருதப்பட்டதுமான எந்த கம்பெனிகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி சபை வைத்திருக்கின்றதோ அக்கம்பெனிகள் என்பவற்றை, அவற்றின் கணக்குகள் உள்ளடங்களாக, பாராளுமன்றத்தின் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் ஊடாக கணக்காய்வு செய்தல் வேண்டும்.

அதற்கமைவாக, 2022.10.21 ஆம் திகதி தொடக்கம் 2023.01.19 ஆம் திகதி வரை அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் விசேட புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் விசேட கணக்காய்வுகள் தொடர்பான அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2022.10.21 ஆம் திகதி தொடக்கம் 2023.01.19 ஆம் திகதி வரை அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் விசேட புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் புலனாய்வு செய்யப்பட்ட காலப்பகுதி

| | **நிறுவனம்** | **புலனாய்வு செய்யப்பட்ட திகதி** | **புலனாய்வு செய்யப்பட்ட விடயம்** |
|---|---|---|---|
| 1. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | 2022.10.21 | 2020 ஆம் நிதியாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் |

| | | | |
|---|---|---|---|
| | | | அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை |
| 2. | இலங்கை நிலக்கரி தனியார் கம்பெனி | 2022.11.09 | நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி தொழிற்சாலைக்கு 2022-2025 காலப்பகுதிக்கான நிலக்கரி கொள்வனவு செய்வதற்கான கொள்வனவு செயல்முறையின் மதிப்பீடு தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை |
| 3. | தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை | 2022.11.23 | 2017 ஆம் நிதியாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை |
| 4. | மத்திய கலாசார நிதியம் | 2022.11.24 | 2015 - 2019 காலப்பகுதியில் மத்திய கலாசார நிதியத்தின் செயல்திறன் மற்றும் தற்போதைய செயல்திறன் குறித்த விசேட கணக்காய்வு அறிக்கை |
| 5. | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் | 2022.11.25 | 2019 ஆம் நிதியாண்டிற்கான |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை |
| 6. | ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை | 2022.12.06 | 2019, 2020 ஆம் நிதியாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை |
| 7. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | 2022.12.08 | இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 2019 மற்றும் 2020 ஆம் நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை |
| | | 2023.01.18 | 2022.12.08 ஆம் திகதி நடத்தப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்துவதன் முன்னேற்றம் |
| 8. | பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை | 2023.01.19 | தற்போதைய செயலாற்றுகை |

## <u>க்கூற்றுக்கள் மீதான கணக்காய்வின் அபிப்பிராயம்</u>

ஒவ்வொரு நிறுவனத்தினாலும் 2019, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

**1. <u>முனைப்பழி செய்யப்படாத அபிப்பிராயம்</u> (Unqualified Opinion)**

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிறுவனத்தின் கணக்குகளில் கணிசமானளவு மீறல்கள் அல்லது பிறழ் கூற்றுக்களை இனங்காண்பதற்கு இயலாதுள்ளமை.

**2. <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயம்</u> (Qualified Opinion)**

நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிசார் தகவல்கள் கணக்கீட்டு நியமங்களுக்கு இசைந்தொழுகும் வகையில் அறிக்கையிடப்படாமை மற்றும் அவற்றை உறுதி செய்துகொள்வதற்கான ஆவண ரீதியிலான சான்றுகளை இனங்காண்பதற்கு இயலாதுள்ளமை.

**3. <u>அபிப்பிராய மறுப்பு</u> (Disclaimer of Opinion)**

போதியளவு அல்லது பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை இனங்காண்பதற்கு இயலாமை காரணமாக கணக்குகள் தொடர்பில் அபிப்பிராயத்தை தெரிவிக்க இயலாமை.

**4. <u>பாதகமான அபிப்பிராயம்</u> (Adverse Opinion)**

உண்மைக்கு மாறான அல்லது நம்ப முடியாத தகவல்கள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் கணிசமானளவு பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணக்கிடைத்தமை.

| | **நிறுவனம்** | **கணக்காய்வு அபிப்பிராயம்** | | |
|---|---|---|---|---|
| | | **2019** | **2020** | **2021** |
| 1 | காணி மறுசீரமைப்பு ஆணைக் குழு | அபிப்பிராய மறுப்பு | அபிப்பிராய மறுப்பு | அபிப்பிராய மறுப்பு |
| 2 | இலங்கை நிலக்கரி தனியார் கம்பெனி | முனணப்பழியுள்ள அபிப்பிராயம் | முனணப்பழியுள்ள அபிப்பிராயம் | முனணப்பழியுள்ள அபிப்பிராயம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை | கணக்குகள் பெற்றுக்கொள்ளப்பட்டது 03 மார்ச் 2023 (கணக்காய்வு செய்யப்பட்டது) | கணக்குகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை | கணக்குகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை |
| 4 | மத்திய கலாசார நிதியம் | கணக்குகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை | கணக்குகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை | கணக்குகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை |
| 5 | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் | கணக்குகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை | கணக்குகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை | கணக்குகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை |
| 6 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை | அபிப்பிராய மறுப்பு | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 7 | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |
| 8 | பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை | முனைப்பழி செய்யப்படாத அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | முனைப்பழியுள்ள அபிப்பிராயம் |

## காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

*(சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு)*

**விசாரணைத் திகதி :** 2022.10.21

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

### 01. கலந்துரையாடலின் நோக்கத்தை விளக்குதல்

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவை (LRC), குழுவின் முன் அழைப்பதற்கான நோக்கம் பற்றிய விளக்கம் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளரது வேண்டுகோளுக்கு அமைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய முக்கியமாக காணிப் பதிவேடுகளை இற்றைப்படுத்துதல் மற்றும் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாகவும் 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படாமை ஊடாக இந்நிறுவனம் பாராளுமன்றத்தின் நிதித் தத்துவங்களை புறக்கணித்துள்ளமை தொடர்பாகவும் விடயங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதி குழுவின் கவனத்திற்கு உட்படுத்தினார்.

மேலும், ஒரு பணிக்கு ஒரு நிறுவனம் எனும் அடிப்படையில் நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்குள்ள சாத்தியம் பற்றிய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் அறிக்கை கிடைத்துள்ளதா என்பதைப் பற்றி குழு வினவியதுடன் அது இற்றைவரை கிடைக்கவில்லையென தெரியவந்தது.

**விதப்புரைகள்**

i. அரசாங்கம் குறைந்த பங்குகளைக் கொண்டுள்ள 17 அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய அறிக்கையொன்றை குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

## 02. ஆணைக்குழுவின் ஆக்க அமைவு

ஆணைக்குழுவின் ஆக்க அமைவு தொடர்பாக குழு கவனம் செலுத்தியதுடன் காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் பிரகாரம் தலைவர் உள்ளிட்ட ஆறு உறுப்பினர்களையும் பதவி வழி அதிகாரத்தில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ள 03 உறுப்பினர்களையும் ஆணைக்குழு கொண்டிருத்தல் வேண்டுமெனினும் தற்போது ஆணைக் குழுவின் அங்கத்துவம் எட்டு உறுப்பினர்களை மாத்திரம் கொண்டுள்ளமை தொடர்பாக வினவப்பட்டது.

சம்பந்தப்பட்ட அமைச்சரினால் இற்றைவரை ஓர் உறுப்பினர் நியமிக்கப்படவில்லையென ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

### தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்

i. வெற்றிடமாகியுள்ள ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்காக 2022.11.18 ஆம் திகதி புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டதாக காணி ஆணைக்குழுவின் தவிசாளரின் 1A/G/24-IV ஆம் இலக்க மற்றும் 2023.01.18 ஆம் திகதிய கடிதம் மூலமாக குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ii. 2022.11.18 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஆணைக்குழு உறுப்பினர், 2022.02.14 ஆம் திகதி பதவி விலகியுள்ள காரணத்தினால் மீண்டும் வெற்றிடமாகிய ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்காக 2023.03.05 ஆம் திகதி புதிய உறுப்பினரொருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என முன்னேற்றம் தொடர்பில் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 03. நிறுவனத் திட்டம்

ஆணைக்குழுவிடம் 2023 - 2028 காலப்பகுதிக்கான ஒரு நிறுவனத் திட்டம் உள்ளதா என்பது தொடர்பாகவும் அதன் செலவுகள் தொடர்பாகவும் குழு வினவியது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் வழிகாட்டலுடன் ஆணைக்குழு ஒரு நிறுவனத் திட்டத்தை தயாரித்து வருவதாக ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

### விதப்புரைகள்

i. யாக்கப்பட்ட நிறுவனத் திட்டத்தை 2022.12.31 ஆம் திகதியாகின்ற போது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

ஆணைக்குழுவின் 2023 – 2027 உபாயமார்க்கத் திட்டம், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளரின் 2/1/129V ஆம் இலக்க மற்றும் 2023.08.16 ஆம் திகதிய கடிதம் மூலமாக குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

**04. ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

2015 - 2019 காலப்பகுதிக்கான ஆணைக்குழுவின் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லையெனும் விடயம் பற்றி குழு கவனம் செலுத்தியதுடன் அவ்வறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணங்கள் தொடர்பாக குழு வினவியது.

**விதப்புரைகள்**

i. 2015 – 2019 காலப்பகுதிக்கான ஆணைக்குழுவின் ஆண்டறிக்கைகளை தாமதமின்றி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

2015 – 2019 வருடங்களுக்குரியதான வருடாந்த அறிக்கைகள் தொடர்பில் 2022.12.16 ஆம் திகதி சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட வரைவு அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் பிரதம அமைச்சரின் தலைமையில் 2023.03.01 மற்றும் 2023.03.22 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட அமைச்சரவை உப குழுவில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டதெனவும் எதிர்வரும் காலப்பகுதியில் தீர்மானமொன்றினை மேற்கொள்ளவுள்ளதாகவும் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 05. நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

காணி ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளை கடந்த 10 வருடங்களில் இனங்கண்டு அவற்றை மதிப்பீடு செய்வதற்கு இயலாமல் போயுள்ளமையும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்தை தெரிவிப்பதற்கு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளை இனங்கண்டு மதிப்பீடு செய்வது அத்தியாவசியம் என்பதும் காணி ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் மறுக்கப்பட்டமைக்கான காரணங்களாக அமைந்துள்ளன.

இப்பணிக்கு நில அளவையாளர் தலைமை அதிபதி அல்லது அவரின் பிரதிநிதி மற்றும் அரச தலைமை மதிப்பீட்டாளர் அல்லது அவரின் பிரதிநிதியை உள்ளடக்கியவாறு ஒரு செயலணியை தாபிப்பது பொருத்தமானதென இதன்போது குழு வலியுறுத்தியது.

**விதப்புரைகள்**

i. நில அளவையாளர் தலைமை அதிபதி அல்லது அவரின் பிரதிநிதி மற்றும் அரச தலைமை மதிப்பீட்டாளர் அல்லது அவரின் பிரதிநிதியை உள்ளடக்கியவாறு ஒரு செயலணியை தாபித்தல் மற்றும் அதன் நோக்கங்களையும் பணியையும் தீர்மானித்து குழுவுக்கு அறிக்கையிடல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

i. இதற்கென 2022.10.25 ஆம் திகதி 09 உறுப்பினர்களைக் கொண்ட விசேட செயலணியொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.
ii. பின்னர், மேற்படி செயலணியின் உள்ளடக்கம் 11 வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்ற அதன் முன்னேற்றம் தொடர்பில் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 06. ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி

அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பிரதிநிதியினால் தெரிவிக்கப்பட்ட பின்வரும் விடயங்கள் தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

- ஆனைக்குழு அலுவலகத்தில் காணி உறுதி தொடர்பான கோப்புகள் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படாமை
- நிறைவேற்று மட்டத்திலான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாமை
- தலைவர் நிறுவனத்தின் சார்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக வெறுமனே நிர்வாகக் கடமைகளை மேற்கொள்ளுதல்
- நிரந்தர பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்படவில்லை என்பதுடன் பதில் கடமையாற்றும் பணிப்பாளர் நாயகம் ஒருவரினால் அக்கடமைகள் நிறைவேற்றப்படுதல்
- 5 வருடகால சேவையின் பின்னர் ஆனைக்குழுவின் பணியாட்டொகுதியினருக்கு 20 பர்சஸ் காணியை வழங்கும் நடைமுறையும் காணி விற்பனைக்கான ஒரு கருத்திட்டமும் இருந்து வந்துள்ளதுடன் காணிகளை மீதப்படுத்துவதற்காக இக்கருத்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளமை.

**விதப்புரைகள்**

i. காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு உரித்தான புறம்பானதொரு பிரிவாக காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவைப் பேணி வருதல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

i. பணிப்பாளர் நாயகம், செயலாளர், பணிப்பாளர் (நிர்வாகம்) மற்றும் பணிப்பாளர்/காணி ஆகிய பதவிகளை நிரந்தரமாக உருவாக்குவதற்காக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திடம் அனுமதி கோரியுள்ளதாக குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

ii. அதன்படி மேற்படி அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் (நிர்வாகம்)

பதவிகளுக்காக பொது அறிவித்தல் மூலமாக விண்ணப்பங்களைக் கோரி ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றதென்ற முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 07. <u>ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு</u>

குழுவினால் வினவப்பட்டதற்கு அமைவாக ஆவணங்களின் பிரகாரம் ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் விபரங்கள் ஏக்கர் அடிப்படையில் ஆணைக்குழுவின் தலைவரினால் முன்வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| 1972 ஆம் ஆண்டின் சட்டத்திற்கு அமைவாக (விவசாயக் காணிகள்) | 1,357,651.00 |
| 1975 ஆம் ஆண்டின் சட்டத்திற்கு அமைவாக (கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான காணிகள்) | 451,844.00 |
| **காணிகளின் மொத்த அளவு** | **<u>1,809,495.00</u>** |
| ஆணைக்குழுவினால் பராதீனப்படுத்தப்பட்ட காணிகளின் அளவு (வர்த்தமான பத்திரிகைகள் வாயிலாக) | |
| அரச பெருந்தோட்ட யாக்கம் | 317,615.00 |
| மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை | 551,951.00 |
| 6501 கோப்பு வாயிலாக | 317,615.00 |
| அரச நிறுவனங்களுக்கு | 184,114.00 |
| **எஞ்சியுள்ள காணிகளின் அளவு** | **<u>616,876.00</u>** |
| குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகள் | 11,639.00 |
| விஹாரைகள் மற்றும் தேவாலயங்களுக்கு ஒதுக்கப்பட்ட காணிகள் | 7,953.00 |
| தற்போது ஆணைக்குழுவுக்குச் சொந்தமாக உள்ள காணிகளின் அளவு | **413,170.00** |

மேலுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக உடன்படிக்கைகள் மூலம் பராதீனப்படுத்தப்பட்ட காணிகளும் இருப்பதாக ஆணைக்குழுவின் தலைவரால் குறிப்பிடப்பட்டதுடன் மேற்படி கூற்றுக்களின் தகவல்கள் சரியாகக் குறிப்பிடப்படாமை காரணமாக மேற்படி காணிகளின் அளவை இனங்காண்பதில் சில நடைமுறைசார் அசௌகரியங்கள் எழுந்துள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதிக செலவினத்தை ஏற்க நேரிடுகின்ற போதிலும், காணிகளை இனங்காண்பதற்கு ட்ரோன் தொழில்நுட்பம் போன்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதன் அவசியத்தன்மை பற்றிக் குழு கவனம் செலுத்தியது.

**<u>விதப்புரைகள்</u>**

i. துல்லியமாக இனங்காணக்கூடிய காணிகளின் அளவு மற்றும் துல்லியமாக இனங்காண முடியாத காணிகளின் அளவு பற்றிய அறிக்கையொன்றை 03 மாதங்களுக்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

i. நியமிக்கப்பட்டுள்ள செயலணியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாக காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகள் பற்றிய ஆவணம் கீழ்வரும் வகையில் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகளை அடையாளம் கண்டு எல்லைகளை சுட்டிக்காட்டக்கூடிய காணிகளின் ஆவணமொன்றினைத் தயாரித்தல்.
- ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகளாக அடையாளப்படுத்திய போதிலும் உறுதியாக எல்லைகளை அடையாளம் காண முடியாத காணிகளின் ஆவணமொன்றினைத் தயாரித்தல்.
- ஆணைக்குழுவிற்கு ஆவணங்களூடாக ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகள் என்றபோதிலும் களத்தில் உறுதியாக அடையாளம் காண முடியாத காணிகளின் ஆவணமொன்றினைத் தயாரித்தல்.

ii. அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட சாராம்ச ஆவணம் இணைப்பு 01 ஆகும்.

## 08. <u>2021.11.17 திகதி நடைபெற்ற அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் வழங்கப்பட்ட கட்டளைகளை நடைமுறைப்படுத்தல்</u>

### 08.1 <u>காணிகள் தொடர்பில் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணம் (கட்டளை இலக்கம் 04)</u>

ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் அளவு பற்றிய சரியான அறிக்கையொன்று இல்லை என்பதனால், அந்த ஆவணத்தை தயாரிப்பதற்கான திட்டமொன்றை துரிதமாக தயார் செய்து குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டியதன் அவசியத்தன்மை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் குறிப்பிடப்பட்டதுடன், ஆணைக்குழுவினால் கணக்கிடப்பட்ட காணிகளின் பெறுமதி, இன்றைய பெறுமதியுடன் இசைவானதாக இல்லை என்பதனால், அக்காரணத்தின் அடிப்படையில் கடந்த பத்து வருட காலப்பகுதியில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிட கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இயலுமை இல்லாமை ஆணைக்குழு தொடர்பில் காணப்படும் மற்றுமொரு பாரிய குறைபாடாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், ஆணைக்குழுவுக்கு உரித்தான 1,800,000 ஏக்கர்களிலான மொத்தக் காணியின் பெறுமதி ரூபா மில்லியன் 676 என்பதோடு அதற்கமைய ஒரு ஏக்கரின் பெறுமதி ரூபா 373/- ஆகும் என்றும், ஆணைக்குழுவின் காணிகளை பராதீனப்படுத்துவது தொடர்பில் சிக்கல்கள் காணப்படுவதாகவும், காணிச் சட்டத்தை இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திருத்தம் செய்தல் வேண்டும் என்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேலும் குறிப்பிட்டார்.

### 08.2 <u>“பத்து இலட்சம் உறுதிகள்” கருத்திட்டம் (கட்டளை இல. 06)</u>

ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்ட **“பத்து இலட்சம் உறுதிகள்”** எனும் கருத்திட்டம் தொடர்பாக குழு கவனம் செலுத்தியது.

2018 ஆம் ஆண்டு காணி அமைச்சினால் மேற்படி கருத்திட்டத்திற்கு 214 ஆன மேலதிக பணியாட்டொகுதியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதுடன், மேற்படி ஆட்சேர்ப்புக்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும், இக்கருத்திட்டத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டளவில் பயனாளிகளுக்கு மத்தியில் கையளிக்கப்பட்டிருப்பது சுமார் 6000 உறுதிகள் மாத்திரமாகும்

என்பதுடன், "காணி ஆணைக்குழு கிராமத்திற்கு" "வனஸ்பதி" போன்ற கருத்திட்டங்கள் மேற்படி பணியாட்டொகுதியினரால் அமுல்படுத்தப்பட்டிருப்பதாக குழு அவதானித்தது.

## 08.3 214 ஊழியர்களை நிரந்தர பணியாட்டொகுதியில் இணைத்துக் கொள்ளல்

"பத்து இலட்சம் உறுதிகள்" கருத்திட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட ஊழியர்கள் 214 பேரும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் நிரந்தர பணியாட்டொகுதியில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை குழு அவதானித்தது.

**விதப்புரைகள்**

i. இந்த விடயம் தொடர்பான அறிக்கையொன்றை மூன்று மாதங்களுக்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.
ii. நிறுவனத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மேற்படி பணியாட்டோகுதியை விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
iii. இதன் முன்னேற்றம் தொடர்பான இடைக்கால அறிக்கையொன்றை குழுவிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

i. பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
ii. முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 08.4 காணிகள் பற்றிய நிலையான ஆவணமொன்றைத் தயரித்தல் [கட்டளை இலக்கம் 07(அ)]

காணிகள் பற்றிய விபரமான ஆவணமொன்றை தயார் செய்வது தொடர்பாக 2022.11.17 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளை தொடர்பாக குழு கவனம் செலுத்தியது.

ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தெளிவாக இனங்கண்டு எல்லைகளை அடையாளப்படுத்த

வேண்டும் என்றும், அதற்கு அரசின் பிரதம விலை மதிப்பீட்டாளரான நிலஅளவையாளரின் வழிகாட்டலின் கீழ் ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளை இனங்காண்பதற்கு செயலணி ஒன்றை அமைக்க முடியும் என்றும் இதன் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி குறிப்பிட்டார்.

மேலும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு பராதீனப்படுத்தப்பட்ட காணிகள், விஹாரை, தேவாலகம் கட்டளைச் சட்டத்தின் மூலம் பராதீனப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பாகவும் பராதீனப்படுத்தப்பட்ட பின்னர் ஆணைக்குழுவுக்கு உரித்தான நிலத்தின் அளவின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் ஆணைக்குழுவின் தலைவர் தொடர்ந்தும் விளக்கமளித்தார்.

**<u>விதப்புரைகள்</u>**

i. கடந்த 20 வருடங்களில் காணிகள் பராதீனப்படுத்தப்பட்டமை பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கையை தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

**<u>விதப்புரைகள்</u>**

ii. செயலணியை நியமித்து இரண்டு வாரங்களுக்குள் குழுவுக்கு அறிக்கையிடல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

விசேட செயலணியை நிறுவுவது தொடர்பான அறிக்கை அரசாங்கப்பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 08.5 காணாமற்போன கோப்புக்கள் [கட்டளை இலக்கம் 07 (ஆ)]

காணாமற்போன 200 கோப்புக்கள் தொடர்பான விடயம் பற்றி குழு கவனம் செலுத்தியது.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு ஆணைக்குழுவினால் ஐந்து பேர் கொண்ட விசேட குழு நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது மேற்படி 200 கோப்புக்களில் 51 கோப்புக்களின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

காணி உரிமையாளர்களின் 6141 பிரகடனங்களைக் கொண்டுள்ள மாவட்ட அடிப்படையிலான ஆவணமொன்றும் ஆணைக்குழுவிடம் காணப்படுவதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

**விதப்புரைகள்**

i. காணாமற்போன இலக்கம் 2501 - 2750 இடைப்பட்ட 200 கோப்புக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
ii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள காணி உரிமையாளர்களின் பிரகடனங்களை உள்ளடக்கிய ஆவணத்தை 2022/10/25 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

i. காணி அமைச்சின் மேலதிகச் செயலாளரின் (காணி) தலைமையிலான குழுவொன்றினால் தொலைந்துபோன ஆவணக்கோப்புகள் தொடர்பான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதில் உண்மையாகவே தொலைந்துபோயுள்ள ஆவணக்கோப்புகளின் எண்ணிக்கை 104 என அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய மேற்படி தொலைந்துபோன கோப்புகளுடன் தொடர்புடைய புதிய ஆவணக்கோப்புக்கள் 104 இனை வேறு பிரிவுகளிலுள்ள

கோப்புகளைத் தழுவி இன்றளவில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ii. வெளியிடப்பட்டுள்ள கோப்புக்களில் 2500 - 2750 வரையுள்ள கோப்புக்கள் திறக்கப்படவில்லையென ஆணைக்குழுவில் தற்போதுள்ள ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அது தொடர்பாக 2023.02.16ஆம் தேதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 08.6 <u>கருத்திட்டப் பிரிவின் வருமானம் (கட்டளை இலக்கம் 08)</u>

ஆணைக்குழுவுக்கு உரித்தான கனிய வளங்களிலிருந்து கருத்திட்டப் பிரிவு ஈட்டும் வருமானம் பற்றி வினவுதல்.

கிடைக்க வேண்டிய வருமானம் சுமார் 108 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும் என்ற போதிலும் மீளாய்வு ஆண்டில் இது 60 மில்லியன் ரூபாவாக ஆணைக்குழுவினால் நிதிக் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் மூலம் கருத்திட்டப் பிரிவினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் முரண்பாடு காணப்படுகின்றது என்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும், 1972 – 1974 காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமுறையான வெளிப்படுத்தல்கள் 260 உம் குடும்பங்களுக்குள்ளான சாட்டல்கள் 279 உம் மேலும் தீர்க்கப்பட வேண்டியுள்ளமை தொடர்பில் குழு விசேட கவனம் செலுத்தியது.

தற்போது அவ்வாறான 38 விண்ணப்பப்படிவங்கள் உரித்துக் கோரிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் இதன் போது குறிப்பிட்டார்.

<u>விதப்புரைகள்</u>

i. இந்த விடயம் தொடர்பில் உள்ளக விசாரணையொன்றை நடாத்தி மூன்று மாதங்களுக்குள் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>

இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தலொன்று குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 08.7 குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு சில காணிகள் பற்றிய சிக்கல்கள் (கட்டளை இலக்கம் 09)

மட்டக்களப்பில் அமைந்துள்ள பாசிக்குடா தோட்டம் (269 ஏக்கர்), காலியில் அமைந்துள்ள கொஹில வக்குர எனும் காணி (320 ஏக்கர்), ஒலபொடுவ, யஹல கெலே மற்றும் இங்கிரிய தோட்டம் (22 ஏக்கர்), மெத்தேகெதர தோட்டம் (4 ஏக்கர்), புத்தளத்தில் அமைந்துள்ள இரணவில தோட்டம் (40 ஏக்கர்), புத்தளத்தில் அமைந்துள்ள குசல பீ தோட்டம் (59 ஏக்கர்), கும்புட்டுலிய தோட்டம் (74 ஏக்கர்), பதுளையில் அமைந்துள்ள சாய் காளி அம்மன் கோயில் (7 ஏக்கர்), காலியில் அமைந்துள்ள மஹஹேன்தென்ன தோட்டம் (10 ஏக்கர்), உலபனை கார்மிக தோட்டம் (5 ஏக்கர்) ஆகிய காணிகள் தொடர்பிலும், காணிகளை குத்தகைக்கு விடுதல் மற்றும் ஆணைக்குழுவுக்கு கிடைக்க வேண்டிய பாரியளவிலான குத்தகைத் தொகை மற்றும் நிலுவைத் தொகைகள் கிடைக்காமையினால் அரச வருமானத்திற்கு பாரிய நட்டம் ஏற்படுகின்றமை தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது.

**விதப்புரைகள்**

i. இந்த விடயம் தொடர்பில் விசாரணை செய்து, நீதி அமைச்சுடன் கலந்துரையாடி, சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள உரிய ஏற்பாடுகளைச் செய்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

தற்போதைய நிலைமை மற்றும் முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 08.8 சேதனப் பசளை கருத்திட்டம் (கட்டளை இலக்கம் 10)

வடமத்திய மாகாணத்திலுள்ள 29 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளடங்கும் வகையில் ரூபா மில்லியன் 350 ஆன பெறுமதியைக் கொண்டதாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சேதனப் பசளை முன்னோடிக் கருத்திட்டம் தொடர்பாகவும் இதற்கு ரூபா மில்லியன் 302

செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் ஈட்டப்பட்டிருந்த வருமானம் ரூ.மி. 22 ஆக காணப்பட்டமை தொடர்பாகவும் குழு விசேட கவனம் செலுத்தியது.

அமைச்சின் செயலாளர் இதன் போது கூறுகையில், சபை தீர்மானமொன்றுக்கு அமைய தற்போது இக்கருத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பாக பரிசோதிப்பதற்கு அமைச்சரவை குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**<u>விதப்புரைகள்</u>**

i. இக்கருத்திட்டத்தை, கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி போன்ற அரச நிறுவனங்களாக இயங்கிவருகின்ற உரக் கம்பனிகளிடம் பொறுப்பளிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

ii. அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்டுள்ள மேலே இலக்கம் (i) விதப்புரை தொடர்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

i. மேற்கூறப்பட்ட விதப்புரை குழுவின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ii. முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 09. <u>2020 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்கள்</u>

### 09.1 <u>தோட்டக் கம்பனிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகள்</u>

பெருந்தோட்டக் கம்பனிகளினால் சுவீகரித்துக்கொள்ளப்பட்ட காணிகளுக்காக செலுத்த வேண்டிய நட்டஈடாக தொங்கல் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 215,914,519/- ஆன நிலுவை மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் தீர்க்கப்படாதுள்ளமை மற்றும் மேற்படி கம்பனிகளுக்குச் செலுத்த வேண்டிய நட்டஈடு தொடர்பாக குழு வினவியது.

## 09.2 <u>அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகள்</u>

அரச நிறுவனங்கள் 08 இடமிருந்து கிடைக்க வேண்டியுள்ள 30 வருடங்களை விஞ்சியுள்ள ரூபா 2,127,271,837/- மற்றும் 10 வருடங்களை விஞ்சியுள்ள ரூபா 8,353,409/- ஆன தொகைகளை அறவிட்டுக் கொள்ளத் தவறியுள்ளமை.

**<u>விதப்புரைகள்</u>**

i. பெருந்தோட்டத்துறை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரி என்பவற்றின் ஒருங்கிணைப்புடன் இச்சிக்கலை மிக விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் அது தொடர்பான அறிக்கையை துரிதமாக குழுவிடம் சமர்ப்பித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 09.3 <u>ஹோமாகம பிரதேசத்தில் அமைந்துள்ள லேலன்ட் தோட்டம்</u>

2005 ஆம் ஆண்டு தனியார் கம்பனியொன்றுக்கு 50 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள ஹோமாகம லேலன்ட் தோட்டத்தின் 6 ஏக்கர் காணி தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

இக்காணி தொடர்பில் எந்தவொரு குத்தகை உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை என்றும், நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 12,149,260/-ஆன குத்தகை தொகையை அறவிட்டுக் கொள்ளத் தவறியிருந்தமையும், வாடகை விகிதம் 6% முதல் 4% வரை குறைக்கப்பட்டுள்ளது என்றும், ஒப்பந்தத்திற்கு அமைய லீசின் காலப்பகுதி ஒரு வருடம் மாத்திரமாயினும், தற்போது இது சுமார் ஆறு வருடங்கள் வரை சென்றுள்ளது என்பதையும் குழு அவதானித்தது.

இதன் போது ஆணைக்குழுவின் தலைவர், இது தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு கோரிக்கை கடிதம் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

**விதப்புரைகள்**

i. வாடகை விகிதத்தை 6% முதல் 4% வரை குறைத்தமை பற்றிய முழுமையான அறிக்கையைச் சமர்ப்பித்தல்.
ii. அது தொடர்பில் பொறுப்புவாய்ந்த அலுவலர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 09.4 கணினி முறைமையொன்றை நிறுவுதல்

ஆணைக்குழுவிற்கு, முழுமையான ஒருங்கிணைந்த கணினி முறைமையொன்றை உருவாக்குவதற்கு 2002 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்த 17 மில்லியன் ரூபாய் தொகையை மீள அறவிடுவதற்கோ அல்லது ஏற்புடைய கணினி முறைமையை நிறுவுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பாக குழுவினால் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக கீழ் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

i. இதற்கு பொறுப்புக்கூற வேண்டிய இரண்டு உத்தியோகத்தர்களுக்கு கட்டாய ஓய்வளிக்கப்பட்டுள்ளது.
ii. இந்த விடயம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதான நிதி அலுவலருக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு புகார் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சு செயலாளர் மேலும் தெரிவித்தார்.

**விதப்புரைகள்**

i. இந்த விடயம் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை ஒரு மாதத்துக்குள் குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. **(இணைப்பு 02)**

## 10. குழுவில் விசேட கவனம் செலுத்தப்பட்ட விடயங்கள்

### 10.1 காணி பராதீனப்படுத்தல் தொடர்பான கொள்கை

1972ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஆணைக்குழுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் வழங்கப்படும் நபர்கள் /நிறுவனங்களைத் தெரிவு செய்வதற்கு வெளிப்படைத்தன்மையுடன் கூடிய செயன்முறையொன்றை பின்பற்ற வேண்டுமென்ற போதிலும், ஆணைக்குழுவின் மூலம் வெளியிடப்பட்ட உள்ளக சுற்றுநிரூபமொன்றை மாத்திரம் நிறைவேற்றி அதன் பிரகாரம் காணிகளைப் பராதீனப்படுத்தல் தொடர்பாக குழு அவதானித்தது.

**விதப்புரைகள்**

i. இந்த விடயத்துடன் தொடர்புடைய சகல பிரச்சினைகளையும் ஒரு மாதத்துக்குள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
ii. காணிகளைப் பராதீனப்படுத்தல் தொடர்பான தேசியக் கொள்கையொன்றை மூன்று மாதங்களுக்குள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
iii. தற்போது அமைச்சினால் திருத்தம் செய்யப்பட்டு வரும் காணி ஆணைக்குழு சட்டத்தில் மேற்படி தேசியக் கொள்கையினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 10.2 வாடகை அடிப்படையில் தலைமை அலுவலகத்தை பேணிவருதல்

ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தை பேணி வருவதற்கு ஓராண்டு காலத்துக்கு பத்தரமுல்ல பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டில் கட்டடமொன்று வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள போதிலும், மேற்படி உடன்படிக்கையின் காலத்தை நீட்டிக்காமலும் அமைச்சரவை ஒப்புதல் பெறப்படாமலும் 05 ஆண்டுகளுக்கு மேல் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்த கட்டடத்திலேயே முன்னெடுக்கப்பட்டு அரச மதிப்பீட்டுத் தொகையைக் காட்டிலும் ரூ 29,937,867/- மேலதிக தொகையை செலுத்தியமை தொடர்பாக குழுவினால் வினவப்பட்டமை.

இதன்போது, கருத்துத் தெரிவித்த திறைசேரியின் பிரதிநிதி தான் இந்த விடயம் தொடர்பாக அறிந்திருந்ததாகவும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திற்கு இந்த விடயத்தை ஆற்றுப்படுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

**விதப்புரைகள்**

i. இந்த விடயம் தொடர்பாக விசாரிப்பதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு புகார் அளிததல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 10.3 ஆணைக்குழுவின் சட்டப் பிரிவு

ஆணைக்குழுவில் 5 சட்ட அலுவலர்கள் பணியாற்றுகின்ற போதிலும், நிறுவனத்தின் வழக்கு நடவடிக்கைகளுக்கு வெளியிலிருந்து சட்டத்தரணிகளின் சேவையினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக பதிலளித்த சட்டப்பிரிவு பணிப்பாளர், 2021 ஆண்டு நிறைவடையும் போது ஆணைக்குழுவிற்கு எதிராக 975 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாகவும், மேற்படி கூடுதல் பணிச்சுமை காரணமாக அவ்வாறு வெளியிலிருந்து சுமார் 60 சட்டத்தரணிகளின்

சேவையினைப் பெற வேண்டியிருந்ததாகவும், அதன் பொருட்டு ரூ 18,040,227/- செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

### 10.4 <u>சட்டத்தரணி திரு பீ.ஏ. ஹசித்த குமார இரண்டு கொடுப்பனவுகளைப் பெற்றமை</u>

மேற்குறிப்பிட்ட அலுவலர் இரண்டு சேவை நிலையங்களில் பணியாற்றி ஆணைக்குழுவிலிருந்து ஊதியம் பெற்றமை தொடர்பாக குழுவினால் கவனம் செலுத்தப்பட்டமை.

இதற்கு பதிலளித்த ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் நிதிப் பணிப்பாளர் ஆகியோர் இப் பிரச்சினை தொடர்பாக கணக்காய்வு வினவல் கிடைக்கும் வரைக்கும் இச்சம்பவம் தொடர்பாக தாம் அறிந்திருக்கவில்லை எனவும், இன்றளவில் குறித்த அலுவலரின் சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

**<u>விதப்புரைகள்</u>**

i. கீழ் காணும் விடயங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
   a. சேவை உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடாது திரு ஹஷித்த குமாரவிற்கு ஆணைக்குழுவினால் ரூ 1,775,305/- செலுத்தப்பட்டுள்ளமை.
   b. இந்த அலுவலர் மகநெகும வீதி நிர்மாணிப்பு, உபகரணங்கள் கம்பனியின் பிரதிப் பொது முகாமையாளராக (நிருவாகம்) பணியாற்றியமைக்காக ஊதியம் மற்றும் கொடுப்பனவாக ரூ 2,572,155/- பெற்றுக்கொண்டுள்ளமை.

ii. ஏற்புடைய அமைச்சுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட தொகையை திரு ஹஷித்த குமாரவிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 11. இதர விடயங்கள்

### 11.1 ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள்

கீழ்காணும் விடயங்கள் தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

i. நீதியானதொரு அடிப்படையின்றி பயனாளிகளுக்கு உறுதிகளை வழங்குகையில் நீண்ட தாமதம் ஏற்பட்டுள்ளமை.

ii. ஹந்தானை, கேகாலை மற்றும் ராஸ்ஸகலவத்தை ஆகிய இடங்களில் காணிகளை குறைந்த பெறுமதியில் பராதீனப்படுத்தல்.

iii. ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணியொன்றில் 40 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்த நபரொருவர் அதனை பயன்படுத்துவதை நிறுத்தியமை.

iv. கடந்த 50,40,30,20 மற்றும் 10 ஆண்டுகளுக்கு உறுதிகள் வழங்கப்படாத ஆணைக்குழு காணிகளுக்கு உறுதிகளை வழங்குதல்.

v. 50 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணிகள் அவ்வாறான காணி உரிமையாளர்களால் பயன்படுத்தல்.

**விதப்புரைகள்**

i. மேற் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் குழுவிற்கு விபர அறிக்கையினைச் சமர்ப்பித்தல்.

ii. ராஸ்ஸகலவத்த காணிப் பிரச்சினை தொடர்பான அறிக்கையொன்றை இரண்டு வாரங்களுக்குள் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

iii. பயனாளிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள உறுதிகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படவுள்ள உறுதிகளின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கையொன்றை இரண்டு வாரங்களுக்குள் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

iv. இன்றளவில் நில அளவை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள காணிகளின் அளவு மற்றும் நில அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ள காணிகளின் அளவு தொடர்பான அறிக்கையொன்றை குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 11.2 அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகள்

கீழ்காணும் விடயங்கள் தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

i. மாலம்பே, சந்திரிக்கா குமாரதுங்க மாவத்தையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணி .
ii. தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பணியாட்டொகுதிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த புத்தளம், மாரவிலவில் அமைந்துள்ள ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணி.

**<u>விதப்புரைகள்</u>**

i. இந்த விடயங்கள் அடங்கிய முழுமையான அறிக்கையினை இரண்டு வாரங்களில் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.
ii. மேலதிக விசாரணைகளுக்கு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் நியமிக்கப்படுகின்ற உப குழுவிற்கு ஏற்புடைய விபரங்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 12. குழுவின் விதப்புரைகள்

i. அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அடுத்த கூட்டத்திற்கு முன்னாள் திறைசேரிப் பிரதிநிதியை அழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
ii. காணி அமைச்சின் செயலாளரின் கீழ் ஆணைக்குழு பணிப்பாளர் தலைமை அதிபதியொருவரை நியமித்தல்.
iii. ஆணைக்குழு தொடர்பான முழுமையான மறுசீரமைப்புத் திட்டமொன்றை முன்மொழிந்து அதன் இடைக்கால அறிக்கையினை இரண்டு வாரங்களுக்குள்ளும் முழு அறிக்கையினை ஆறு வாரங்களுக்குள்ளும் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

தலைவர் – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

i. தற்போதைய நிலைமை மற்றும் முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளன.

ii. காணி சீர்திருத்த ஆணைக்குழுவை மறுசீரமைத்தல் பற்றிய அறிக்கை சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளரின் 3/45/(II) இலக்கமுடைய 2023.04.10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

# இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பெனி

(மின் சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சு)

**விசாரணைத் திகதி -** 2022.11.09

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

**குறிப்பு**

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி தொழிற்சாலைக்கு 2022-2025 காலப்பகுதிக்கான நிலக்கரி கொள்வனவு செய்வதற்கான கொள்வனவு செயல்முறையின் மதிப்பீடு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சட்டமுறைக் கணக்காய்விற்கு உட்படுத்தல் மீதான விசேட அறிக்கையொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவினால் தீர்மானிக்கப்பட்டது

அதன்படி, சிலோன் நிலக்கரி தனியார் கம்பனியானது 2022.11.09 ஆம் திகதி அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுமுன் அழைத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு ஏற்பான தகவல்கள், முதலாவது அறிக்கை 223ஆம் இலக்க பாராளுமன்ற வெளியீட்டுத் தொடராக 2023 சனவரி மாதம் 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை

*(கமத்தொழில் அமைச்சு)*

**விசாரணைத் திகதி -** 2022.11.23

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

**01. குழுவின் முன் அழைப்பதற்கான பிரதான நோக்கங்கள்**

தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை தொடர்பில் கீழ் காணும் விடயங்கள் மீது குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

i. நிறுவனத் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடையாதுள்ளமை மற்றும் ஒரு நிறுவனம் என்ற வகையில் முன்னேற்றத்தில் பின்னடைவு காணப்படுகின்றமை.
ii. 2017 – 2021 வரையான வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குத் தவறியுள்ளமை.
iii. 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மாத்திரம் 2022 11.05.ஆம் திகதியன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கேற்புடைய நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் கணக்காய்வு அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்ளாமை.
iv. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் உரியவாறும் முறை சார்ந்ததாகவும் மேற்கொள்ளப்படாமை.
v. 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதியன்று நடைபெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டம் தொடர்பாக பின் ஆய்வு நடவடிக்கைகள் பின்பற்றப்படாமை.

**02. நிறுவனத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தெளிவுபடுத்தல்**

i. நிறுவனமானது 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை நீண்ட காலதாமதத்துடன் அதாவது 2022 நவெம்பர் 05 ஆம் திகதியே தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குச் சமர்ப்பித்திருந்தது. வருடாந்த அறிக்கையின் பிரதான ஆவணமாக கருதப்படும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான கணக்காய்வு அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கும் குறிப்பிட்டதொரு காலம் அவசியமென்பதால் மேற்படி காலதாமதம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது தாமதமடைந்தமை.

ii. 2018ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காதிருந்தமை.
iii. நிரந்தர பிரதான நிதி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாமையும் வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பது காலதாமதமடைவதற்கான ஓர் காரணமாக அமைந்தமை.
iv. உள்ளக நிர்வாகத்தினை வலுப்படுத்துவதற்கும், 31 பண்ணைகளின் நிதி நடவடிக்கைகளை நிர்வாகம் செய்வதற்கும் பேணிச்செல்வதற்குமாக முகாமைத்துவ தகவல் முறைமையொன்று உருவாக்கப்பட்டமை.
v. பண்ணைகளில் கால்நடைகளை மதிப்பீடு செய்தல் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கமைவாக மேற்கொள்ளப்படாதிருந்த அதேவேளை, அவை நிதிக் கூற்றுக்களிலும் குறிப்பிடப்படாதிருந்ததுடன் கால்நடைகளின் எண்ணிக்கை தொடர்பில் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் திட்பநுட்பம் தொடர்பில் முரண்பாடானதொரு நிலைமை தோன்றியிருந்தமையும் உரிய காலப்பகுதிக்குள் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் காலதாமதத்தை ஏற்படுத்தியிருந்தமை.
vi. நிறுவனத் திட்டம், செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் ஆகியவற்றுக்கிடையில் இடைத்தொடர்புகள் காணப்படாமை மற்றும் மேற்படித் திட்டங்கள் நடைமுறைச் சாத்தியமற்றவையாக காணப்பட்டமை.
vii. நிறுவனத்தினால் செயற்படுத்தும் பொருட்டு பெருமளவிலான கருத்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கருத்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படாதிருந்தமை.
viii. முகாமைத்துவத் தகவல் முறைமை தொடர்பில் உரிய காலப்பகுதிகளில் முறையான மீளாய்வு மேற்கொள்ளப்படாமை.
ix. வெலாட் கருத்திட்டம் - அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 4,495 கறவைப் பசுக்களுள் 3,991 பசுக்கள் இறந்துள்ளதோடு தற்போது 504 கறவைப் பசுக்கள் மாத்திரம் எஞ்சியிருக்கின்றமை.
x. 2018 ஆம் ஆண்டில் 15,000 கறவைப் பசுக்களை இறக்குமதி செய்வதற்காக 11.09 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முற்பணத்தொகையாக ஒப்பந்ததார நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த அதேவேளை, நான்கு வருடங்கள் கழிந்துள்ள போதிலும் இதுவரையில் அதற்குரியதான கறவைப் பசுக்கள் இறக்குமதி செய்யப்படாதுள்ளமை.

xi. மேற்படி கறவைப் பசுக்களை இறக்குமதி செய்வதற்காக செலுத்தப்பட்டுள்ள முற்பணக் கொடுப்பணவு, கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தமை தொடர்பில் சிக்கல்கள் காணப்பட்டமை.

xii. நாட்டின் மொத்த பாலுற்பத்தியானது 500 மில்லியன் லீட்டரிலும் அதிகமாக காணப்பட்ட போதிலும் 2021 இல் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் அதற்கான பங்களிப்பாக 10 மில்லியன் லீட்டர்கள் மட்டுமே காணப்பட்டமை. அதாவது அது நாட்டின் மொத்த பாலுற்பத்தியில் 2% மாத்திரமேயாகும்.

xiii. நிறுவனத்தின் வருடாந்த புரள்வு ஒரு வருடத்திற்கு 3 பில்லியன்கள் என்ற போதிலும், போபத்தலாவ, கொட்டுகச்சிய, நிகவெரட்டிய, மார்டின், ரிதியகம மற்றும் மெணிக்பாலம ஆகிய பண்ணைகள் தொடர்ச்சியாக நட்டமடைந்து வருவதாக நிறுவனத்தின் செயற்பாடுகளூடாக சுட்டிக்காட்டப்படுகின்றமை.

xiv. பாலுற்பத்தி மற்றும் விநியோகத்தின் போது செயற்றிறன்மிக்க உற்பத்தித்திறனை நாட்டுக்கு பெற்றுக்கொடுக்கும் வகையில் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை மற்றும் மில்கோ நிறுவனத்தை ஒன்றிணைத்தல்.

## 03. <u>நிறுவனத்தின் குறிக்கோள் மற்றும் பணிகள்</u>

தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் குறிக்கோள் மற்றும் பணிகள் எந்தளவு அடையப்பெற்றுள்ளன என்பது தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

மாட்டிறைச்சி விற்பனை போன்ற சில நடவடிக்கைகளுக்கு சிற்சில வரையறைகள் விதிக்கப்பட்டிருந்த காரணத்தினால் நிறுவனத்தின் குறிக்கோள்களுள் சுமார் மூன்றில் ஒரு பகுதியை இன்றளவில் அடைந்துகொள்ள முடிந்துள்ளதாக நிறுவனத்தின் தலைவரினால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

## 04. <u>நிறுவனத் திட்டம்</u>

சபையின் நிறுவனத் திட்டம் தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டதுடன் தற்போதைய நிறுவனத் திட்டம், செயற்பாட்டுத் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் சபையின் வரவு செலவுத் திட்டம் என்பவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகள் இல்லையென்பதும் அது நிறுவனத்தின் இலக்குகளை அடைவதில் தடையாக காணப்படுகின்றது என்பதும் குழுவின் கருத்தாக அமைந்தது.

**<u>விதப்புரைகள்</u>**

i. சிறந்த நடைமுறைச் சாத்தியமான மற்றும் இலக்குகளை அடையக்கூடியதான நிறுவனத் திட்டமொன்றினைத் தயாரித்து ஒரு மாத காலப்பகுதிக்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - கமத்தொழில் அமைச்சு
தலைவர் - தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

i. தற்போது கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதோடு எதிர்வரும் 02 மாதங்களுக்குள் நிறைவு செய்வதாக தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் தலைவரின் NLDB/ADM/AUDIT இலக்கமுடைய 2023.02.27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

ii. முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

**05. <u>பணியாட்டொகுதி</u>**

சபையின் பிரதான பதவிகளில் நீண்டகாலமாக நிலவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பிலும் அவ்வாறு வெற்றிடங்கள் நிலவுவதால் நிறுவனத்தில் முறைகேடுகள் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறு தொடர்பிலும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

அதன்படி, பால் சேகரிப்பு நிலையங்களில் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களுள் 71 ஊழியர்கள் மேலதிகமாக இருப்பதாகவும், 173 வெற்றிடங்களை நிரப்ப வேண்டியுள்ளதோடு கீழ்வரும் பிரதான வெற்றிடங்கள் நிலவுவதாகவும் குழுவினால் அவதானிக்கப்பட்டது.

- மேற்பார்வை உத்தியோகத்தர் (சந்தைப்படுத்தல்) – 1
- தொழிற்பாடு மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர் – 1
- உதவிப் பொது முகாமையாளர் (நிதி) – 1
- உதவிப் பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் விலங்குணவு வள அபிவிருத்தி) - 1
- நிர்வாக உத்தியோகத்தர் – 4
- கால்நடை வள அபிவிருத்தி உதவியாளர் – 3
- உதவித் தோட்ட அத்தியட்சகர் - 3

- பிரத்தியேக உதவியாளர் -1
- உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் – 1
- மேற்பார்வை உத்தியோகத்தர் (சந்தைப்படுத்தல்) – 1
- தொழிற்பாடு மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர் – 1
- தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் – 1
- தகவல் தொழில்நுட்ப உதவியாளர் - 2

2022.09.26 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையினூடாக ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பில் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த வரையறைகளை தளர்த்தி பிரதான பதவிகளுக்கான ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பிரதிநிதியால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

**<u>விதப்புரைகள்</u>**

i. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் அவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
ii. பணியாட்டொகுதியின் பணிகள் பற்றிய கற்றாய்வு அறிக்கையொன்றினை இரண்டு மாதங்களுக்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - கமத்தொழில் அமைச்சு

தலைவர் - தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை

பணிப்பாளர் நாயகம் – முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

i. இதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ள தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.
ii. முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 06. <u>வெலாட் கருத்திட்டத்தின் (Wellard Project) கீழ் கறவைப் பசுக்களை இறக்குமதி செய்தல்</u>

வெலாட் கருத்திட்டத்தின் கீழ் கறவைப் பசுக்களை இறக்குமதி செய்வதன் தற்போதைய நிலைமை தொடர்பிலும், கறவைப் பசுக்களை இறக்குமதி

செய்வதற்காக திறைசேரியினால் 11.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முற்பணத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளதுடன் மேற்படி கால்நடைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

வெலாட் கருத்திட்டத்தின் கீழ் 4,495 கறவைப் பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் கறவைப் பசுக்களிடையே விசேடமான இரண்டு வகையான நோய்கள் பரவியதாகவும், அதன் காரணமாக கறவைப் பசுக்கள், குறிப்பாக அதிகமான கன்றுகள் இறந்ததாகவும் நிறுவனத்தின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அவர் தெரிவிக்கையில்;

- மேற்படிக் கருத்திட்டமானது 20,000 கறவைப் பசுக்களை இறக்குமதி செய்வதற்காகவே முதலில் கைச்சாத்திடப்பட்டது எனவும்,
- பின்னர் இரண்டாம் கட்டமாக 5,000 பசுக்களை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது எனவும்,
- வெலாட் முகவர் நிறுவனத்தினால் பசுக்களை இறக்குமதி செய்வதற்கான அனைத்து முதற்கட்ட நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டது எனவும்,
- அதற்கென அவர்களுக்கு சுமார் 100 பணியாட்டொகுதியினரின் ஒத்துழைப்பினைப் பெற வேண்டியதாக இருந்தது எனவும்,
- அதற்காக முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது எனவும்,
- அதன் பின்னர் சுகாதார இறக்குமதி அனுமதிப்பத்திரம் சமர்ப்பிப்பது வெற்றியளிக்காமையின் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆம் திகதி கருத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது எனவும்,
- மேற்படி வழங்கப்பட்ட முற்பணத் தொகையானது இன்றளவில் கருத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளாக மாற்றப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

மேற்படி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் செயலாற்றுகை பிணைமுறியேதும் உள்ளதா மற்றும் அது இன்றளவில் காலாவதியாகியுள்ளதா என்பது தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் விசாரணைக்கமைவாக, செயலாற்றுகை பிணைமுறி காலாவதியாகியுள்ள போதிலும், ஒப்பந்தத்தில் நீடிப்பொன்றினைப் பெற்றுக்கொள்ள முடியுமென நிறுவனத்தின் தலைவரினால் தெரிவிக்கப்பட்டது.

**விதப்புரைகள்**

i. மேற்படி விடயம் தொடர்பிலான விசேட அறிக்கையொன்றினை குழுவிடம் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

**07. பண்ணைகளின் சில கணக்குகளில் நிலவும் முரண்பாடுகள்**

கணக்குகளில் நியாயமான சந்தைப் பெறுமதி பின்பற்றப்படாமையின் காரணமாக பண்ணைகளின் நிதி அறிக்கைகளில் சிற்சில முரண்பாடுகள் எழுந்துள்ளமை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

தொழில்நுட்பக் குழு நிபுணர்களின் ஒத்துழைப்புடன், சந்தைப் போக்கின் அடிப்படையில் சிற்சில அளவுகோல்களின் கீழ் கால்நடைகளை மதிப்பீடு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என இதன்போது முகாமையாளரினால் (நிதி) தெரிவிக்கப்பட்டது.

கால்நடைகளின் பெறுமதி கணிப்பிடப்படுகின்ற போது கால்நடை வளங்கள் பற்றிய கணக்கீட்டு நியம இலக்கம் 41இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் முறையான நியமம் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான முறையியலொன்று பின்பற்றப்பட வேண்டுமென்பது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்தாகவிருந்தது.

**விதப்புரைகள்**

i. மேற்படி பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு பண்ணைகளில் கால்நடைகளை மதிப்பீடு செய்கின்ற முறையான செயன்முறையொன்றினைப் பின்பற்றுதல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - கமத்தொழில் அமைச்சு
தலைவர் - தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

தற்போதைய நிலைமை அறிக்கையிடப்படவில்லை.

## 08. <u>பயன்படுத்தப்படாத காணிகள்</u>

24,696.90 ஏக்கர் பயன்படுத்தப்பட்ட காணிகளும், குறைவாக பயன்படுத்தப்படுகின்ற 4,911.47 ஏக்கர் காணிகளும், மொத்தமாக 29,608.41 ஏக்கர் காணிகளும் நிறுவனத்திற்குரியதாக காணப்படுகின்றது என்பது குழுவினால் அவதானிக்கப்பட்டது.

மேலும் இந்த குறைவாக பயன்படுத்தப்படுகின்ற யாதேனும் காணிகளை உரிமைமாற்றம் செய்வதற்கு அல்லது கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான திட்டம் ஏதேனும் உள்ளதா என்பது தொடர்பில் குழு ஆராய்ந்தது.

உலர் வலயத்திலுள்ள 5 பண்ணைகள் இன்றளவில் பயன்படுத்தப்படுவதில்லை எனவும், நட்டத்தில் இயங்கும் 5 பண்ணைகள் தொடர்பில் குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது கூட்டு வியாபார நிகழ்ச்சித்திட்டத்திற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், இன்றளவில் அதற்காக 42 முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அதற்கான மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்கு முதலீட்டுச் சபை, உரிய அமைச்சு மற்றும் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் நிறுவனத்தின் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வர்த்தக நிறுவனம் மற்றும் இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களையும் கலைத்து அவற்றின் காணிகளை முறையே 9.7 ஹெக்டயார் மற்றும் 35.6 ஹெக்டயார் காணிகளை பயன்பாட்டிற்கு பெறுவது தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

மேற்படி இரண்டு நிறுவனங்களையும் இரண்டு வருடங்களுக்கு முன்னதாக தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் கீழ் கொண்டுவருவதற்காக அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) நிறுவனத்தினை கலைக்கும் (மூடிவிடும்) நடவடிக்கை பெரும்பாலும் நிறைவடைந்துள்ளதாகவும், மதிப்பீட்டுத் திணைக்களத்தினதும் அரச முயற்சியாண்மை திணைக்களத்தினதும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் நிதி அமைச்சினதும் அவதானிப்புகளைப் பெறுகின்ற நடவடிக்கை மாத்திரமே தற்போது எஞ்சியிருப்பதாகவும், அடுத்த வருடம் சனவரி மாதமளவில் இந்நடவடிக்கையினை நிறைவு செய்ய முடியுமெனவும் இதன்போது நிறுவனத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

**விதப்புரைகள்**

i. கீழ்வரும் தகவல்களைக் கொண்ட அறிக்கையொன்றினை ஒரு மாத காலப்பகுதிக்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.
   - சபைக்குரிய காணிகளின் அளவு
   - பயன்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு ஏக்கர்களில்
   - குறைவாக பயன்படுத்தப்படுகின்ற காணிகளின் அளவு
   - காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் உரிமையின் கீழுள்ள காணிகளின் அளவு
   - காணிகள் அமைந்துள்ள இடம்

ii. குறைவாகப் பயன்படுத்தப்படும் காணிகளை கைமாற்றம் செய்தல் அல்லது குத்தகைக்கு வழங்குதல் தொடர்பிலான விடயங்கள் பற்றிய சாராம்ச அறிக்கையொன்றினை இரண்டு வாரங்களுக்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.

iii. வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வர்த்தக நிறுவனத்தினை கலைத்தல் தொடர்பிலான தற்போதைய நிலைமை தொடர்பில் அமைச்சரவைக்கு விளக்கமளித்து அது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் முன்னேற்றத்தினை இரண்டு மாதங்களுக்குள் குழுவிற்கு அறிக்கையிடுதல்.

iv. மேற்படி விதப்புரை இலக்கம் (iii) தொடர்பில் மேலும் நிரல் அமைச்சு, காணித் திணைக்களம் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவையும் ஒருங்கிணைப்புச் செய்து இவ்விடயம் தொடர்பிலான அறிக்கையொன்றினை ஒரு மாத காலப்பகுதிக்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - கமத்தொழில் அமைச்சு
தலைவர் - தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

i. விதப்புரை இலக்கம் (i) இன் மூலம் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ii. விதப்புரை இலக்கம் (ii) இன் மூலம் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

iii. விதப்புரை இலக்கம் (iii) இன் மூலம் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 09. சொத்துக்கள், வளங்கள், பங்குகள் மற்றும் முகாமைத்துவத்தினைக் கையகப்படுத்தல்

வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வர்த்தக நிறுவனம் மற்றும் இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) நிறுவனத்தின் சகல சொத்துக்கள், வளங்கள், பங்குகள் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றினை தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்கு சுவீகரிப்பதற்கு அவசியமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2020.12.31 ஆம் திகதியின் போதும் சபையானது மகாவலி கால்நடை வர்த்தக நிறுவனத்திற்குரிய பங்குகளில் 27%ஐ மாத்திரமே கையகப்படுத்தியிருந்தமை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

**விதப்புரைகள்**

i. வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வர்த்தக நிறுவனம் மற்றும் இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களையும் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்கு சுவீகரிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அது தொடர்பிலான சாராம்ச அறிக்கையொன்றினை இரண்டு மாத காலப்பகுதிக்குள் குழுவிடம் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - கமத்தொழில் அமைச்சு
தலைவர் - தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 10. பயன்படுத்தப்படாத விலங்குணவு உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் விலங்குணவு மீது மேற்கொள்ளப்பட்டுள்ள மிகைச் செலவு

பயன்படுத்தப்படாத விலங்குணவு மற்றும் விலங்குணவு உற்பத்தி இயந்திரங்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகூடிய செலவினம் தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டதுடன்போபத்தலாவ, , மல்சிறிபுர, ரொசிடா மற்றும் மாவத்த ஆகிய பிரதேசங்களில் 04 பண்ணைகளில் 6 இயந்திரங்கள் செயலிழந்து காணப்பட்டதாக குழு சுட்டிக்காட்டியது .

கோழிப் பண்ணைகளுக்கான சோளம் போன்ற விலங்குணவு உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அதிக செலவினத்தை மேற்கொள்ள வேண்டி ஏற்படுவதாகவும்விலங்குணவு , உற்பத்திக்கானசெலவினமானது சந்தை விலையினைவிட உயரிய

பெறுமதியில் காணப்படுவதாகவும் ஒப்பீட்டு ரீதியில் விலங்குணவினைக் கொள்வனவு செய்வது அவற்றை உற்பத்தி செய்வதை விட இலாபகரமானதெனவும் மேற்குறிப்பிட்ட 6 விலங்குணவு உற்பத்தி இயந்திரங்களில் 4 பயன்படுத்தப்படுவதாகவும் நிறுவனத்தின் தலைவர் இதன்போது சுட்டக்காட்டினார்.

## 11. <u>இறக்குமதியின் பின்னர் உயிரிழந்துள்ள பசு மாடுகளுக்கான காப்புறுதி நஷ்ட ஈடு</u>

இறக்குமதி செய்யப்படும் பசு மாடுகள் உயிரிழக்கையில் பசு மாடுகளை கொள்வனவு செய்தவர்களுக்கு வழங்கப்படும் காப்புறுதி நஷ்டஈடு குறித்து குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டது .

உயிரிழந்துள்ள விலங்குகளின் இலக்கங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் சரியாக காப்புறுதி நிறுவனத்துக்கு முன்வைக்கப்படாமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் 70 ,பசு மாடுகளுக்காக காப்புறுதி நஷ்டஈடு கோரப்பட்டுள்ளபோதிலும் இதில் 03இற்காக மாத்திரம் காப்புறுதி நஷ்டஈடு செலுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது .

**<u>விதப்புரை</u>**

i. இவ் விடயம் குறித்து ஆராய்ந்துவிசாரணை ,யொன்றை நடாத்தி இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அதன் முன்னேற்றத்தை இரண்டு மாதங்களுக்குள் குழுவுக்கு அறிக்கையிடல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - கமத்தொழில் அமைச்சு
தலைவர் - தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 12. <u>பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள நிதித்தொகை</u>

2011 ஆம் ஆண்டு முதல் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 3,689,824/- தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டதுடன் கணக்காய்வ மற்றும் முகாமைத்துவ

குழுக் கூட்டத்தில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

## 13. தரகர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிதித்தொகை

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடத்தப்படும் தேங்காய் ஏல விற்பனைகளின்போது அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள சட்டத் தொகுப்புக்கு அமைய சபை நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் தரகர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வருடங்களை விஞ்சியுள்ள 05 நிலுவைப் பணத்தின் திரட்டு மில்லியனை அண்மித்துள்ளதுடன், இந்த 22 நிலுவைக் கடன் மீதியை அறவிடாது குறிப்பிட்ட தரகர்களுக்கு தொடர்ச்சியாக தேங்காய் விற்பனை செய்யப்பட்டுள்ளமை குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது

**விதப்புரைகள்**

i. உரிய செயன்முறையினைப் பின்பற்றியவாறு மேற்குறிப்பிட்ட தரகர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுதலும் இரண்டு மாத காலப்பகுதிக்குள் இதன் முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடுதலும்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - கமத்தொழில் அமைச்சு
தலைவர் - தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**மத்திய கலாசார நிதியம்**

*(புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு)*

**விசாரணைத் திகதி :** 2022.11.24

**<u>கலந்துரையாடப்பட்ட விடயங்கள்</u>**

**01. <u>செயற்பாட்டு அடிப்படையில் அரசாங்கத் தொழில்முயற்சிகளை ஒருங்கிணைக்கும் திட்டம் (Report On Possible Amalgamation Of The State Owned Enterprises For One Institution For On Function Basis)</u>**

அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு 2022.10.07ஆம் திகதி நடத்திய இரண்டாவது அமர்வுக்கான கூட்ட அறிக்கையின் 10ஆம் இலக்கப் பந்தியின் பிரகாரம், செயற்பாட்டு அடிப்படையில் அரசாங்கத் தொழில்முயற்சிகளை ஒருங்கிணைக்கும் திட்டமொன்றைத் தயாரிக்குமாறு, அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு குழு வழங்கியிருந்த விதப்புரைக்கு அமைவாக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் குறித்த திட்டம் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு, குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து தெளிவுபடுத்தி அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், செயற்பாட்டு அடிப்படையில் அரசாங்கத் தொழில் முயற்சிகளை மறுசீரமைக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் மூலம் அரசாங்கத் தொழில்முயற்சிகளை இணைத்தல், மூடிவிடுதல் மற்றும் மறுசீரமைத்தல் பற்றி பிரதானமாக ஆராய்வதாகவும் தெரிவித்தார்.

அந்த வகையில், இது காலத்திற்குப் பொருத்தமான ஒரு திட்டமாக அமையுமெனவும் இதனை மேலோட்டமான ஆராய்தலுக்கு அப்பாற்பட்டதான தீவிர நுண்ணாய்வு மற்றும் புள்ளி விபர பகுப்பாய்வுக்குப் பின்னர் மேற்கொள்ள வேண்டுமெனவும் குழு இனங்கண்டுள்ளது.

இது தொடர்பில் பொருளாதார உறுதிப்பாட்டுக்கான குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித் திட்டங்களை கண்டறிவதற்கான தேசியப் பேரவையின் உப குழுவில் 2022.11.15ஆம் திகதி கலந்துரையாடப்பட்டதாக குழு அங்கத்தவரான கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

i. அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களம் அனைத்து பொது நிறுவனங்களையும் ஆய்வு செய்து, பகுப்பாய்வு முடிந்தவுடன், அந்த பகுப்பாய்வை படிப்படியாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு பரிந்துரைத்தது.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

பணிப்பாளர் நாயகம் – அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

**02. அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளரது தெளிவுபடுத்தல்**

மத்திய கலாசார நிதியமானது அரசாங்க பொறுப்புமுயற்சிகள் குழுமுன் அழைக்கப்பட்டதற்கான நோக்கம் தவிசாளரால் தெளிவுபடுத்தப்பட்டதோடு, பின்வரும் விடயங்களில் குழு கவனம் செலுத்தவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

- 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான ஐந்து வருட காலப்பகுதிக்கென கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட "மத்திய கலாசார நிதியத்தின் செயற்பாடு பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கை" தொடர்பில் மத்திய கலாசார நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ள பதில்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் பற்றிய தெளிவுபடுத்தல்.
- 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்காமை.
- 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் மத்திய கலாசார நிதியத்தால் நிதிக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை.
- மத்திய கலாசார நிதியம் தனக்கான நிறுவனத் திட்டத்தைக் கொண்டிருக்காமை.
- மத்திய கலாசார நிதியம் தொடங்கப்பட்டபோது வலுவில் இருந்த 1980ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்திற்கு அமைய, நிறுவனத்தின் ஆளுகைச் சபையின்

கட்டமைப்பின்படி நிருவாக அலுவலர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகிய பதவிகள் உருவாக்கப்பட்டுள்ள விதத்தைத் தெளிவுபடுத்தல்.

## 03. பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிருவாக அலுவலர் ஆகிய பதவிகளுக்கு இடையில் உள்ள வேறுபாடு

1980ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின்படி நிறுவனத்தின் "பணிப்பாளர் நாயகம்" மற்றும் "பிரதம நிருவாக அலுவலர்" ஆகிய பதவிகளுக்கு இடையில் காணப்படுகின்ற வேறுபாடு பற்றி குழு கவனம் செலுத்தியது.

"பணிப்பாளர் நாயகம்" எனும் பதவி மத்திய கலாசார நிதியச் சட்டத்திற்கு அமைவாக துல்லியமாக வரைவிலக்கணம் செய்யப்படாதபோதும், ஆளுகைச் சபையின் அறிக்கை ஒன்றினூடாக பணிப்பாளர் நாயகத்திற்கு நிருவாக அதிகாரங்களை ஒப்படைக்கும் ஒரு கட்டமைப்பு இனங் காணப்பட்டுள்ளதென இதன்போது புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய அமைச்சின் செயலாளரினால் தெளிவுபடுத்தப்பட்டது.

அதன்படி, உதவிப் பணிப்பாளர் (சட்டம்),

- 1990.04.01ஆம் திகதிய ஆளுகைச் சபையானது, ஒழுக்க நடவடிக்கைமுறைக்கான சட்டங்கள் மற்றும் பொதுவான ஒழுக்க விதிக் கோவையொன்றை அங்கீகரித்துள்ளது,
- அந்த ஒழுக்க விதிக் கோவையின் கீழ் பிரதம நிருவாக அலுவலரென அறியப்படுபவர், 1980ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் 07ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள நபராவார்,
- அதற்கு மேலதிகமாக பணிப்பாளர் நாயகம் என அறியப்படுபவர், 1980ஆம் ஆண்டின் 57ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படுகின்ற நபரெனவும்,
- அதன்படி, 1980ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் தத்துவங்களின்படி, அதன் 4(ஊ) வாசகத்திற்கு உட்பட்டதாக ஆளுகைச் சபை அறிக்கையொன்றின் மூலம் அந்த நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

அதன்படி, கணக்காய்வாளர் தலைமையதிபதியினால், பிரதம நிருவாக அலுவலரின் தொழில் விபரத்திற்கும் பணிப்பாளர் நாயகத்தின் தொழில் விபரத்திற்கும் இடையில் காணப்படுகின்ற வித்தியாசம் பற்றி மேலும் வினவப்பட்டது.

அதன்போது, அமைச்சின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

- மேற்குறித்த பணிப்பாளர் நாயகம் பதவி உருவாக்கப்பட்டுள்ள மேற்படி ஆளுகைச் சபை அறிக்கையில், பணிப்பாளர் நாயகம் பதவிக்குரிய கடமைப் பொறுப்புகள் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், கடமை விபரப் பட்டியலின்படி பணிப்பாளர் நாயகம் கடமைகளை நிறைவேற்றி வருவதாகவும்,
- பணிப்பாளர் நாயகம் ஆளுகைச் சபைக்கு நிரந்தர அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், ஆளுகைச் சபை பத்திரமொன்றைச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவதற்கு பணிப்பாளர் நாயகத்தினதும் பிரதம நிருவாக அலுவலரினதும் உடன்பாடு வேண்டுமெனவும், குறிப்பிட்டார்.

இதுகுறித்து கருத்துரைத்த கணக்காய்வாளர் தலைமையதிபதி,

- ஆளுகைச் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நபர் நிருவாக அலுவலராக இருத்தல் வேண்டும்,
- சட்டத்திற்கமைய கலாசார அலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் சபையின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டதாக நிதியத்தின் பிரதம நிருவாக அலுவலராக இருத்தல் வேண்டும்,
- அவ்வாறு இருக்கத்தக்கதாக, வேறு வழிமுறையில் அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் நாயகம் பதவிக்கு அந்தப் பொறுப்புகளை ஒப்படைத்திருப்பதானது நடைமுறையில் சட்ட ஏற்பாடுகளினின்று விலகியிருத்தலாகும், எனச் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பணிப்பாளர் நாயகம் பதவிக்கென முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பது பற்றி குழு கவனம் செலுத்தியதுடன், அதற்கென முகாமைத்துவ சேவைகள்

திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும், இந்தப் பதவி உருவாக்கப்பட்ட 1885 ஆளுகைச் சபை பத்திரத்தின் பின்னர், இதுவரையும் நிதியத்திற்கான பணிப்பாளர் நாயகம் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்துரைத்த முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர்,

- 2006ஆம் ஆண்டு பணியாட்டொகுதி மீளாய்வு செய்யப்பட்டபோது, எல்லா அரசாங்க தொழில்முயற்சிகளுடனும் கலந்தாலோசிக்கப்பட்டதாகவும்,
- அதன் போது தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினாலும் இந் நிறுவனத்திற்கு பணிப்பாளர் நாயகம் பதவியொன்று தேவையென பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும்,
- கலாசாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு தமது செயலாளர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுதல், நிதியத்தின் ஆளுகைச் சபை அங்கத்தவராக பணியாற்றுதல் மற்றும் பிரதம நிருவாக அலுவலராக பணியாற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள காரணத்தினால் தனி ஒருவரினால் இச் சகல கடமைகளையும் ஆற்றுவதில் ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருக்கலாமெனவும்,
- பணிப்பாளர் நாயகம் பதவியை அங்கீகரித்த போது அப் பதவிக்கு ஏற்புடைய சம்பளக் குறியீடு, கடமைப் பட்டியல் என்பன துல்லியமாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும்,
- அதன் பிரகாரம் முகாமைத்துவ திணைக்களம் மேற்படி பணிப்பாளர் நாயகம் பதவியை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நிறுவனத்திற்குரிய மேற்படி பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிருவாக அலுவலர் பதவிகளுக்கு நிறுவன ஒழுங்கமைப்பில் உரித்தான இடம், கடமை நடவடிக்கைகள் மற்றும் பொறுப்புகளின் தன்மை ஆகியவற்றுக்கிடையே

காணப்படும் நடைமுறை ரீதியான வித்தியாசம் தொடர்பாக குழு மேலும் கவனம் செலுத்தியது.

இதன் போது கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர்,

- அமைச்சு செயலாளரினால் நிறுவனத்தின் பிரதம கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் ஒட்டுமொத்த நிருவாக நடவடிக்கைகளும் மேற்பார்வை செய்யப்பட்டு நிருவகிக்கப்படுகின்றதெனவும்,
- பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தின் கணக்கீட்டு அலுவலராக பணியாற்றுகின்றாரெனவும்,
- பணிப்பாளர் நாயகம் ஆளுகைச் சபையினால் நியமிக்கப்படுகின்றாரெனவும்,
- இருந்தபோதிலும், சில வேளைகளில் அமைச்சரவையினாலும் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும்,
- தற்போதைய பணிப்பாளர் நாயகம் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

## 04. பணிகள் தொடர்பாக கணக்காய்வொன்றை மேற்கொள்ளுதல்

அரச நிறுவனங்களின் பிரதான பதவிகள் இரட்டிப்பாதல் தொடர்பில் குழு விரிவாக கலந்துரையாடியதுடன் அரச நிறுவனங்களில் காணப்படுகின்ற பிரதான பதவிகள்/நிறைவேற்றுப் பதவிகளின் கடமையின் தன்மை தொடர்பில் தீர்மானிப்பதற்கும், அப்பதவிகளின் தேவையை அடையாளம் காண்பதற்கும், பதவிகளின் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கூறலின் தன்மையை அடையாளம் காண்பதற்கும், பதவிகள் இரட்டிப்பாவதைத் தடுப்பதற்குமாக முறையான பணிக் கணக்காய்வொன்றை மேற்கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

### விதப்புரைகள்

i. அரச துறை நிறுவனத்தின் பணிகள் குறித்து முறையான கணக்காய்வு நடத்தி, அது குறித்த அறிக்கையை குழுவிடம் சமர்ப்பித்தல்.

### விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்

பணிப்பாளர் நாயகம் – அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்

### தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

## 05. ஆளுகைச் சபைக் கூட்டங்கள்

மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் பிரகாரம் சட்டத்தின் நிதி தொடர்பான அதிகாரங்கள் காணப்படுகின்ற, நிதியத்தின் பெயரில் சகல விதிகளையும் இயற்றுவதற்கு அதிகாரத்தைக் கொண்டுள்ள ஆளுகைச் சபை கூடுவதில் குறைபாடு அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், பணி நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து ஆளுகைச் சபை அங்கீகாரத்தை பெறும் செயன்முறை, அதாவது காப்பங்கீகாரத்துடன் செயற்படும் நடைமுறை ஆரம்பத்திலிருந்தே நீண்ட காலமாக இடம்பெற்றுள்ளதாகவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதன் பிரகாரம், நிதியத்தின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு ஆளுகைச் சபைக்கு அளிக்கப்பட்டுள்ள போதிலும், நிறுவனத்தின் நோக்கங்களை பயனுள்ளதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் அடைவதற்கு காலக்கிரமத்துக்கேற்ப கூட்டங்கள் நடாத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வுக்குரிய காலப்பகுதியான 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்டுள்ள ஆளுகைச் சபை கூட்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறு காணப்பட்டதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பாக அமைந்தது.

| ஆண்டு | ஆளுகைச் சபை கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2015 | 1 |
| 2016 | 3 |
| 2017 | 6 |
| 2018 | 2 |
| 2019 | 1 |
| **மொத்தம்** | **13** |

## 06. "சிசு தஹம் செவன" நாடளாவிய நிகழ்ச்சித்திட்டம்

பொருளாதாரச் சிரமங்களைக் கொண்டுள்ள அற நெறிப் பாடசாலைகளுக்கு நிரந்தர கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு இத் திட்டத்தின் கீழ் பெருமளவு மூலதனம் செலவிடப்பட்டுள்ளதெனவும், கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு 03 மில்லியன் ரூபாய் வீதம் ஏற்புடைய தொகையில் 75% ஆரம்பத்திலேயே வழங்கப்பட்டு இதன் கீழ் 368 கட்டடங்களை

நிர்மாணிப்பதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும், இதன் முழுப் பெறுமதியின் பிரகாரம் அது அமைச்சரவையினால் நியமிக்கப்படுகின்ற பெறுகைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டியுள்ள போதிலும், அவ்வாறு செய்யப்படவில்லை எனவும், இதற்கு ஆளுகைச் சபையின் அங்கீகாரம் கிடைக்கவில்லை எனவும் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இவ் வேலைத்திட்டம் உள்ளடக்கப்படவில்லை எனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த மத்திய கலாசார நிதியத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம்,

- 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு ஆளுகைச் சபைக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும்,
- சபையின் தலைவராக கௌரவ பிரதம அமைச்சரினால் ஆளுகைச் சபை கூட்டங்கள் கூட்டப்படுவதாகவும்,
- 1980 ஆம் ஆண்டு தொடக்கம் அது அவ்வாறே இடம்பெற்றுள்ளதாகவும்,
- அதன் பிரகாரம் பிரதம அமைச்சரினால் 2019 மார்ச் மாதம் 15 ஆந் திகதியன்று அலரி மாளிகையில் ஆளுகைச் சபை கூட்டம் கூட்டப்பட்டதெனவும்,
- 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஆவணத்துக்கு ஆளுகைச் சபை பத்திரம் தயாரிக்கப்பட்டதாகவும்,
- அதில் 8 உறுப்பினர்கள் கலந்துகொண்டதாகவும் அதன் போது வரவு செலவுத் திட்ட ஆவணத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதெனவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மத்திய கலாசார நிதியத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

i. 208(6) ஆளுகைச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மத்திய கலாசார நிதியத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் “சிசு தஹம் செவன” கருத்திட்டத்திற்கான மதிப்பீடும் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, அதன் பொருட்டு 2019 மார்ச் மாதம் 15 ஆந் திகதியன்று சபையின் கீழ் நடைபெற்ற ஆளுகைச் சபை

கூட்டத்தில் அங்கீகாரம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 208.6.1 ஆம் இலக்க ஆளுகைச் சபை பத்திரத்தின் மூலம் 5250 மில்லியன் ரூபாய்க்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதாகவும்,

ii. மேற்படி ஆளுகைச் சபை பத்திரமும் வரவு செலவுத் திட்ட ஆவணமும் ஆளுகைச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பத்திரத்துக்கு மேலதிகமாக "சிசு தஹம் செவன நாடளாவிய நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் அறநெறி பாடசாலைகளுக்கு நிரந்தர கட்டடங்களை அமைப்பதற்காக கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள கட்டுமான அரச நிறுவனங்கள் மூலம் கட்டடமொன்றுக்கு 03 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டு அவற்றை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் கோரி 208.57 ஆம் இலக்க ஆளுகைச் சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதோடு அதற்கும் ஆளுகைச் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டதாகவும்,

iii. மேற்படி கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களிடமிருந்து (பொறியியற் கூட்டுத்தாபனம், SPNCC) விலைமனு கோருமாறு அறிவிக்கப்பட்டு தேசிய கட்டடத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட, 208.57.01, 208 ஆம் இலக்க ஆளுகைச் சபை பத்திரம் மற்றும் 787 ஆம் இலக்க நிதி ஒழுங்குவிதியின் பிரகாரம் பெறுகை நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படாது கட்டுமானப் பணிகள் தேசிய கட்டடத் திணைக்களத்துக்கு வழங்கப்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதால் மேற்படி கட்டுமானப் பணிகளை அமைச்சின் கீழுள்ள அரச நிறுவனங்களிடம் விலைமனு கோரி நிறுவனங்களைத் தெரிவு செய்யுமாறு தான் தேசிய கட்டடத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தி மேற்படி திணைக்களத்துக்கு அளித்ததாகவும்,

iv. அதன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டில் "சிசு தஹம் செவன" எனும் பெயரில் நாடளாவிய ரீதியில் அறநெறி பாடசாலைக் கட்டடங்களை அமைத்து அன்பளிப்புச் செய்வதற்கு இத் திட்டத்தை செயற்படுத்தியதாகவும் திரு. பர்னார்ட் வசந்த தெரிவித்தார். ஒரே

கட்டட திட்டத்துக்கமைய 368 அறநெறி பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டதோடு, மேற்படி திட்டத்தின் முழு மதிப்பீட்டுப் பெறுமதி 1,140 மில்லியன் ரூபாய் ஆகும். கட்டடமொன்றுக்கான மதிப்பீட்டுப் பெறுமதி 03 மில்லியன் எனவும், தேசிய கட்டடத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் விலைமனு கோரி அதற்கு 45 பெறுகைத் தீர்மானங்களை குறிப்பிட்டுள்ளதால் இத் திட்டத்துக்கு விலைமனுத் தீர்மானங்கள் உள்ளதோடு மேற்படி விலைமனுத் தீர்மானங்கள் தேசிய கட்டடத் திணைக்களத்திடம் உள்ளதெனவும்,

v. 2019 யூன் மாதம் 06 ஆந் திகதியன்று மேலுமொரு அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அமைச்சின் கட்டுமானங்களை அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களிடமிருந்து விலைமனு கோராது மேற்கொள்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் கிடைத்துள்ளதாகவும் மேற்படி அமைச்சரவை ஒப்புதலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தான் பொறியியற் கூட்டுத்தாபனத்துக்கு கட்டுமானப் பணிகளைஅளித்ததாகவும் குறிப்பிட்டார்.

**07. <u>அங்கீகாரமின்றி 10,500 மில்லியன் ரூபாய் தொகை யன்படுத்தியமை</u>**

மத்திய கலாசார நிதியத்திலிருந்து 10,500 மில்லியன் ரூபாய் பணிப்பாளர் சபையின் உரிய அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளமை தொடர்பாக குழுவினால் வினவப்பட்டதோடு, அவ்வாறு இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பாகவும் அது சம்பந்தமாக உள்ளக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றதா என்பது தொடர்பாகவும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அவதானிப்புகளுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற உள்ளக கணக்காய்வு அறிக்கையின் மூலம் தற்போது கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம், “சசுனோதய” நிகழ்ச்சித்திட்டத்திற்கு 481 மில்லியன் ரூபாய், “சிசு தஹம் செவன” நிகழ்ச்சித்திட்டத்திற்கு 786 மில்லியன் ரூபாய், இதர செயற்பாடுகளுக்கு (காசோலைகள் பகிர்ந்தளிப்பு என குறிப்பிடப்பட்டுள்ள) 31 மில்லியன் ரூபாய் என முழுச் செலவான 1298 மில்லியன் ரூபாய் மூலதனச் செலவுகள் தொடர்பாக மாத்திரம் தற்பொழுது தகவல்கள்

கிடைத்துள்ளதாகவும், மேற்படி உள்ளக விசாரணை இதுவரை நிறைவு பெறவில்லை எனவும் தோராயமாக மாதமொன்றுக்கு மீண்டுவரும் செலவாக (ஊதியங்களும் செலுத்துகைகளும்) சுமார் 166 மில்லியன் ரூபாய் செலவாவதாகவும் இந்த ஆண்டின் சனவரி மாதம் தொடக்கம் (2022 சனவரி மாதம் தொடக்கம் அக்டோபர் வரையான 10 மாதங்களுக்கு) 1793 மில்லியன் ரூபாய் செலவாகியுள்ளதாகவும், அபிவிருத்திப் பணிகள் மிகக் குறைவாக இடம்பெறும் இவ்வாறானதொரு சூழலில் மேற்கொள்ளப்பட்டுள்ள செலவு என்பதால் சகல மூலதன மற்றும் மீண்டுவரும் செலவுகளுக்குமான மொத்தச் செலவினமாக 10,500 மில்லியன் ரூபாய் அமையலாம் எனவும் பிரதான கணக்கீட்டு அலுவலர் குறிப்பிட்டார்.

இது குறித்து அமைச்சின் செயலாளர் பின்வரும் விடயங்களைத் தெரிவித்தார்,

- 2020ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஒய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி திரு.காமினி சரத் எதிரிசிங்க, ஓய்வுபெற்ற அமைச்சுச் செயலாளர் திரு.கோட்டாபய ஜயரத்ன, சிரேஷ்ட சட்டத்தரணி திரு.ஹரிகுப்தா ரோஹணதீர ஆகிய மூன்று உறுப்பினர்களைக் கொண்டமைந்த குழுவினால் இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- மேற்குறிப்பிட்ட குழு அறிக்கைக்கு ஏற்ப, 2016 - 2019 வரையிலான 04 வருடங்களுக்குரிய ஒட்டுமொத்த செலவினமாகிய ரூ.10,500 மில்லியனில் பின்வரும் செலவுகள் உள்ளடங்கியுள்ளன.
  - மேற்படி குழு அறிக்கைக்கு ஏற்ப "**சிசு தஹம் செவன**" 753 மில்லியன் ரூபா,
  - நிலையான வைப்பு மீளப் பெறல் 2608 மில்லியன் ரூபா,
  - சுற்றுலா அனுமதிச் சீட்டுக்களின் டொலர் வருமானத்தை ரூபாவிற்கு மாற்றியதன் மூலம் ஏற்பட்ட நட்டம் 48 மில்லியன் ரூபா,
  - தொல்பொருளியல் நம்பிக்கைப் பொறுப்புக்கான பங்களிப்புத் தொகையை செலுத்தாது, சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை 2266 மில்லியன் ரூபா,
  - "அப்பே கம" கருத்திட்டத்தில் ஆதன கையளிப்பின்போது ஏற்பட்டுள்ள நட்டம் 08 மில்லியன் ரூபா,

- முறையான அங்கீகாரமின்றி மத்திய கலாசார நிதியத்திலிருந்து கலாசார மற்றும் மதங்களுக்கான உதவிகள் மற்றும் அளிப்புகளாக 2316 மில்லியன் ரூபா,
- அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்டொகுதியினரை விஞ்சிய ஆட்சேர்ப்புகளுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக செலுத்தப்பட்டுள்ள மொத்த நிதித்தொகை 3060 மில்லியன் ரூபா.

குழுவின் கோரிக்கைக்கு ஏற்ப இது தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள "15/28/2018 ஆம் இலக்கமுடைய கோப்பு தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் புலனாய்வுச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு போதமான விடயங்கள் வெளிப்படாமையினால் இது தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாக" தமக்கு அறிவித்துள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் குறிப்பிட்ட கடிதத்தை மேற்கோள் காட்டியவாறு குழுவுக்குத் தெரிவித்தார்.

### 08. <u>சட்ட ஏற்பாடுகள் மற்றும் நிருவாக சபையின் ஆக்க அமைவு</u>

1980ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் மூலம் அப்போது இலங்கையின் கலாசார மற்றும் மத விழுமியங்களின் மேம்பாட்டுக்காக நிதி வழங்கும் பொருட்டு மத்திய கலாசார நிதியம் 1980ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டுள்ளது. இதனை இற்றைப்படுத்த வேண்டுமென்பது குழுவின் கருத்தாக அமைந்ததுடன், இச்சட்டத்தை திருத்துவதற்கு தற்போது திட்டமிடப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

### 09. <u>209 ஆவது நிர்வாக சபைக் கூட்டம்</u>

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் விசேட அறிக்கைக்கமைவாக 209 ஆவது நிர்வாக சபைக் கூட்டம் பௌதீக ரீதியாக இடம்பெறவில்லை எனவும், நிர்வாக சபையிடம் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த நிர்வாக சபைப் பத்திரம் தனித்தனியாக நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும், 209 ஆது நிர்வாக சபைக் கூட்டத்திற்கான காப்பு அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 238

பத்திரங்களுக்கான முன்மொழிவுகள், நிர்வாக சபை அங்கத்தவர்களால் தனித்தனியாக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி அங்கீகரித்தலானது பௌதீக ரீதியில் கூடிய நிர்வாக சபையொன்றினூடாக மேற்கொள்ளப்படாமை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்படுதல்.

அதற்கமைவாக, நிர்வாக சபைப் பத்திர இல. 209.228.1இன் விதப்புரையாகிய "இலங்கை வங்கியின் கொள்ளுப்பிட்டி கிளையில் 2019 ஆம் ஆண்டு 1,002.75 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளதாலும் 1,787 மில்லியன் ரூபா பெறுமதியான மேலதிக முதலீடுகளை மீளப் பெறுவதற்குரிய" நிர்வாக சபைப் பத்திரம் அங்கீகரிக்கப்படாதிருந்தமையாலும் 2019 ஆம் ஆண்டிற்கான அனைத்து முன்மொழிவுகளும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அங்கீகரிக்கப்படாதிருந்தமை தொடர்பிலும் குழு அவதானித்தது.

மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டு மத்திய கலாசார நிதியத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணத்தை மீளப்பெறுதல் ஆனது 1521%ம் வரை அதிகரித்துள்ளமை சிக்கலானதென்பதை குழு அவதானித்ததோடு நிதியத்தில் காணப்படுகின்ற வருமானம், செலவினத்தை ஈடுசெய்வதற்குப் போதுமானதாக இருக்கின்ற போதிலும் இருக்கின்ற முதலீடுகள் இவ்வாறு உயர் பெறுமதியில் விடுவித்துக்கொள்ளப்படுதல் தொடர்பில் குழு வினவியது.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

i. பின்வரும் விடயங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றை குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
   - மத்திய கலாசார நிதியத்தின் 209 ஆவது நிர்வாக சபைக் கூட்டத்திற்கு அப்போதைய பிரதம அமைச்சராக இருந்த தற்போதைய சனாதிபதி கையொப்பம் இடாமை.
   - அப்போதைய பிரதம அமைச்சரின் செயலாளராக இருந்த தற்போதைய சனாதிபதியின் செயலாளரின் கையொப்பம் அதில் இடப்படாமை.
   - 209 ஆவது நிர்வாக சபைக் கூட்டம் உண்மையில் இடம்பெறாமை தொடர்பில் சனாதிபதியின் செயலாளராக அவரது கருத்து.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

சனாதிபதியின் செயலாளர்

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

சனாதிபதியின் செயலாளரின் PS/SB/Misc/(2022)/01 ஆம் இலக்க மற்றும் 2022.12.09 ஆந் திகதிய கடிதம் மூலமாக பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**10. <u>நிதியத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதியை மீளப் பெறுதல்</u>**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கையின் பிரகாரம், 2019ஆம் ஆண்டில் இலங்கை வங்கியின் கொள்ளுப்பிட்டி கிளையில் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூ. 1,002.75 நிதித்தொகையில் ரூ.1,787 மில்லியன் மேலதிக முதலீடுகள் மீள் பெறப்பட்டுள்ளதுடன், அது நிருவாக சபையின் காப்பு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. நிதியத்துக்குச் சொந்தமான பணத்தை முதலீடு செய்வதும் முதலீடு செய்யப்பட்ட பணத்தை மீளப் பெறுவதும் நிருவாக சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதால், குழுவானது இதற்கான காரணங்களை வினவியது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த, மத்திய கலாசார நிதியத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம், 2019ஆம் ஆண்டுக்கான நிதியத்தின் அனுமதிச் சீட்டு வருமானமானது ரூ.4,450 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளபோதிலும், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் இடம்பெற்ற குறிப்பிட்ட வருடத்தின் உண்மையான வருமானம் ரூ.3.330 மில்லியன் ஆகக் குறைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

நிதியத்துக்கு உரித்தான பணத்தை முதலீடு செய்வதற்கும், சபையின் விருப்பத்தின் பேரில் குறிப்பிட்ட முதலீட்டை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும், அதனை மீள்முதலீடு செய்வதற்கும் மாற்றுவதற்குமான இயலுமை நிதியத்துக்கு உள்ளதாக சட்டத்தின் 4(ஊ) உப பிரிவில் காட்டப்பட்டுள்ளதாகவும், இதற்கமைய, நிதியத்தின் முதலீட்டை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான அதிகாரம் தனிநபருக்கன்றி நிருவாக சபைக்கே இருப்பதாகவும் இதன்போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார்.

இச்சட்டத்தின் 06வது பிரிவின் பிரகாரம், இந்நிதியத்தின் கணக்கினை இலங்கை வங்கியில் பேணிச் செல்ல வேண்டுமெனவும், இக்கணக்கிற்கான மூன்று நடைமுறைக் கணக்குகள் உள்ளதோடு, அனுமதிச் சீட்டு உள்ளிட்ட ஏனைய சகல வருமானங்களும் குறிப்பிட்ட கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், வருமானம் அதிகமான மாதங்களில் இந்நிதியானது சுயமாகவே இலங்கை வங்கியின் நிலையான வைப்புக் கணக்குக்கு மாறுவதாகவும், வருமானம் குறைந்த மாதங்களில் பணியாட்டொகுதியினருக்கு சம்பளம் செலுத்துதல் போன்ற செலவுகளை நிவர்த்தி செய்வதற்காக பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இது முதலீடாக அடையாளம் காணப்படாத காசுப்பாய்ச்சல் முகாமைத்துவ செயன்முறையாக இருப்பதாகவும் திரு. பர்னாட் வசந்த அவர்கள்தெரிவித்தார்.

இதன்போது அமைச்சின் செயலாளர் பின்வருமாறு குழுவை விழிப்பூட்டினார்.

**<u>சசுநோதய நிகழ்ச்சித்திட்டம்</u>**

- *சசுநோதய* நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நன்கொடை வழங்கப்பட்டுள்ள வழிபாட்டு நிலையங்களின் எண்ணிக்கை -1045
- வழங்கப்பட்டுள்ள மொத்த நன்கொடை - 481 மில்லியன் ரூபா
- நோக்கம் உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள பணிகள் - 1034
- வழங்கப்பட்டுள்ள பணத்துக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏனைய பணிகள் - 10
  ( குறிப்பிட்ட பணத்தொகை - 04 மில்லியன் ரூபா)
- நிறைவேற்றப்படாதுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை - 01

**<u>சிசு தஹம் செவன நிகழ்ச்சித்திட்டம்</u>**

- *சிசு தஹம் செவன* நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வருமாறு நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தேசிய நிர்மாணத் திணைக்களம் | 45 கருத்திட்டங்கள் |
| அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 86 கருத்திட்டங்கள் (முதலாம் கட்டம் )<br>26 கருத்திட்டங்கள் (இரண்டாம் கட்டம்) |

| | |
|---|---|
| அரச நிர்மாணக் கூட்டுத்தாபனம் | 122 கருத்திட்டங்கள் (முதலாம் கட்டம்)<br>88 கருத்திட்டங்கள் (இரண்டாம் கட்டம்) |
| மொத்த கருத்திட்டங்கள் | 367 கருத்திட்டங்கள் |

- இதன் பெறுமதி அண்ணளவாக சுமார் ரூ.786 மில்லியன் என்பதுடன், இக்கருத்திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு அமைகின்றது.

| | |
|---|---|
| முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 198 |
| பூர்த்தி செய்யப்படாதுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 149 |
| ஆரம்பிக்கப்படாதுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை | 20 |

## 11. <u>காசோலைகளை வழங்குதல்</u>

*சிசு தஹம் செவன* மற்றும் *சசுநோதய* நிகழ்ச்சித்திட்டங்களுக்கு காசோலைகள் வழங்கப்படவில்லை என்பதுடன், பிக்குமார் உயிரிழக்கையில் தகனக் கிரியைகளுக்காக பிரதேச செயலாளரை உள்ளிட்ட கிராமியக் குழுவொன்றுக்கு வழங்குவதற்காக குறிப்பிட்ட பிரதேசங்களின் பிரதேச செயலாளர்களின் பதவிப் பெயருக்கு சுமார் 23 காசோலைகள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் முன்னாள் பணிப்பாளர் தெரிவித்தார்.

## 12. <u>ஊழியர்களை ஆட்சேர்த்தலும் நிருவகித்தலும்</u>

இதுவரை மத்திய கலாசார நிதியத்துக்கான பணியாட்குழுவினராக 2011ஆம் ஆண்டில் 1657 பணியாளர்களும், 2011 ஆம் ஆண்டில் 14 பணியாளர்களும், 2017இல் 1338 பணியாளர்களும் என்ற வகையில் மொத்தம் 3008 பணியாளர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பிரதிநிதி தெரிவித்தார்.

அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணக்கை 3008ஆகக் காணப்படினும், இருக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கை 2199 எனவும்,

ஆட்சேர்ப்புகள் நிரந்தர அடிப்படையில் 2066, அமய அடிப்படையில் 47, ஒப்பந்த அடிப்படையில் 86 என்றவாறு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினை விட குறைந்த எண்ணிக்கையான உத்தியோகத்தர்களே உள்ளார்கள் என பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் 1 மற்றும் 2 இற்கு அமைய புதிய பதவிகளை உருவாக்குதல் அல்லது ஊழியர்களின் எண்ணிக்கையினை அதிகரித்தலானது முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்பாக இருப்பினும், இந்த ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்காது பணிப்பாளர் (மத அலுவல்கள்), பணிப்பாளர் (திட்டமிடல்), வேலைப் பொறியியலாளர், கருத்திட்ட ஒருங்கிணைப்புப் பணிப்பாளர், பரிசோதக அலுவலர் போன்ற புதிய பதவிகள் 2017ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், நிதியத்தின் அல்லது திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்குழுவினருக்குள் உள்ளடங்காத 2,271 காவலாளிகள், 1,130 தொழிலாளர்கள் உட்பட 3,401 ஊழியர்களை தொல்பொருளியல் திணைக்களத்துக்கு ஆட்சேர்ப்பதற்காக நிருவாக சபை அங்கீகாரம் வழங்கியிருந்ததாக தமது கணக்காய்வு அறிக்கையினை மேற்கோள் காட்டியவாறு இதன்போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி தெரிவித்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர்,

- முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பணியாட்டொகுதிக்கான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும்,
- முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களை சில கட்டங்களின் கீழ் (2020.01.01 முதல்) சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,
- இதன்போது 2020.01.01 ஆம் திகதியில் 648, 2020.02.13 ஆம் திகதியில் 347, 2020.02.15 ஆந் திகதியில் 39, 2020.03.28 ஆம் திகதியில் 13, 2020.04.15 ஆம் திகதியில் 15 மற்றும் 2020.04.30 ஆம் திகதியில் 391 என மிகை ஊழியர்களின் சேவையை

முடிவுறுத்துவதன் மூலம் 1440 ஊழியர்களை குறைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## 13. <u>மத்திய கலாசார நிதியத்தின் வைப்பீடுகள்</u>

மேற்படி விடயம் தொடர்பில் குழு கவனம் செலுத்தியதுடன், மத்திய கலாசார நிதியத்தின் வைப்பீடுகளாக 2019 இல் 05 பில்லியன் ரூபாவுக்கு அதிகமான பணமும் 8.9 மில்லியன் அமெரிக்க டொலர்களும் (3 பில்லியன் ரூபா) காணப்பட்டதாகவும், நிதியை எதிர்காலத்தில் சுமார் 08 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துக்கொள்வதற்காக முதலீடு செய்துள்ளதாகவும், தற்போது 8.5 பில்லியன் ரூபா வைப்பீடுகள் இருப்பதாகவும் இதன்போது அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரினால் தெரிவிக்கப்பட்டது.

இங்கு, பிரதம கணக்கீட்டு அலுவலரான அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிடுகையில், இந்த விசேட கணக்காய்வு அறிக்கை கிடைத்த பின்னர் முதலீட்டுக் குழுவொன்றை நியமித்து நிதிப்பாய்ச்சல் முகாமைத்துவமாக நிலையான வைப்புக் கணக்கில் சுயமாக வைப்பில் சேரும் பணத்தை இன்றைய முதலீட்டு வட்டி வீதங்களுக்கு ஏற்ப இற்றைப்படுத்தி புதிய கணக்குகளாக மாற்றியமைத்ததாகவும், 5000 மில்லியன் ரூபாவை புறம்பாக வருடாந்தம் முதலீடு செய்ததாகவும், எஞ்சிய தொகையானது பகுதிகளாக மாதாந்தச் செலவினமாகிய சுமார் 120 மில்லியன் ரூபாவை பெற்றுக்கொள்ளத்தக்கதாக மாதாந்த வருமானம் கிடைக்கக்கூடிய வகையில் முதலீடு செய்ததாகவும் தெரிவித்தார்.

## 14. <u>நிதியத்தின் செலவின முன்னுரிமை</u>

மத்திய கலாசார நிதியத்திற்கு கிடைக்கும் வருமானம் நுழைவுச்சீட்டு குழுவினால் ஈட்டப்பட்டுள்ளதென இனங்கண்ட குழு, இந்த நிதியானது தொல்பொருளியல் மற்றும் கலாசார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக அடிப்படையில் முதலீடு செய்யப்பட வேண்டுமெனவும், அது சிறந்த முறையில் மேற்கொள்ளப்படவில்லையெனவும், இந்த நிதியத்தின் நிதி செலவிடப்படும் போது முன்னுரிமை அடிப்படையில் நிதியத்திற்கு வருமானம் ஈட்டித்தரும் வழிகளை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு பயன்படுத்தப்படவில்லையெனவும் சுட்டிக்காட்டியது.

ஏனைய அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு கூடுதலான நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதெனவும், இதன்போது வருமானம் ஈட்டும் வழிகளை

அபிவிருத்தி செய்வதற்கு வழங்க வேண்டிய முன்னுரிமை வழங்கப்படவில்லை எனவும், இப்பணி ஓரளவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இதற்கு முன்னுரிமை வழங்கி கூடுதலாக நிதியை ஒதுக்கி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமெனவும் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார்.

## 15. <u>விசேட கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய உள்ளக புலனாய்வு</u>

நிர்வாக சட்டக் கோவையின் 29 ஆவது பிரிவிற்கு அமைவாக விசேட கணக்காய்வு அறிக்கையில் எழுப்பப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் உள்ளக கணக்காய்வு விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்ததோடு குறித்த விடயம் விசாரணைக்கு உள்ளாகியிருப்பதால் குறிப்பிட்ட விசாரணை நடவடிக்கைகள் நிறைவடையும் வரையில் தமது அபிப்பிராயத்தை தெரிவிக்க முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

i. ஒரு மாத காலத்திற்குள் குறித்த விசாரணை நடவடிக்கைகளை நிறைவு செய்து அது பற்றிய விஷேட அறிக்கையொன்றை குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
தலைவர் - மத்திய கலாசார நிதியம்

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 16. <u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பரிந்துரைகள்</u>

மத்திய கலாசார நிதியத்தின் செயற்பாடு குறித்த விசேட கணக்காய்வு அறிக்கையின்படி, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பரிந்துரைகள் பின்வருமாறு,

I. அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் நிதியத்தின் நிர்வாக சபையை நியமிப்பதற்காக நிதியச் சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்

என்பதோடு அதனூடாக நிதியத்தின் கூட்டங்களை நடத்துதல் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களை துரிதப்படுத்தல்.

II. நிதியத்தின் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியதாக அதன் வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் யதார்த்தபூர்வமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் இலக்குகளை அடைவதற்குச் செயலாற்ற வேண்டும்.

III. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதியத்தின் செயலாற்றுகை தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பிலும் சட்ட விதிகள் தயாரிக்கப்படுவதை விரைவுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

IV. நிதியத்தின் மொத்த செலவினத்தில் ஊழியர்களுக்கான செலவுகளின் உயர் சதவீதம் உள்ளடங்குதல் மற்றும் பாதுகாப்பு போன்ற செயலாற்றுகை நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு இல்லாமை தொடர்பில் அதிக கவனம் செலுத்தி பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

V. நிதியச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி நுழைவுச் சீட்டு கட்டணங்களை அறவிடுதல் மற்றும் முதலீடுசெய்தல் மற்றும் முதலீடு செய்த பணத்தை மீளப் பெறல் இயன்றளவில் முன்கூட்டிய அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

VI. செலுத்தல்களின் போது நிதிப் பிரமாணங்களுக்கு ஏற்பவும் ஆட்சேர்ப்பின் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை மற்றும் பொது நிர்வாக, முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் செயற்பட வேண்டும்.

VII. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டங்களைத் திருத்துதல், தேவைகளை இனங்கண்டு நிதியத்தின் பணியாட்டொகுதிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் சிரேஸ்ட மட்டத்திற்கு தகுதியான பதவியணியினரை நிரந்தர

அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

VIII. நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் ஆக்க அமைவுக்கு மாறாக பிற நிறுவனங்களின் சார்பாக சேவைகளை வழங்குவதற்கு நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் பேரில் பதவியணியினரை பொருத்தமற்ற முறையில் ஆட்சேர்ப்புச் செய்வதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

IX. செலவினத் தேவைகளை விஞ்சுகின்றவாறு முதலீடுகள் மீளப்பெறுவதை தவிர்த்தல் மற்றும் அதன்படி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

X. இணையம் மூலம் இலத்திரனியல் நுழைவுச்சீட்டுகளை வழங்குதல் போன்ற புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

XI. நிதியத்தின் கீழ் அனைத்து இணையத்தளங்களையும் உள்ளடக்கிய வகையில் இலத்திரனியல் நுழைவுச்சீட்டு முறையை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் கலாசார மற்றும் வழிபாட்டுத் தலங்களிலிருந்து வருமானம் ஈட்ட அதற்குத் தகுதியான பணியாளர்களை ஈடுபடுத்துதல்.

XII. நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்கள் மற்றும் மதங்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படும் வகையில் தற்போதைய மற்றும் உண்மையான தேவைகளை கருத்தில் கொண்டு வெளிப்படைத்தன்மையுடன் நிதி நன்கொடைகள்/ஒதுக்கீடுகள் தொடர்பில் முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு அதன் நிதி மதிப்பை நிர்ணயம் செய்வது அதிகாரம்வாய்ந்த தரப்பினரால் மேற்கொள்ளப்படுதலும் வேண்டும்.

XIII. குறிப்பிட்ட நிர்மாணக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து பின்னாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நெருக்கமான கண்காணிப்புடன் பயனாளி நிறுவனங்கள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.

XIV. அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் உரிய வழிகாட்டல்களின்படி மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பேணல் தொடர்பான நிர்மாணப் பணிகள் தொல்பொருள்

ஆணையாளரின் அங்கீகாரம் மற்றும் பிற இணைக்கச் சான்றிதழ்களுடன் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

XV. அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்படி செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.

XVI. நிதிப் பிரமாணங்களின்படி செலுத்துபவருக்கு காசோலைகளை கையளிப்பதற்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள முற்பண கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

i. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் விதப்புரைகள் பற்றி விஷேட கவனம் செலுத்தி தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

தலைவர் - மத்திய கலாசார நிதியம்

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

மத்திய கலாசார நிதியத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் CCF/IA/COPE/2023 ஆம் இலக்க மற்றும் 2023.03.02 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் மத்திய கலாசார நிதியத்தின் செயற்பாடு குறித்து முன்னேற்ற மீளாய்வு அறிக்கையொன்று குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

*(கடற்றொழில் அமைச்சு)*

**விசாரணைத் திகதி** : 2022.11.25

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

## 01. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களும் பணிகளும்

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கடற்றொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் இரண்டாவது(2) பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2011. 06.30 ஆம் திகதிய 1712/21ஆம் இலக்க அரச அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிக்கையினால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள கட்டளைகளுக்கமைய கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு அளிக்கப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் பணிகள் குறித்து குழுவானது அதன் கவனத்தை செலுத்தியது.

இதன்போது கூட்டுத்தாபனத்தின் தலைவர் நிறுவனத்தின் தற்போதைய நிலமை குறித்து தெரிவிக்கையில் நிறுவனத்தின் நிதி நிலைமை திருப்தியான மட்டத்தில் இல்லை எனவும், நிறுவனத்துக்காக கடந்த காலப்பகுதியில் அரசாங்கம் நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார் எனவே, மாதாந்த மீன் வியாபாரத்தை 500 தொன் வரையில் உயர்த்துவதற்குஎதிர்பார்ப்பதாகவும் அதன் பின்னர் நிறுவனத்தின் நிதி நிலைமை முறையானதாக அமையுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார் .

மீன் விற்பனை மாத்திரமன்றி கடற்றொழில் நடவடிக்கைகள் மீன்களைப் பதனிடுதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் மீன் விற்பனை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் கூட்டு வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதனால் குறிப்பிட்ட நோக்கங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் குழு மேலும் அதன் கவனத்தை செலுத்தியதுடன் முழு நாடுமே கடலினால் சூழப்பட்டுள்ள போதிலும் மீன் வளத்தை ஒன்று திரட்டுவது தொடர்பில் அடிப்படை திட்டமொன்று இல்லாதிருப்பதையிட்டும் கணக்காய்வாளரினால் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது கூட்டுத்தானத்தின் தலைவர் கூறுகையில், வளப் பற்றாக்குறை காரணமாக கடற்றொழில் கூட்டுத்தாபனமானது தற்போது கடற்றொழிலில் ஈடுபடுவதில்லை என்ற போதிலும் பேலியகொடை உள்ளிட்ட மீன் விற்பனை நிலையங்களிலிருந்து நேரடி மற்றும் மறைமுக கொள்வனவுகளை

மேற்கொள்கின்ற அதேவேளைஎட்டு கொள்வனவு நிலையங்களின் ஊடாக கொள்வனவு மற்றும் விற்பனையினை மேற்கொள்வதாகத் தெரிவித்தார் . கடனைத் தீர்க்காமையினால் சில மீன்பிடித் துறைமுகங்கள் கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு மீனை வழங்குவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார் .

மேலும் மீன் பகிர்ந்தளித்தல் மீது குழுவின் கவனம் செலுத்தப்பட்டதுடன் கடற்றொழில் கூட்டுத்தாபனத்திடஉறைவிப்பான் டிரக் வண்டிகள் 50 காணப்படுவதுடன் இதில் 43 தொழிற்படும் நிலையில் காணப்படுவதாகவும், பெரும்பாலான உறைவிப்பான் டிரக் வண்டிகளில் குளிரூட்டி முறைமைகள் தேய்வடைந்து காணப்படுவதாகவும் ஆகையால் உறைவிப்பான் டிரக் வண்டிகளில் மீன்களின் தரத்தை பேணுவதற்காக ஐஸ் பயன்படுத்துவதாகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார் .

## 02. <u>நிறுவனத்தை மறுசீரமைத்தல்</u>

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை அரச தனியார் பங்குடமையில் இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதன் பொருட்டு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு தரப்பினருடன் இணைந்த வர்த்தகத்தை மேற்கொள்வதற்காக 2016.08.23ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மாணங்களை நடைமுறைப்படுத்துவதிலான தற்போதைய நிலைமை குறித்து குழு கவனம் செலுத்தியது.

இதன்போது அமைச்சின் செயலாளர் குறிப்பிட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மறுசீரமைப்புச் செயன்முறை தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் தேசிய அபிவிருத்தி வங்கியுடன்(NDB) பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் அது வெற்றியளிக்கவில்லை எனவும் அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) இதன்போது தெரிவித்தார்.

அமைச்சரவையின் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாவிட்டாலும் நட்டத்தில் இயங்கிய சில ஐஸ் கைத்தொழிற்சாலைகளுக்கான விருப்பம் தெரிவித்தல் EOIs (Expression of interest) கோரப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார் .

**விதப்புரைகள்**

i. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 2016.08.23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான தற்போதைய நிலைமை குறித்து அமைச்சரவையை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் .

ii. 2016ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தை தற்போதைய அமைச்சரவையினால் மீண்டும் உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையினை இரண்டு வாரத்துக்குள் மேற்கொள்ளுதல்

iii. விருப்பம் தெரிவித்தலை (EOI) கோருதல் மற்றும் அமைச்சரவையினை அறிவூட்டுதல் தொடர்பிலான முன்னேற்றத்தை இரண்டு மாத காலப்பகுதிக்குள் குழுவுக்கு அறிக்கையிடுதல் .

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - கடற்றொழில் அமைச்சு

தலைவர் - இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

i. அரச தனியார் கூட்டாண்மையின் கீழ் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்குரியதாக அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக, கடற்றொழில் அமைச்சின் செயலாளரின் MF/FD/1/7/13/COPE-2019 ஆம் இலக்க மற்றும் 2023.01.30 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

ii. 2023.08.31 ஆம் திகதி வரை முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 03. நிறுவனத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம்

நிதி ஆண்டொன்று ஆரம்பமாவதற்குநாட்களுக்கு முன்னதாக நிறுவன 15 த் திட்டத்தை கணக்காய்வாளரிடம் முன்வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் 2021-2025 ,காலகட்டத்துக்கான நிறுவனத் திட்டமானது பணிப்பாளர் சபைக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும்

வழங்கப்பட்டிருப்பது 2022.07.13 ஆம் திகதிஎன்பதால் இதன் ,திட்பநுட்பம் தொடர்பாகவும் நிறுவனத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் என்பவற்றுக்கு இடையில் காணப்பட வேண்டிய இடைத்தொடர்பு மற்றும் நிறுவனத் திட்டத்தின் நடைமுறைச்சாத்தியம் தொடர்பாகவும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது .

இதன்போது கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூறுகையில்நிறுவன ,த் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் என்பவற்றுக்கு இடையில் சில பொருத்தமற்ற தன்மைகள் காணப்படுவதை தாம் ஏற்றுக்கொள்கின்றபோதிலும்2023 ,ஆம் ஆண்டுக்காக நிறுவனத் திட்டம் மற்றும் வர்த்தக மாதிரிக்கு ஏற்ற புதியதொரு செயற்பாட்டுத் திட்டமொன்றை வரைவதற்கு கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவித்தார் மேலும், நிறுவனத்தின் உள்ளக மற்றும் . வெளிப்புற மேம்படுத்தல்கள், சர்வதேசவிற்பனை நிலையங்களைத் திறந்து வைத்தல் மற்றும் அதிகாரத்தைக் கையளித்தல் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன் செயலாற்றுகை முகாமைத்துவ குழுவினையும் தாபித்து , பொது தனியார் -கூட்டு (PPP) தொடர்பிலான அமைச்சரவைத் தீர்மானம் குறித்தும் இதன்போது கருத்தில் கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார் .

**விதப்புரைகள்**

i. புதிய நிறுவனத் திட்டத்தை தயார் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதலும் மூன்று மாத காலப்பகுதியில் இதன் முன்னேற்றம் குறித்து குழுவுக்கு அறிக்கையிடுதலும் .

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - கடற்றொழில் அமைச்சு

தலைவர் - இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 04. பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்துவது குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது .

இதன்போது கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூறுகையில் தாம் 2022 ஓகஸ்ட் மாதம் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டதாகவும் பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்படாத, பணிப்பாளர் சபைப் பத்திரங்கள் மற்றும் ஏனைய சகல முக்கியமான விடயங்கள் குறித்தும் கலந்தாலோசிப்பதற்கு 1 ½ மாத காலப்பகுதியில் ஐந்து பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார் .

மேலும்நிறுவனத்தில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், கொள்கை ரீதியான தீர்மானங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவது குறித்து ஆவணமொன்று தயார் செய்யப்பட்டு வருவதாகவும் இந்த வரைபினை இரண்டு மாத காலப்பகுதிக்குள் குழுவுக்கு முன்வைக்க முடியுமெனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்

## 05. <u>Sailfish (தளப்பத்து மீன்)கான பதிலீட்டை அறிமுகப்படுத்துதல்</u>

பிரதானமாக இறக்குமதி செய்யப்படும் மீனினமான தளப்பத்து மீன் , அரசாங்க வைத்தியசாலைகளில் உள்ள வதிவிட நோயாளர்களின் உணவுக்காக விதப்புரை செய்யப்பட்டுள்ளமையை அவதானித்த குழுவானது, இதற்காக உள்நாட்டு மீன் வகைகளை பதிலீடு செய்ய முடியுமா என்பது குறித்து வினவியது .

இந்த விடயம் குறித்து சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் விலை வீச்சுகள் மற்றும் போசாக்கு மட்டத்தைக் கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சின் விதப்புரை சகிதம் தளப்பத்து மீன் மற்றும் கொப்பரா மீன்களுக்கான உள்நாட்டு பதிலீடுகளின் நிரம்பலினை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும், இதன்போது கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்ததுடன், இது குறித்து ஏற்கனவே சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும், அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்

<u>**விதப்புரைகள்**</u>

i. அரசாங்க வைத்தியசாலைகளில் உள்ள வதிவிட நோயாளர்களின் உணவுக்காக தளப்பத்து மீனுக்குப் பதிலாக உள்நாட்டு மீனை வழங்குவதிலான இயலுமை குறித்து மருத்துவத் துறைசார்ந்த நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும் உபாய வழிமுறைகளை

உள்ளடக்கிய அறிக்கையினை இரண்டு வாரங்களுக்குள் குழுவுக்குச் சமர்ப்பித்தல் .

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - கடற்றொழில் அமைச்சு

தலைவர் - இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

i. இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதோடு அப்பரிந்துரைகளின் அடிப்படையில் உள்நாட்டில் பெற முடியுமான மாற்றீட்டை வழங்குவதற்கு உத்தேசித்துள்ளதாக குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

ii. 2023.08.31 ஆம் திகதி வரை முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

**06. <u>கூட்டுத்தாபனத்தின் பணியாட்டொகுதி</u>**

2022.10.31 ஆம் திகதியன்று வெற்றிடமாகியுள்ள சிரேஷ்ட மட்டத்திலான 04 பதவிகளில் 02 இற்கும் கூட்டுத்தாபனத்தின் மூன்றாம் மட்டத்தில் 19 பதவிகளில் 06 இற்கும் பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

மேற்படி பதவிகளை வகித்த அலுவலர்களின் முறைகேடுகள் காரணமாக சேவையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதால் உயர் மட்ட முகாமைத்துவத்தில் அதிகமான பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் கூட்டுத்தாபனத்தால் மேற்படி அலுவலர்களுக்கு எதிராகவும் மேற்படி சேவையிலிருந்து நீக்கப்பட்ட அலுவலர்கள் கூட்டுத்தாபனத்திற்கு எதிராகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் நிறுவனத்தின் தலைவர் இதன்போது தெரிவித்தார். எனவே, பணியா ட்டொகுதியை ஆட்சேர்க்கும் சட்டப் பின்னணி தொடர்பில் தெளிவுபடுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக கூட்டுத்தாபனம் இந்த விடயத்தை சட்டத்துறை தலைமையதிபதியிடம் ஆற்றுப்படுத்தியுள்ளதாகவும் குறித்த ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவரால் மேலும் தெரிவிக்கப்படது.

**<u>விதப்புரைகள்</u>**

i. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் உரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் இரண்டு மாதத்திற்குள் முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - கடற்றொழில் அமைச்சு

தலைவர் - இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

i. பிரதான பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படுதல் தொடர்பில் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட விதப்புரை நிரல் அமைச்சின் மூலம் 2022.11.04 ஆம் திகதி பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுமதி கோரி அனுப்பப்பட்டுள்ளதாகவும், உரிய அனுமதி கிடைத்தவுடன் 2023 முதலாம் காலாண்டில் மேற்படி ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டு முடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

ii. 2023.08.31 ஆம் திகதி வரை முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

**07. <u>கடன்களை அறவிடுதல்</u>**

கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் கடன்தொகை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவிக்கையில், கூட்டுத்தாபனத்தின் மொத்தக் கடன்தொகை ரூ. 625 மில்லியன்களாக உள்ளதுடன் வெளித் தரப்பினர்களிடம் இருந்து சுமார் ரூ. 250 மில்லியன் அறவிட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் கூட்டுத்தாபனத்தின் கடன் அறவிடும் செயன்முறையானது மிகவும் பலவீனமாகக் காணப்பட்டதாகவும், தற்போது அதனை மீண்டும் செயற்படுத்தியுள்ளதாகவும், அதற்கமைவாக கடந்த மாதத்தில் ரூ.11மில்லியன் கடன் தொகையினை அறவிடுவதற்கு முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

வெற்றிடமாகவுள்ள பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவு தொடர்பில் குழு வினவியபோது, தற்போது குறித்த பிரிவு செயற்படுவதுடன் உள்ளகக் கணக்காய்வில் 65% நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் உள்ளகக் கணக்காய்வில் வெளிக்கொணரப்பட்ட 54 சம்பவங்கள் தொடர்பில் நடவடிகைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், கடந்த சில வருடங்களாக குறித்த கடனை அறவிடுவதற்கோ அல்லது அறவிடுவதற்கான நியாயமான முயற்சிகளோ மேற்கொள்ளப்படவில்லை என்றும், கடனை அறவிடுவதற்கான உரிய கொள்கையொன்று பயன்படுத்தப்படாமையால் பொலீசில் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கான இயலுமைகூட இல்லை என்றும் குழுவால் அவதானிக்கப்பட்டது.

மேலும், கடனுக்கு விற்பனை செய்வதைத் தடைசெய்து அப்போதைய பொது முகாமையாளரால் கையொப்பமிடப்பட்ட 2003.10.07 ஆம் திகதிய கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் உள்ளகச் சுற்றறிக்கை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியால் குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டதுடன் குறித்த சுற்றறிக்கை ஏற்புடையதாவது வெளி கடன்படுனர்களுக்கு மாத்திரமே என உள்ளகக் கணக்காய்வு அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்தில் பதில் கடமையாற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி), கூட்டுத்தாபனம் கடன் அடிப்படையில் விற்பனை நிலையங்களுக்கு மீன் வழங்குவதால், விற்பனை நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் (விற்பனை உதவியாளர்கள்) உள்ளக கடன் பெறுநர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் குறித்த உள்ளக கடன்படுனர்களிடம் கடனை அறவிடும் பொறிமுறைக்கமைவான முறைகேடுகள் முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் இதன்போது தெளிவுபடுத்தினார் .

கூட்டுத்தாபனம் தமது ஊழியர்களை தொழில் சட்டத்திற்கு முரணாக கடன்படுனர்களாக ஆக்கியுள்ளதாக தெரிவித்த குழு, கடன்படுனர்கள் நிறுவனத்துக்கு பொறுப்புக் கூறுவது எவ்வாறு எனவும் வினவியது.

கூட்டுத்தாபனத்தின் உள்ளகச் சுற்றறிக்கையின் மூலமாக விற்பனை நிலையங்களிலுள்ள ஊழியர்களுக்கு பொறுப்புகள் ஒப்படைக்கப்படுகின்ற

போதிலும் அது தொடர்பில் ஆகக் குறைந்த கட்டுப்பாடு காணப்பட்டமையால் கடன் அறவிடுதல் தொடர்பிலான சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக இதன்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டதுடன் அதற்காக ERP முறைமையை அல்லது நிதி முகாமைத்துவ முறைமையைத் தாபிப்பதற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் விற்பனை நிலையங்களுக்கும் தலைமையகத்திற்கும் இடையிலான இடைத்தொடர்பு மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் உள்ளதுடன் தேவையற்ற கணக்குகளைக் குறைப்பதற்கும் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேபோன்று கடனை மீள அறவிடுவதற்காக தாபிக்கப்பட்ட கட்டமைப்பொன்று காணப்படுவதன் முக்கியத்துவம் தொடர்பில் குழு வலியுறுத்தியதுடன், ஒரு வருடத்துக்கும் குறைவான காலப்பகுதிக்குள் செலுத்தல்களை தட்டிக்கழித்த கடன் தொகை ரூ. 23 மில்லியன்கள் எனவும், 1-3 வருடங்களுக்கிடையில் செலுத்தல்களை தட்டிக்கழித்த கடன் தொகை ரூ. 20 மில்லியன்கள் எனவும், 3-5 வருடங்களுக்கிடையில் செலுத்தல்களை தட்டிக்கழித்த கடன் தொகை ரூ. 12 மில்லியன்கள் எனவும் மற்றும் 5 வருடங்களுக்கு மேலாக செலுத்தல்களை தட்டிக்கழித்த கடன் தொகை சுமார் ரூ. 28 மில்லியன்கள் எனவும் காணப்படுவதோடு அதனை மீள அறவிடுவதற்கான செயன்முறைத் திட்டம் தொடர்பாகவும் மேலும் கவனம் செலுத்தப்பட்டது.

இது தெடர்பில் கருத்துத் தெரிவித்த கூட்டுத்தாபனத்தின் தலைவர், ஐந்து வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து கடனைச் செலுத்த தவறியமை தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சருடன் கலந்துரையாடியதாகவும் அது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்ததார்.

ஐந்து வருடங்களுக்கு மேலாக செலுத்தல்களை தட்டிக்கழித்த கடன்படுனர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதை விடவும், ஒரு வருடத்துக்குக் குறைவான அல்லது அதிகமான காலப்பகுதியில் செலுத்தல்களை தட்டிக்கழித்த கடன்படுனர்களிடமிருந்து கடனை அறவிடுவதற்கு அதிக கவனம் செலுத்துவது மிகவும் பயனுடையதாக இருக்குமென்பது குழுவின் கருத்தாக அமைந்தது.

**விதப்புரைகள்**

i. கடன்படுனர்களைச் சரியாக அடையாளங் காண்பதை இலகுபடுத்துவதற்காக கடன் அறவிடும் செயன்முறை தொடர்பிலான முறையியலொன்றைத் தயாரித்தல்.
ii. கடன்படுனர்கள் மற்றும் கடன் வழங்குனர்களின் பட்டியலொன்றைத் தயார் செய்து, மூன்று வாரங்களுக்குள் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - கடற்றொழில் அமைச்சு

தலைவர் - இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

i. கடன்பெறுனர்களை அடையாளங்காணல் மற்றும் கடனை அறவீடு செய்தல் பற்றிய முறை தொடர்பில் பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று 2022.12.12 ஆம் திகதி அனுமதி கோரி முன்வைக்கப்பட்டுள்ளதாக குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.
ii. 2023.08.31 திகதி வரை முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

**08. நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2022.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2022.11.18 ஆம் திகதி கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நிதிக்கூற்றுக்கள் முழுமையானதாக இல்லையென்றும் 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள், கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதும் குழுவால் அவதானிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் தற்போது கிடைத்துள்ளதாகவும், 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்களை 2022 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது 2022 நவெம்பர் மாதம் என்பதால் அமைச்சு எதிர்பார்க்கின்றவாறு, கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களை

சமர்ப்பிக்கும் இயலுமை கிடையாதென கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வலியுறுத்தப்பட்டது.

**<u>விதப்புரைகள்</u>**

i. நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்தல் தொடர்பில் அறிக்கையொன்றை இரண்டு வாரங்களுக்குள் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - கடற்றொழில் அமைச்சு

தலைவர் - இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

i. இவ்விடயம் தொடர்பாக பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று 2022.12.12 திகதி அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ii. 2023.08.31 திகதி வரை முன்னேற்றம் தொடர்பாக அறிக்கையிடப்படவில்லை.

**09. <u>ஊழியர் சேமலாப நிதியம் மற்றும ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கான நிலுவைப் பங்களிப்புத் தொகை</u>**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்காக செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டதுடன் அதற்காகச் செலுத்த வேண்டியுள்ள மொத்த தொகை ரூ. 625 மில்லியன்கள் என்பதுடன் மாவட்ட மட்டத்தில் நிலுவைத் தொகைகளைச் செலுத்தக்கூடிய இயலுமை தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

வருடாந்தம் கொடுப்பனவுகளைச் செலுத்துவதை விடவும் மாதாந்தம் கொடுப்பனவுகளைச் செலுத்துவது மிகவும் பொருத்தமானதாகுமென்பது குழுவின் கருத்தாக அமைந்தது.

**குழுவின் விதப்புரைகள்**

i. நிலுவைத் தொகைகளைத் தீர்ப்பதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய நடைமுறை ரீதியான வழிமுறை தொடர்பான அறிக்கையொன்றை இரண்டு வாரங்களுக்குள் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - கடற்றொழில் அமைச்சு

தலைவர் - இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

நிறுவனத்தை இலாபமீட்டும் நிலைக்குக் கொண்டு வந்து, மாதாந்தம் உரிய வகையில் அப்பணத்தை செலுத்துவதற்கும், நிலுலைப் பணம் தொடர்பாக கௌரவ அமைச்சரிடம் எழுத்து மூலமான வேண்டுகோளை விடுத்து, அமைச்சரவைப் பத்திரமொன்றின் மூலம் பொதுத் திறைசேரியிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது பொதுத் திறைசேரியின் பிணைஉத்தரவாதத்தின் பேரில் நீண்டகால வங்கிக் கடனொன்றினைப் பெற்று, அதனை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமென குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

## ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

*(சுகாதார அமைச்சு)*

**விசாரணைத் திகதி :** 2022.12.06

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

### 01. ஆலோசனை பணியாட்டொகுதி

1983ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை சட்டத்திற்கு அமைய ஆலோசனை பணியாட்டொகுதியானது அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற வைத்திய நிபுணர்கள் மூவரைக் கொண்டிருக்கும் என்பது குழுவில் வெளிக்கொணரப்பட்டது.

இங்கு, அந்த ஆலோசகர் பணியாட்தொகுதிக்கு மூன்று பணியாளர்களை நியமிக்குமாறு அமைச்சானது நிறுவனத் தலைவருக்கு அறிவித்துள்ளதாகவும், இதுவரை ஒவ்வொரு துறையிலும் வைத்திய நிபுணர்கள் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குழுவுக்கு தெரியவந்துள்ளது.

ஆலோசனை பணியாட்டொகுதி தொடர்பாக குழு விசாரித்தது.

- ஆலோசனை பணியாட்டொகுதி என்பது consultancy எனவும்,
- பணியாட்டொகுதியைச் சேர்ந்த மூவரை இதற்கு நியமனம் செய்து அனுப்புமாறு அமைச்சினால் நிறுவனத்தின் தலைவருக்கு அறிவிக்கப்படுவதாகவும்,

ஒவ்வொரு துறைசார் வைத்திய நிபுணர்கள் ஆலோசகர்களாக இதுவரை நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் எனவும்,குழுவில் வெளிப்படுத்தப்பட்டதுடன்,

ஆலோசகர்களின் விசேட செயற்பணி தொடர்பில் குழு வினவியதையடுத்து,

- பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக செயற்படுவது என்றும்,
- வைத்திய நிபுணர்கள் 45 பேரிலிருந்து 3 பேர் அதற்காக நியமனம் செய்யப்படுகின்றனர் என்றும், மேலும், குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டது.

பணியாட்டொகுதியைச் சேர்ந்த மூவர் பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்யப்படுவது சிக்கலானது என்பதால் அது தொடர்பில் குழு கேள்வி எழுப்பியது. பணியாட்டொகுதியைச் சேர்ந்த மூவர் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவம் செய்கின்றனர் எனவும், தீர்மானங்கள் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படுவதாலும் அவை பணிப்பாளர் சபையினாலேயே நிறைவேற்றப்படுவதாலும் இது தொடர்பில் அக்கறை முரண்பாடு (Conflict of

Interest) காணப்படுகின்றது எனவும், குழு அவதானித்தது. இது தொடர்பாக குழு நீண்டவிதமாகக் கலந்துரையாடியது.

அதேவேளை, குழு தொடர்ந்தும் பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியது.

- ஒருசில அரச நிறுவனங்களில் தொடர்புடைய அமைச்சர் பணிப்பாளர் சபையை நியமனம் செய்யும் போது தொழிற்சங்க பிரதிநிதிகளையும் ஊழியர்களையும் இணைத்துக் கொள்கின்றார் என்பது,
- இந்த வைத்தியசாலையும் பட்டதாரிகளை பயிற்றுவிக்கும் ஒரு வைத்தியசாலையாக இருப்பது மட்டுமன்றி தொழில்சார் மட்டத்திலான வைத்தியசாலையாக உள்ளதாலும், அக்கறை முரண்பாடு காணப்படுவதாலும், அது தொடர்பில் காணப்படுகின்ற சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பது,
- இன்றேல் ஆலோசகர்களாக பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களை நியமனம் செய்தல்,
- மேற்படி பணிப்பாளர் சபையில் பட்டப் பின் படிப்பு கற்கை நிறுவகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் உள்ளார் என்பது,
- மேலும், சாய்சாலை(கிளினிக்) பரிசோதனைகளுக்கு வருகைதரும் வைத்தியர்களை மேற்படி பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்வதற்கு குழுவினால் முன்மொழியப்படுதல்,
- தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களின் கருத்துக்களையும் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுடனும் கலந்துரையாடுதல்.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. எதிர்காலத்தில் ஆலோசனைச் சபை தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் பற்றி ஒரு மாதத்திற்குள் குழுவிற்கு அறிக்கையிடல்.

ii. இதற்கு முன்னர் இடம்பெற்ற ஒன்றிணைந்த கலந்துரையாடலின் போது இவ்வைத்தியசாலைச் சட்டத்தைத் திருத்தி, தீர்மானங்களை மேற்கொள்ளும் குழுக்களை நியமிப்பதற்கும், ஆலோசகர்கள் இல்லாமல் பணியாட்டொகுதியை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் குழுக்களை நியமிப்பதற்கும் இணக்கம் தெரிவித்திருந்த போதும், அவை நடைமுறைப்படுத்தப்படாததன் காரணமாக

அத்தீர்மானங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

iii. இந்நிறுவனம் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கும் நிறுவனம் என்பதனால் தொழில்வாண்மை மிக்க நபர்களையும், வியாபார முகாமைத்துவ அறிவுடைய நபர்களையும் ஆலோசனைச் சபைக்கு அல்லது பணிப்பாளர் சபைக்கு இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - *சுகாதார அமைச்சு*

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் தலைவரின் SJGH/IAD/AGR-201,2020/COPE- 2022 ஆம் இலக்க மற்றும் 2023.05.11 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாக முன்னேற்றம் தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

**02. வைத்தியசாலையின் இன்றைய நிலைமை மற்றும் அதன் அபிவிருத்தி**

இந்த வைத்தியசாலையை சூழவுள்ள பிரதேசமானது நகர்ப்புர நடுத்தர வகுப்பை பிரதிநிதித்துவம் செய்கின்றது என்றும், எனவே, இந்த வைத்தியசாலையை முன்னரை விடவும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும், பிரதேசத்தைச் சூழ போட்டித்தன்மையுடன் நவீன உபகரணங்கள் மற்றும் வசதிகளைக் கொண்டுள்ள தனியார் வைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், ஆகையால் வைத்தியசாலையின் முகாமைத்துவம் நவீனமயப்படுத்தப்படும் வேலைத்திட்டமும், சேவைகளை பன்முகப்படுத்துவதும் அவசியமாகும் என்றும், பல்சிகிச்சை பிரிவு மற்றும் பக்கவாத நோயாளர்களுக்கான பிரிவை தாபிப்பதற்கான வைத்தியசாலையின் பிரேரணை காலத்திற்கு உகந்தது என்றும், இதற்கான கூட்டு முகாமைத்துவ திட்டத்தை தயார் செய்ய வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

**03. <u>பணிப்பாளர் சபைக்கு வைத்திய நிபுணர்கள் நியமனம் பெறல்</u>**

பணிப்பாளர் சபை மற்றும் ஆலோசனை சபையில் வைத்திய நிபுணர்கள் உள்ளடக்கப்பட வேண்டியமைக்கான காரணங்களை குழு வினவியது.

இது தொடர்பில் பணிப்பாளர் சபை உறுப்பினர்/ வைத்திய நிபுணர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்;

- எல்லாச் சந்தர்ப்பத்திலும் சரியான தீர்மானம் மற்றும் நிறுவனத்திற்கு இலாபகரமான நியாயமான தீர்மானம் மேற்கொள்ளப்படுவதனாலும்,
- நிறுவனக் கட்டமைப்பு தொடர்பில் வைத்தியசாலையில் இருக்கும் வைத்தியர்களுக்கு சிறந்த அறிவு உள்ளதனாலும்,
- சாதகமான பல தீர்மானங்கள் ஏற்கெனவே அமுல்படுத்தப்பட்டுள்ளதனாலும்,
- பணியாட்டொகுதியிடமிருந்து கிடைக்கும் பிரேரணைகள் மற்றும் கருத்துக்கள் பணிப்பாளர் சபைக்குப் பெற்றுக்கொள்ளப்படுவதனாலும்,

ஆலோசனை சபைக்கு வைத்திய நிபுணர்களை உள்வாங்கிக் கொள்வது உகந்தது எனக் குறிப்பிட்டார்.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. பணிப்பாளர் சபையின் அமைப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் முறையை அமைச்சின் செயலாளர் குழுவுக்கு அறிவித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதார அமைச்சு

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் தொடர்பாக அறிக்கையிடப்படவில்லை.

**04. <u>ஆலோசனை சபைக்கு வைத்திய நிபுணர்கள் நியமனம் பெறல்.</u>**

ஆலோசனை சபையுடன் தொடர்புடைய வைத்திய நிபுணர்கள் மூவரும் இணைந்து தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் அதன் பின்னர் மேற்படி

மருத்துவர்களே மேற்படி தீர்மானங்களை கீழ் மட்டத்தில் அமுல்படுத்துவதன் பொருத்தமற்ற தன்மை தொடர்பில் குழு வினவியது.

- தீர்மானம் மேற்கொள்வதற்கு 10 பேர் பணிப்பாளர் சபையில் உள்ளார்கள் என்பதும்,
- பெரும்பான்மை உறுப்பினர்கள் 6 பேர் இருக்க வேண்டும் என்பதும்,
- ஆகக் குறைந்தது மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு, ஆலோசனையுடன் சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணர்கள் மூவரினதும் தீர்மானங்கள் சரியானதாக இல்லாத போதிலும், எஞ்சிய ஆறு பேரின் தீர்மானங்கள் ஊடாக தீர்மான நிறைவேற்றத்தை அடைய முடியும் என்றும் குழுவில் வெளிக்கொணரப்பட்டது.

## 05. <u>வைத்தியசாலையை நவீனமயப்படுத்துவதற்கான பிரேரணைகள்</u>

இந்த வைத்தியசாலையின் ஊழியர்கள் அரசாங்கத்திடமிருந்து சம்பளம் பெறுவதனால் தனியார் துறை வைத்தியசாலைகளின் மூலம் வழங்கப்படுகின்ற சேவையை வழங்குவதில்லை என்றும், மக்களுக்கு தனியார் துறையைப் போன்று உயர் சேவையை ஆற்றும் போது இந்த வைத்தியசாலையையும் முன்னேற்ற முடியும் என்றும், முகாமைத்துவத்தின் பொருட்டு அறிவு மற்றும் ஆற்றலைக் கொண்டுள்ள குழுக்களை பணிப்பாளர் சபைக்கு இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும், இதனை வியாபார மட்டத்தில் கட்டியெழுப்ப வேண்டும் என்றும் குழு அவதானித்ததோடு, தற்போது வியாபார மட்டத்தில் இந்த வைத்தியசாலையை கட்டியெழுப்புவதில் காணப்படுகின்ற தடைகள் குறித்து குழுவுக்கு அறிக்கையிடுமாறும், அமைச்சின் செயலாளர் / தலைவருக்கு பரிந்துரை செய்தது.

குழு பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியது.

- இந்த நிறுவனத்திற்கென கூட்டுத்திட்டத்தில் செயற்பாட்டுத் திட்டமும் அவசியம் என்பது,
- வைத்தியசாலை சேவைகளை மேம்படுத்துவது அவசியம் என்பது,

- கூட்டுத்திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய விடயங்களாக வியாபாரத் திட்டம், பெறுகை திட்டம், நிதித் திட்டம், முகாமைத்துவத் திட்டம் மற்றும் மனிதவளத் திட்டம் அவசியம் என்பது,
- இந்த வைத்தியசாலையானது மாதிரி வைத்தியசாலையொன்றாக மாற்றப்பட வேண்டும் என்பது,
- காணப்படுகின்ற பெறுமதியான வளங்களின் மூலம் உச்சளவான பயனைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பது,
- கடந்த 5 வருட காலப்பகுதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி இது சம்பந்தமாக சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் தொடர்பில் எந்தவொரு கவனமும் செலுத்தப்படவில்லை என்பது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. மருத்துவமனையை நவீனப்படுத்துவதில் உள்ள தடைகள் குறித்து குழுவிடம் அறிக்கை சமர்பித்தல்.
ii. அமைச்சின் செயலாளர் / தலைவர் 2 மாதங்களுக்குள் செயற்பாட்டுத் திட்டத்தையும் உள்ளடக்கிய கூட்டுத்திட்டத்தைச் சமர்ப்பித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதார அமைச்சு

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

i. (i) ஆம் இலக்க விதப்புரைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளவாறு தற்போது வர்த்தக மட்டத்தில் மருத்துவமனையைக் கட்டியெழுப்புவதில் நிலவும் தடைகள் தொடர்பாக குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.
ii. மருத்துவமனையின் கூட்டுத் திட்டம் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 06. நோக்கு மற்றும் செயற்பணி

நிறுவனத்தின் நோக்கினை அடைந்துகொள்வது எவ்வாறு என்பது பற்றி குழு வினவியதையடுத்து, அதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியன இணைந்து தற்போது நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளதாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் செயற்பணி எந்தளவு தூரம் நிறைவேறியுள்ளது என்பது பற்றி குழு வினவியதுடன், வைத்தியசாலையின் பணிப்பாளர் குழுவிடம் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்;

- 2020 ஆம் ஆண்டு கொரோனா நெருக்கடி நிலை காரணமாக நிறுவனத்தின் திட்டங்கள் பாதிக்கப்பட்டன என்றும்,
- ஆயினும் ஜப்பான் அரசின் உதவியின் கீழ் பக்கவாதம் போன்ற நோய்களுக்காக வைத்தியசாலைக்கு வருகைதந்தவுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கும் வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் மூன்றாம் நிலை பல்சிகிச்சை பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்பது.

## 07. குழுவின் விசேட கவனம்

பின்வரும் விடயங்கள் தொடர்பாக குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

- இந்த வைத்தியசாலையை இலங்கையில் அமைந்துள்ள ஏனைய வைத்தியசாலைகளுடன் Benchmark செய்தலாகாது என்பது,
- சிறுநீரக மற்றும் இருதய சத்திரசிகிச்சைகள் தொடர்பிலான வைத்தியர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றனர் என்பது மற்றும் உயர் மட்ட சேவையை ஆற்றிவருகின்றனர் என்பது,
- இந்த வைத்தியசாலை சர்வதேச மட்டத்தில் மேம்படுத்தப்படல் வேண்டும் என்பது மற்றும் சர்வதேச ரீதியில் உயர் மட்டத்திற்கு செல்ல வேண்டும் என்பது,

- இந்த வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தை மென்மேலும் மேம்படுத்த வேண்டும் என்பது,
- வைத்தியசாலை வளாகத்தின் சுத்தம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பது,
- 264 ஆன மிகை பணியாட்டொகுதியில் பெரும்பாலானோர் ஆரம்ப மட்ட பணியாட்டொகுதியைச் சேர்ந்தவர்களாவார்கள் என்பதும், அவர்களை மாற்று வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்த வேண்டும் என்பதும்,
- செயற்பாட்டுத் திட்டத்தில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும் என்பதுமாகும்.

**08. <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்தல்.</u>**

நிருவாக சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது குழுவின் முன் வெளிக்கொணரப்பட்டது.

- சபையின் தலைவர்
- அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அமைச்சின் பிரதிநிதியொருவர்,
- நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் நிதி அமைச்சின் பிரதிநிதிகள்,
- வைத்தியசாலையின் ஆலோசனை பணியாட்டொகுதியிலிருந்து பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர்களுள் மூவர்,
- தமது தொழிற்றுறையில் சிறப்புச் சேவையினை ஆற்றியுள்ள நபர்களுக்கு மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் இருவர்,
- பதவிவழியில் நியமிக்கப்படும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர்,

கூட்ட நடப்பெண் 05 உறுப்பினர்கள் என்பது மற்றும் நிர்வாக சபையானது அவசியமான கூட்ட நடப்பெண் காணப்பட்ட சூழ்நிலையிலும் கூட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதை தவறவிட்டுள்ளதென்பது குழுவின் கருத்தாக அமைந்தது.

## 09. <u>செயற்பாட்டுத் திட்டம்</u>

செயற்பாட்டுத் திட்டத்தில் காணப்படும் செயற்பாடுகள் இதுவரையில் நிறைவேற்றப்படாமை தொடர்பில் குழு வினவியதுடன், அதற்குப் பதிலளித்த வைத்தியசாலையின் பணிப்பாளர்;

- இந்த வருடத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் மூலதன செலவுகள் கிடைக்கவில்லை எனவும்,
- ஈட்டிக்கொள்ளும் நிதியிலிருந்து சம்பளம் செலுத்தல் மட்டுமே மேற்கொண்டதாகவும்,
- இதன் காரணமாக மேற்படி பணிகளை நிறைவேற்ற முடியாமல் போனதாகவும் தெரிவித்தார்.

## 10. <u>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட முக்கிய விடயங்கள்</u>

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட கீழ்வரும் முக்கிய விடயங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக குழு வினவியது.

- மென்பொருள் மேம்பாட்டுக்கென அதிகளவான நிதி செலுத்தப்பட்டமை,
- Electronic Document Management System அமைப்பதற்கு பெறுகை நடைமுறையினைப் பின்பற்றாமல் தனியார் நிறுவனமொன்றுக்கு முற்பணத் தொகையை வழங்கியமை,
- மேலதிக இருப்புகள் காலாவதியாகியமை.

இவ்வாறு அமைச்சரவையின் அனுமதியின்றி ஆலோசனைச் சேவைக் கட்டணமாக பெருந்தொகையொன்றினை செலுத்தியமை தொடர்பில் நிறுவன உள்ளக கணக்காய்வாளர் மற்றும் அமைச்சின் கணக்காய்வாளர் பொறுப்புக்கூற வேண்டுமென்பது குழுவின் கருத்தாக அமைந்தது.

## 11. <u>வைத்தியசாலைக்குரிய காணி</u>

மேற்படி வைத்தியசாலைக்குரிய காணி பலாத்காரமாக கையகப்படுத்தியமை தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நில அளவைத் தலைமையதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட காணி அளவீட்டினை கவனத்திற் கொள்ளாது தனியார் நில அளவையாளர் ஒருவருக்கு மேற்படி காணியின் அளவீட்டு நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டமைக்கான காரணங்கள் தொடர்பில் குழு வியவியது.

- இவ்விடயம் தொடர்பில் சட்டத்துறை தலைமை அதிபதியிடம் ஆலோசனைகளைப் பெற்று அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும்,
- இதன்போது 165 பர்ச்சஸ் காணியை வைத்தியசாலை இழக்கும் அபாயம் காணப்படுவதாகவும்,
- மேற்படி காணிக்கு நில அளவைத் தலைமையதிபதி மற்றும் தனியார் நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட இரண்டு வரைபடங்கள் காணப்படுவதாகவும்,
- தனியார் நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட வரைபடம் தற்போது நிறுவனத்தில் உள்ளதோடு, அது நகர சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளதெனவும்,
- நில அளவைத் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட வரைபடம் நகர சபையினால் அனுமதிக்கப்படவில்லையெனவும்,
- மேற்படி காணியில் சட்டவிரோத கட்டுமானமொன்று இருப்பது அவதானிக்கப்பட்டதெனவும்,
- அது தொடர்பில் சட்டத்துறை தலைமை அதிபதியிடமிருந்து 2021.10.25 ஆம் திகதி ஆலோசனை கோரப்பட்டுள்ளதெனவும்,
- அதற்கான ஆலோசனைகளை சட்டத்துறை தலைமை அதிபதி 2021.11.10 ஆம் திகதி வழங்கியுள்ளதாகவும், குழுவின் முன்னிலையில் வெளிக்கொணரப்பட்டது.

மேற்படி விடயம் தொடர்பில் குழு பின்வரும் விடயங்களை வினவியது.

- மேற்படி காணிக்கு நில அளவைத் தலைமையதிபதியினால் வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் தனியார் நில அளவையாளரினால் வரைபடம் தயாரிக்கப்பட்டதற்கான காரணங்கள் மற்றும்
- தனியார் நில அளவையாளர் ஒருவரைக் கொண்டு காணியை அளவீடு செய்வதற்காக பணிப்பாளர் சபையின் தீர்மானம் உள்ளதா மற்றும் அதனை நகர சபை அனுமதித்தற்கான காரணங்கள்.

**குழுவின் பரிந்துரைகள்**

i. தனியார் நில அளவையாளர் ஒருவரை நாடுவதற்கான காரணங்கள் மற்றும் அதனை நகர சபை அனுமதித்ததற்கான காரணங்கள்.

ii. மேற்படி விடயம் தொடர்பில் தவறான தீர்மானங்களை மேற்கொண்ட சகல உத்தியோகத்தர்களதும் பெயர்ப் பட்டியல் (முன்பிருந்த சட்ட அதிகாரிகளின் பெயர்கள் உள்ளடங்களாக) மற்றும் தற்போது அவர்கள் பணியாற்றும் இடங்களின் விபரங்களை பெற்றுக்கொடுத்தல் மற்றும் சட்டவிரோத காணி கையகப்படுத்தலின் போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்ற விடயம் உட்பட இது தொடர்பிலான சாராம்ச அறிக்கையொன்றினை அமைச்சின் செயலாளர் ஊடாக குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - *சுகாதார அமைச்சு*

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

i. தனிப்பட்ட நில அளவையாளரொருவர் ஊடாக காணியை அளவிடுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் காணப்படாத அதேவேளை, முன்னாள் பணிப்பாளரொருவரின் அங்கீகாரம் காணப்படுவதாகவும், இக் காணியில் அனுமதியின்றி கையகப்படுத்தப்பட்டுள்ள மருத்துவமனைக்குச் சொந்தமான பகுதியை அரசாங்கத்திற்குச் சுவீகரிப்பதற்கு சட்டமா அதிபர் மூலம் வழக்கு தாக்கல் செய்வதற்கு 2022.12.09 ஆந் திகதியன்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

ii. காணி தொடர்பான தீர்மானங்களை மேற்கொண்ட உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 12. வைத்தியசாலையின் வசமுள்ள தரவுகள்

2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையின் படி 2016 தொடக்கம் 2021 வரையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 59,000 தொடக்கம் 31,000 வரையில்

குறைந்துள்ளமையையும், சத்திர சிகிச்சைகள் குறைந்துள்ளமையையும், 2022 ஆம் ஆண்டின் போது இலாபம் அதிகரித்துள்ளமையையும் அவதானித்த குழு அதற்கான காரணங்களை வினவியது.

இதன்போது வைத்தியசாலையின் கணக்காளர் கருத்துத் தெரிவிக்கையில்;

- 2020 ஆம் ஆண்டின் வருமானம் 2353 மி. ரூ எனவும், 2021 ஆம் ஆண்டின் வருமானம் 2814 மி.ரூ எனவும், 2022 ஒற்றோபர் மாதம் வரையில் வருமானம் 2688 மி.ரூ எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு நிறுவனத்தின் வருமானம் அதிகரிப்பதற்கான காரணங்களாக;

- மேற்படி வைத்தியசாலையானது ஆரம்பத்திலிருந்தே சேவை வழங்கும் ஒரு நிறுவனமாக தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்ததெனவும்,
- எனினும் இந்த வருடம் Price formula ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டதெனவும்,
- Break even point (சமநிலைப் புள்ளி) நிலைமையின் போது பொதுத் திறைசேரிக்கு சுமையாகாமல் வைத்தியசாலையை நடாத்திச் செல்வது எவ்வாறு என்பதன் அடிப்படையில் அதனை அறிமுகம் செய்ததாகவும்,
- அதனடிப்படையில் வைத்தியசாலைக் கட்டணத்தை 30%ஆல் அதிகரித்ததாகவும், மூன்று மாதங்களுக்கொரு தடவை மீளாய்வு செய்து மீண்டும் 15% ஆல் கட்டண அதிகரிப்பை மேற்கொள்வதாகவும்,கணக்காளரினால் தெரிவிக்கப்பட்டது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

I. இந்த வைத்தியசாலையிலிருந்து எதிர்பார்க்கப்படும் தரமான சேவை இடம்பெறாமை பாரிய பிரச்சினையாக உள்ளதால் இது தொடர்பில் ஆராய்ந்து அவசியமான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

II. அரசாங்க வைத்தியசாலையொன்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் சலுகைகள் இந்த வைத்தியசாலையிலிருந்து கிடைப்பதில்லையென்பதாலும்

மக்கள் இந்த வைத்தியசாலையில் இருந்து பெறும் சேவைகள் குறைவடைவதாலும் இவ்விரண்டு விடயங்களையும் சமமாக பேணிச்செல்ல வேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதார அமைச்சு

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 13. <u>பணியாட்டொகுதி</u>

பணியாட்டொகுதியின் சிற்சில பதவிகளில் வெற்றிடங்களும் அதேபோல் சில பதவிகளில் மிகையும் இருப்பதற்கான காரணங்கள் தொடர்பில் குழுவினால் வினவப்பட்டது.

- நிறைவேற்றுத் தரங்களில் மிகை இருப்பதாகவும் பணிப்பாளர் சபை செயலாளர் மற்றும் சட்ட உத்தியோகத்தர் ஆகிய இரு பதவிகளையும் வகிப்பது ஒரே உத்தியோகத்தர் என்பதும்,
- மேற்படி இரு பதவிகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்துக்கொள்ளப்படவில்லையென்பதும்,
- ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையில் பாரிய சிக்கல் காணப்படுவதும்,
- 2020 ஆம் ஆண்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையைத் தயாரிப்பதற்காக ஆலோசகர் ஒருவருக்கு ரூபா 760,000/- செலுத்தப்பட்டுள்ளதென்பதும்,
- ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையைத் தயாரித்து நிறுவனத்திற்கு உரிய காலப்பகுதியில் ஒப்படைக்காத காரணத்தினால் மீண்டும் அந்த தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் சபை அறிவித்துள்ளதென்பதும்,

- ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் பழைய வரைவு நகலை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் குழுவில் வெளிக்கொணரப்பட்டன.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. பணிப்பாளர் சபையின் தீர்மானம் பிற்போக்கானது என்பதால், அது தொடர்பில் குழுவிற்கு விளக்கமளித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதார அமைச்சு

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

(i) ஆம் விதப்புரைக்கு ஏற்புடைய விளக்கங்கள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**<u>வைத்தியசாலை தொடர்பில் 2017.06.09 ஆம் திகதி குழுவில் வழங்கப்பட்ட பரிந்துரைகள் பற்றிய தற்போதைய நிலைமை</u>**

## 14. <u>பணிப்புரை இலக்கம் 07 - உள்ளக கணக்காய்வாளரை சேவையிலிருந்து நீக்குதல்</u>

2017.06.09 ஆம் திகதி குழுவில் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் உள்ளக கணக்காய்வாளரை சேவையிலிருந்து நீக்குவது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக நிறுவனத்திற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கின்போது உள்ளக கணக்காய்வாளருக்கு நிறுவனத்தினால் தண்டப்பணத் தொகையொன்று செலுத்தப்பட நேர்ந்ததாகவும் குழுவிற்கு தெரியவந்தது.

## 15. <u>பணிப்புரை இலக்கம் 14 - காலாவதியாகிய இருப்பு</u>

நரம்பியல் சத்திரசிகிச்சை அலகிற்கு ரூபா 4.12 மில்லியன்கள் செலவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த சத்திரசிகிச்சை உபகரணங்களில் 80% ஆனவை பயன்படுத்தப்படாமல் காலாவதியாகியமை தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்கள் பற்றிய அறிக்கையொன்றினை குழுவிற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த

போதிலும் அது தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் குழு வினவியது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. மேற்படி விவகாரத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் முன்னேற்றத்தை இரண்டு வாரங்களுக்குள் குழுவிடம் தெரிவிக்கவும்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதார அமைச்சு

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 16. <u>பணிப்புரை இலக்கம் 20 - வைத்தியசாலை வளாகத்தினுள் ஏற்படக்கூடிய தீ விபத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான இயலுமையை மதிப்பிடுதல்</u>

இவ்விடயம் தொடர்பிலான தற்போதைய நிலைமையை ஆராய்ந்த குழுவிற்கு வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவிற்குப் பொறுப்பான மருத்துவ உத்தியோகத்தரினால்;

- மிகச்சிறந்த தீ பாதுகாப்பு முறைமையொன்று வைத்தியசாலையில் இருந்தது எனவும்,
- ஆயினும், அவ் உபகரணங்களை முறையாகப் பராமரிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கவில்லையெனவும்,
- ஆரம்பத்தில் காணப்பட்ட தீ பாதுகாப்பு முறைமை இன்றளவில் செயற்படுவதில்லையெனவும்,
- தற்போது காணப்படுகின்ற தீப்பாதுகாப்பு முறைமையை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கான இயலுமை கிடையாதெனவும்,
- அது தொடர்பில் விரைவாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளாக centralized system இற்கு மேலதிகமாக fire extinguishes தேவையான இடங்களில் வைக்கப்பட்டுள்ளன எனவும்,

- சுகாதார அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு அது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்,
- அதற்குத் தேவையான மருத்துவ அலுவலர் ஒருவரும் பணத்தொகையும் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கோட்டே மாநகர சபையின் தீயணைப்புத் திணைக்களத்தின் கீழ் இவ்வனைத்து நிறுவனங்களும் வருடத்திற்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியுள்ளதால் மேற்படி மதிப்பீட்டினை குறித்த நிறுவனம் மேற்கொண்டதா என்பது தொடர்பில் குழு வினவிய அதேவேளை உரிய தரத்திற்கமைவாக தேவையான விடயங்கள் இடம்பெறாமைக்கான காரணங்கள் தொடர்பிலும் குழு வினவியது. இவ்வாண்டிற்காக fire drill ஒன்று மேற்கொள்ளப்பட்டதாகவும், தீயணைப்பு திணைக்களத்திடம் இருந்து ஆலோனைகளைப் பெற்று தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தலைவர் தெரிவித்தார்.

## 17. <u>பணிப்புரை இலக்கம் 24 - சூரிய வலுசக்தி உற்பத்திக் கருத்திட்டம்</u>

இக் கருத்திட்டத்தினை ஆரம்பித்து ஆலோசனைக் கட்டணமாக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு (CECB) 2.97மி.ரூ. செலுத்தியுள்ளதாகவும், இதன் தற்போதைய நிலைமை தொடர்பில் வினவிய குழுவிற்கு வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிக்கையில்;

- 2.97மி.ரூபா தொகை CECB இற்குச் செலுத்தப்பட்ட போதிலும் இன்றளவில் ஜெய்க்கா நிறுவனத்துடன் அது தொடர்பில் கலந்துரையாடி வருவதாகவும்;
- இதற்காக ஜப்பானிலிருந்து குழுவொன்று நாட்டுக்கு வருகை தந்ததாகவும்;
- இக்கருத்திட்டம் தொடர்பான கடந்தகால அனைத்து தகவல்களையும் JAICA நிறுவனத்திற்கு வழங்கியதாகவும்,
- வழங்கப்பட்ட தகவல்களை JAICA நிறுவனம் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பயன்படுத்துமென தாம் நம்புவதாகவும் குழுவிற்குத் தெரிவித்தார்.

## 18. <u>Electronic Document Management System</u>

பணிப்பாளர் சபைக்கு இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ முறைமையொன்றை உருவாக்குதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக பணியாட்டொகுதியைச் சேர்ந்த பணிப்பாளர் ஒருவரின்

மனைவி பணிப்பாளராகக் கடமையாற்றிய நிறுவனமொன்றிற்கு 2015 நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அளிக்கப்பட்டு இருந்ததுடன், இந்நிறுவனம் 2015 ஒற்றோபர் மாதம் 8 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்று என்பது குழுவிற்கு தெரியவந்தது.

மென்பொருளுக்காக 1.8 மி.ரூபா தொகையும் ஆவணங்கள் scanning மற்றும் uploading செய்வதற்காக 2019 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி ஆகும்போது 19.7 மி.ரூபா தொகையும் செலவு செய்யப்பட்டிருந்ததாக மேலும் தெரியவந்ததுடன், இது தொடர்பில் அக்கறை முரண்பாடு இடம்பெற்றுள்ளதாகவும் இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் குழு வினவியது.

இது தொடர்பில் சட்ட அலுவலர் தெரிவிக்கையில்,

- ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கை இரண்டு தினங்களுக்கு முன்னரே கிடைக்கப்பெற்றது எனவும், இது தொடர்பில் முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அமைச்சின் ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கைக்கு அமைவாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான இயலுமை தொடர்பில் சட்டத்துறை தலைமையதிபதியின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாகவும்,
- ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கை 2019.08.06 ஆம் திகதி சுகாதார அமைச்சிலிருந்து வைத்தியசாலைக்கு சமர்ப்பித்திருப்பதாகவும், இது தொடர்பில் வினவியதையடுத்து இன்றைக்கு இரண்டு தினங்களுக்கு முன்னரே அது வைத்தியசாலைக்குக் கிடைத்தது என்றும்,
- குறித்த நிறுவனத்தின் ஆவணங்கள் மறைக்கப்பட்டோ அல்லது ஆவணங்கள் காணாமல் போயுள்ளமை தொடர்பான பிரச்சினையொன்று காணப்படுவதாகவும் குறிப்பிடார்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் முறையான ஒழுக்காற்று விசாரணை இது வரை தாமதமடைவதற்கான காரணங்கள் தொடர்பிலும் குழு வினவியது.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல்.

ii. அதனை நடாத்துவதற்கு இது வரை தாமதமடைந்தமைக்கான காரணங்கள் தொடர்பிலும் விரிவான அறிக்கையொன்றை ஒரு வாரத்திற்குள் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

iii. இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றை ஒரு வாரத்திற்குள் அமைச்சின் செயலாளரால் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - *சுகாதார அமைச்சு*

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

அடிப்படை விசாரணை அறிக்கைகளை துரிதப்படுத்தி பொதுச் சொத்துக்களை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பாக வழக்கு தாக்கல் செய்வதற்கு சட்ட மா அதிபருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், முறையான ஒழுக்காற்று விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் அதன் பிரகாரம் நிறுவன ரீதியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 19. நிருவாக அலுவலர் பதவி

நிருவாக அலுவலர் பதவிக்கான அனைத்து ஆவணங்களும் நிருவாக அலுவலர் பதவியில் பதவியேற்றுக்கொண்ட அலுவலருக்கு ஒப்படைக்கப்படவில்லையென குறித்த அலுவலர் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார்.

ஆயினும், மேற்படி ஆவணங்கள் மூவரைக்கொண்ட குழுவின் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டதாகவும், மேற்படி குழுவில் உள்ளகக் கணக்காய்வாளரும் பிரதிநிதித்துவம் செய்ததாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

**குழுவின் பரிந்துரைகள்**

i. ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் நிருவாகத்தில் பல பிரச்சினைகள் காணப்படுவதால் இவ்வைத்தியசாலையின் நடவடிக்கைகளை முறைமைப்படுத்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் - சுகாதார அமைச்சு

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 20. நோயாளர்களின் தகவல்களை களஞ்சியப்படுத்தல்

நோயாளர்களின் தகவல்களை களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகளின் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் குழு வினவியதுடன், அது தொடர்பில் தகவல் தொழில்நுட்பத்துக்குப் பொறுப்பான மருத்துவ அலுவலர் தெரிவிக்கையில்;

- தற்போது electronic health records system ஒன்றை நடைமுறைப்படுத்துவதாகவும்,
- அதனை மேலும் விரிவாக்கி வருவதாகவும்,
- அதனூடாக தற்போது கிளினிக்குகளில் நோயாளர்களின் தரவுகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் ஆய்வு கூடத்தில் நோயாளர்களின் தரவுகளை களஞ்சியப்படுத்தல் மற்றும்
- அண்மையில் X- கதிர் பரிசோதனை தகவல்களையும் பராமரித்துச் செல்வதற்காக பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் PC House மூலமாக பெற்றுக்கொண்ட சேவைகள் தொடர்பில் குழுவால் வினவப்பட்டது. அது தொடர்பில் தகவல் தொழில்நுட்பத்துக்குப் பொறுப்பான மருத்துவ அலுவலர் தெரிவிக்கையில்;

மேற்படி சேவைகள் இடைநடுவில் தடைப்பட்டதுடன் நிருவாகத்தின் அங்கீகாரத்துடன் மேற்படி கம்பனியின் sub-contractor ஒருவரால் மேற்குறித்த பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

## 21. வைத்தியசாலைக்கு வருகைதரும் நோயாளர்கள் தொடர்பான தரவுகளை களஞ்சியப்படுத்தல்

நோயாளர்களின் விபரங்களை electronically பெற்றுக்கொள்ள முடியுமா, ஏற்கனவே வைத்தியசாலைக்கு வருகைதந்துள்ள நோயாளர்களின் விபரங்கள் உள்ளடங்கிய தரவுகளை களஞ்சியப்படுத்தல் electronical முறையினூடாக எவ்வளவு தரவுகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

அது தொடர்பாக வைத்தியசாலையின் மருத்துவ அறிக்கை அலுவலர் கருத்து தெரிவிக்கையில்,

- சட்டத்துறை தலைமையதிபதியின் பணிப்புரைக்கமைவாக ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்களை அடிப்படை ஆவணங்களாக நீதிமன்றுக்கு சமர்ப்பிக்க முடியாதென்றும்,

- ஆகையால் மருத்துவ கிளினிக் மற்றும் நீரிழிவுநோய் கிளினிக் தொடர்பான தகவல்களை நேரடியாக தரவுக் களஞ்சியத்தில் உள்ளடக்குவதற்கு தற்போதைய முகாமைத்துவம் தீர்மானித்ததாகவும்,
- குறித்த இரண்டு கிளினிக்குகளுக்கு நாளாந்தம் சுமார் 200 நோயாளர்கள் வருகை தருவதாகவும் மேற்படி நோயாளர்களின் தரவுகளை நேரடியாக தரவு முறைமையில் பதிவேற்றம் செய்வதாகவும்,
- தற்போதைய முகாமைத்துவ தீர்மானத்திற்கு அமைவாக இத்தரவுகளை உள்ளடக்குதல் ஏனைய கிளினிக்குகளுக்கும் நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதென்றும்,
- மேற்படி முறையினூடாக பணியாட்டொகுதியை குறைக்க முடியுமென்றும் ஏற்கனவே அது இடம் பெற்றுள்ளதென்றும்,
- ஆகையால் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் கடிதக் கோப்புகளை மாத்திரம் கடிதக் கோப்புகளாக ஸ்கேன் செய்து பின்னர் தரவுக் களஞ்சியத்தில் உள்ளடக்குவதாகவும் குறிப்பிட்டார்.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. ஸ்கேன் செய்யும் நடவடிக்கையானது பழமையான முறைமையொன்று என்றும், இதற்காக பாரிய செலவினை வெளி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியுள்ளதால், நோயாளியை வைத்தியசாலைக்கு அனுமதிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவரது தரவுகளை கணனிமயப்படுத்தும் புதிய வழிமுறையொன்றுக்குச் செல்லுதல்.

ii. மேற்படி தரவுகளை ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதாயின் முதல் சந்தர்ப்பத்திலேயே நோயாளியின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதார அமைச்சு

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## 22. <u>பிரத்தியேக சிகிச்சைச் சேவை</u>

மருத்துவ நிபுணர்கள் வைத்தியசாலையில் பிரத்தியேக மருத்துவச் சேவையில் ஈடுபடுதல் தொடர்பில் அறவிடப்படும் தொழில்வாண்மைக் கட்டணம் தொடர்பில் கீழ் குறிப்பிடப்படும் சிக்கல் நிலைமை காணப்படுவதாக குழு அவதானித்தது.

- இக்கொடுக்கல் வாங்கல்களை கணக்குவைத்தல் தொடர்பில் சிக்கல்கள் காணப்படுவதாகவும்,
- மருத்துவ நிபுணர்களுக்கு செலுத்தப்படும் கட்டணங்கள் தொடர்பில் ஆவணப்படுத்தலோ அல்லது கணக்குப் பதிவுகளோ இடம்பெறுவது இல்லையென்றும், புறம்பான பற்றுச்சீட்டுக்கள் மூலமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதாகவும்,
- மருத்துவ நிபுணர்களுக்குச் செலுத்தப்படும் தொழில்வாண்மைக் கட்டணங்கள் பொதுவான நடைமுறையில் காணப்பட வேண்டும் என்றும்,
- அதனூடாக நிறுவனத்துக்கு 0.15% கிடைக்கின்றதெனவும்,
- மருத்துவ நிபுணர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த தொழில்வாண்மைக் கட்டணம் 2021 ஆம் ஆண்டின் ரூ. மி. 388 வருமானத்தில் வைத்தியசாலை வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்ட சேவைக் கட்டணம் ரூ. 583,035/- மாத்திரம் என்றும்,
- 2020 ஆம் ஆண்டின் வருமானம் ரூ.மி. 363.17 என்றும், அதில் வைத்தியசாலையின் வருமானத்திற்குச் வரவு வைக்கப்பட்ட சேவைக்கட்டணம் ரூ.546,035 என்றும்,
- நிறுவனத்தின் உபகரணங்கள் இதற்காக பயன்படுத்தப்படுவதாகவும்,

இது தொடர்பில் மருத்துவ நிபுணர்/வைத்தியசாலை பணிப்பாளர் சபை உறுப்பினர் தெரிவிக்கையில்,

- தனியார் வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சை மேற்கொள்கையில் அறவீடு செய்யப்படும் முறையினை உதாரணமொன்றினூடாக தெளிவுபடுத்தி ஒரு

சத்திரசிகிச்சைக்காக நோயாளியினால் சுமார் ரூ. 200,000/- செலுத்துவதாயின், அதில் மருத்துவ நிபுணரின் தொழில்வாண்மைக் கட்டணம் ரூ. 70,000/- மற்றும் ரூ. 130,000/- வைத்தியசாலைக் கட்டணம் என்றும்,

- மருத்துவ நிபுணரின் குறித்த தொழில்வாண்மைக் கட்டணத்தில் (ரூ. 70,000/-இல்) எந்தவிதமான சதவீதமும் வைத்தியசாலைக்கு கிடைப்பதில்லையென்றும்,
- தனியார் வைத்தியசாலைகளில் வைத்தியசாலைக் கட்டணமாக செலுத்தப்படுகின்ற ரூ. 130,000/- இல் அனைத்துச் செலவுகளையும் ஈடுசெய்து கொள்வதாகவும்,
- ஜயவர்தனபுர வைத்தியசாலையின் நிலைமையும் அதற்கு சமமானதாகும் எனவும் குறிப்பிட்டார்.

ஜயவர்தனபுர வைத்தியசாலையின் நிலைமை தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில் மருத்துவ நிபுணர்/வைத்தியசாலை பணிப்பாளர் சபை உறுப்பினர் தெரிவிக்கையில்;

- ஒவ்வாரு மாதமும் 10 ஆம் திகதி தொழில்வாண்மைக் கட்டணம் தமது கணக்குகளில் வரவு வைக்கப்படுவதாகவும், மேற்படி பணத்தொகையில் 0.15% ஆன தொகை தமது கணக்குகளிலிருந்து வைத்தியசாலைக்கு அறவிடப்படுவதாகவும், ஏனைய தனியார் வைத்தயசாலைகளில் சத்திரசிகிச்சை மேற்கொள்வதாயின் உரிய தனியார் வைத்தியசாலை அவ்வாறு அறவீடொன்றை மேற்கொள்வதில்லையென்றும்,
- ஜயவர்தனபுர வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர்கள் வைத்தியசாலைக்கு பாரிய பங்களிப்பை வழங்குவதாகவும், 0.15% தொகை தமது கணக்குகளிலிருந்து வைத்தியசாலைக்கு அறவிடப்படுவது தொடர்பில் எதிர்ப்புக் கிடையாதென்றும், குறித்த பணத்தொகையை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் ஏனைய மருத்துவ நிபுணர்களுடன் கலந்துரையாடுவது ஏற்புடையதாகுமெனவும், வேறு எந்தவொரு தனியார் வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சைகளுக்காக செலுத்தப்படும் தொழில்வாண்மைக் கட்டணத்தில் இருந்து மருத்துவ நிபுணரிடம் வேறு எவ்விதமான அறவீடும் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிந்திருக்கவில்லை எனவும், வைத்திய நிபுணரின் தெளிவுப்படுத்தல் தொடர்பாக தாம் திருப்தியடைவதாகவும், மேலும் இது தொடர்பாக ஆராய்வதாகவும், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்டது. அதற்கு குழுவின் இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றது.

## 23. <u>மாலை 4.00 மணிக்குப் பின்னர் வருமாறு நோயாளிகளுக்கு அறிவித்தல்</u>

பகல் நேரத்தில் பரிசோதனைகளுக்காக வருகின்ற நோயாளிகளை பரிசோதனைகளுக்காக மாலை 4.00 மணிக்குப் பின்னர் வருமாறு அறிவித்தமை தொடர்பாக குழுவினால் வினவப்பட்டது.

இது தொடர்பாக வைத்திய நிபுணர்கள் விழிப்பூட்டப்பட்டுள்ளதாகவும், இவ்விடயத்தில் நிர்வாகம் தீவிர கவனத்துடன் இருப்பதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் குழுவிடம் தெரிவித்தார்.

## 24. <u>அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தின் முன்மொழிவுகள்</u>

2021ஆம் ஆண்டு இவ்வைத்தியசாலைக்கு மீண்டெழும் செலவுகளுக்காக ரூ. 2 பில்லியன்களும், 2022ஆம் ஆண்டு ஒற்றோபர் வரை ரூ. 1.8 பில்லியன்களும் வழங்கப்பட்டுள்ளதாக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

- பெருமளவிலான நிதி ஒரு நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது எனவும்,
- அதன் காரணமாக அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் கருத்தாக அமைவது கிரயத்தைப் பிரதிபலிக்கும் கிரய முறைக்குச் செல்ல வேண்டும் என்பதுடன் அடிப்படையில் சமநிலைப் புள்ளியில் (Breakeven point) இருக்க வேண்டும் எனவும்,
- கூட்டுத் திட்டத்தை (Corporate Plan) தயாரிக்கும் போது இவ்வைத்தியசாலை நோயாளிகளுக்கு வழங்கும் உபசரிப்புகளை உச்ச அளவில் வழங்குவதற்கும், தனிப்பட்ட ரீதியில் அல்லது அதனை விட உயர்வாக வழங்குவதற்கும் முயற்சிக்குமாறும் அதன் போது சமநிலைப் புள்ளியை (Breakeven point) அல்லது அதனை விட உயர்வாகச் செல்ல முடியுமெனின் அவ்வாறு செயற்படுத்துமாறும்,

- 2021ஆம் ஆண்டின் இறுதியில் அரச தொழில் முயற்சிகள் தொடர்பாக வழிகாட்டல் கோவையொன்று வெளியிடப்பட்டுள்ளதாகவும்,
- அரச தொழில் முயற்சியாண்மை தொடர்பாக 2021ஆம் ஆண்டு வெளியிட்ட வழிகாட்டல் கோவையின் 2.6 இல் பணிப்பாளர் சபை செயலாளர் என்ற பதவியின் பணிப்பொறுப்பு யாதென்பது தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும்,
- இந்நிறுவனங்களில் நிர்வாகத்தினை முன்னெடுத்துச் செல்லும் போது Corporate Governance Framework இற்குள் செயற்பட வேண்டும் எனவும்,
- இதில் பணிப்பாளர் சபையின் செயலாளரிற்கு அதிகளவான பணிப்பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும்,
- பணிப்பாளர் சபை மேற்கொள்ளும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை செயலாளரிடமிருந்து கிடைக்கப் பெறும் பங்களிப்பு அளப்பரியது எனவும்,
- வழிகாட்டல் கோவையின் 2.6இற்கு அமைவாக பணிப்பாளர் சபையின் செயலாளர் நிறுவனத்தில் வேறு பதவிகளை வகிக்கக் கூடாது எனவும் அப்பதவி சுயாதீனமானதாக இருக்க வேண்டும் எனவும்,
- எனினும் ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளர் சபைச் செயலாளர் சட்ட அலுவலராகவும் செயற்படுகிறார் எனவும்,
- இந்நிறுவனத்திற்கே உரிய தனித்துவமான சட்டச்சிக்கல்கள் உள்ளன எனவும், எனவே பணிப்பாளர் சபை செயலாளர் பதவியானது புறம்பான பதவியாகக் கருதப்படல் வேண்டும் எனவும்,
- வழிகாட்டல் கோவையின் 2.6இற்கு அமைவாக பணிப்பாளர் சபையின் செயலாளர் நிறுவனத்திற்கு வெளியில் இருந்து நியமனஞ் செய்யப்படலாம் எனவும், (outsource) செய்யப்படலாம் எனவும் குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டது.

வைத்திய நிபுணர் / வைத்தியசாலையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்,

- வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் அதிக நேரம் வரிசையில் காத்திருப்பதாகவும், அதற்குத் தீர்வாக தனியார்

வைத்தியசாலைகளில் போன்று மக்கள் தொடர்பு அலுவலர் (Public Relation Officer) ஒருவரை நியமிப்பதற்கும், நோயாளியின் தேவைக்கு அமைவாக தேவையான இடத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கு முன்மொழிந்ததாகவும்,

- நோயாளிகளுக்கு உறப்பட வேண்டி ஏற்படும் செலவுகள் தொடர்பான பெக்கேஜ் மற்றும் துண்டுப் பிரசுரங்களைத் தயாரிப்பதற்கு முன்மொழிந்ததாகவும்,
- இவ்வைத்தியசாலைக்கு Bed Management Allocation System ஒன்று இல்லை எனவும், அதன் காரணமாக வைத்தியசாலைக்கு Bed Manager ஒருவரை நியமிப்பதற்கு முன்மொழிந்ததாகவும்,
- நோயாளியின் அறிக்கைகள் தொலைபேசிக்கு கிடைக்கப்பெறும் முறையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிந்ததாகவும்,
- பணியாட்டொகுதியின் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடத்துவதற்கு முன்மொழிந்ததாகவும் தெரிவித்தார்.

**<u>குழுவின் பரிந்துரைகள்</u>**

i. பணிப்பாளர் சபை முடிவுகளை எடுக்கும்போது பின்வரும் நிலைமைகளை கருத்தில் கொள்ளுமாறு செயலாளர்/தலைவருக்கு குழு அறிவுறுத்தியது.

அ) மருத்துவ நிபுணர்கள் மருத்துவமனையின் பல்வேறு துறைகளில் நிலவும் உள்ளக முரண்பாடுகள் குறித்து அவர்கள் தானாக முன்வந்து அந்த விஷயங்களைத் தீர்ப்பதற்குத் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்ததால் அனைத்து ஊழியர்களுடனும் கலந்துரையாடி அனுமதிக்கும் படியான குழு முடிவை தெரிவிப்பது.

ஆ) செலவு முகாமைத்துவம் மற்றும் மருத்துவமனை முகாமைத்துவத்திற்கு ஒரு பிரத்தியேக குழுவை நியமித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் - சுகாதார அமைச்சு

தலைவர் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 25. <u>குழுவின் தீர்மானங்கள்</u>

i. 03 மாதங்களின் பின்னர் மீண்டுமொரு முறை ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையை குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அழைப்பு விடுத்தல்.

ii. இனிவரும் காலங்களில் அலுவலர்களை குழுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அழைப்பு விடுக்கும் போது முன்னர் கடமையாற்றிய திறைசேறி பிரதிநிதிக்கும் அழைப்பு விடுத்தல்.

iii. இக்குழு கடந்த கால கணக்காய்வு மற்றும் செயலாற்றுகை தொடர்பாக தேடிப்பார்ப்பதோடு, தற்போதைய நிலைமை தொடர்பாக இதை விட விரிவாக கலந்துரையாட வேண்டியுள்ளமை. சகல துறைகளும் உள்ளடங்கும் வகையில் வைத்தியசாலை தொடர்பாக விசேட அறிக்கையொன்றினை கணக்காய்வாளரர் தலைமையதிபதியிடம் கோரல்.

iv. வைத்தியசாலைக்குச் சென்று நிறுவனம்சார் ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு உபகுழுவொன்றினை நியமித்தல்.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

*(தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு)*

**விசாரணைத் திகதி :** 2022.12.08

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

**குறிப்பு**

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துடன் தொடர்புடையதாக 2019 மற்றும் 2020ஆம் நிதி ஆண்டுகளுக்குரிய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை தொடர்பாக விசேட அறிக்கையொன்றினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைவாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தை 2022.12.08 திகதி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முன்னிலையில் வரவழைத்து மேற்கொண்ட விசாரணையின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் விசேட அறிக்கையான ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரின் முதலாவது அறிக்கை, பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 260ஆக 2023ஆம் ஆண்டு சனவரி மாதம் 20ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

*(தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு)*

**விசாரணைத் திகதி :** 2023.01.18

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

**2022.12.08 ஆம் திகதி இடம்பெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.**

**01. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக சட்டத்தைத் திருத்துதல்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தைத் திருத்தும் செயன்முறையின் தற்போதைய நிலைமை தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது அமைச்சின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

- சட்டத்தை திருத்தும் பணிகள் உள்ளக ரீதியாக நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலமாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்;
- திருத்தச் செயன்முறையின் முன்னேற்றத்தை அமைச்சர் இடைக்கிடை அவதானிப்பதாகவும்;
- சட்ட வரைவுச் செயன்முறையானது தற்போது அதன் இறுதிக்கட்டத்தில் காணப்படுவதாகவும்;
- சட்ட வரைவுச் செயன்முறையை 2023 சனவரி மாதம் முடிவடைவதற்கு முன்னராக நிறைவு செய்வதற்கும், 2023 பெப்புருவரி மாதத்தில் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிப்பதற்கும் எதிர்பார்ப்பதாகவும்;
- அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர், சட்ட வரைவை மீண்டும் அமைச்சரவைக்கும் இறுதியாக பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக அதன் சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சட்ட வரைஞருக்கும், பின்னர் சட்டத்துறை

தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதான பணிப் பொறுப்புக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதி கருத்துத் தெரிவிக்கையில்,

- இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குரிய பிரதான நிறுவனமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தாபிக்கப்பட்டதென்றும்;
- அது தொடக்கம் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை சுமார் 30-35 வருடங்களாக விரிவாக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் சில நிறுவனங்களும் இத்தொழில்துறையில் நுழைந்துள்ளதாகவும்;
- அதற்கமைவாக பணியகத்தின் முகவராண்மைப் பணிகளை மேற்கொள்வதற்காக பணியகத்தால் கம்பனியொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக படிப்படியாக பயணிப்பதுடன் அது சிறந்ததொரு போக்காகும் என்றும்;
- எனவே, பணியகத்தின் பிரதான பணியானது ஒழுங்குபடுத்தும் நிறுவனமொன்றாக பணிகளை மேற்கொள்ளல் என்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும்;
- மேலும், தற்போதைய சட்டத்திற்கமைவாக, மேற்படி ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கையில், பணிப்பாளர் சபையானது 11 அங்கத்தவர்களைக் கொண்டதாக இருக்க வேண்டியதுடன், அதில் 04 அங்கத்தவர்கள் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்றும்;
- எவ்வாறாயினும், மேற்குறித்த அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டிய 04 அங்கத்தவர்களும் நியமிக்கப்படுவது தனியார்துறை முகவராண்மை நிறுவனங்களில் இருந்து என்றும்;
- எனவே, ஒழுங்குபடுத்தும் நிறுவனமாகச் செயற்படும் பணியகத்தின் பணிப்பாளர் சபையானது, ஒழுங்குபடுத்தலுக்கு உள்ளாகும் முகவராண்மை நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாக அமையும் என்பதால் அதில் அக்கறை முரண்பாடு காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் சட்டத்தில் மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பாக இதன் போது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் மேலும் வினவப்பட்டது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர்,

- வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் ஈடுபட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை இந்நாட்டுக்கு கொண்டு வருவது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்கள் என்பதனால் அந்நிறுவனங்களை வெளியேற்றுவதில் சிரமம் நிலவுகின்றது எனவும்,
- அதன் காரணமாக புதிய சட்டத்திற்கு அமைவாக, முகவர் நிறுவனங்களின் 04 பிரதிநிதிகளுக்குப் பதிலாக இருவரை பணிப்பாளர் சபைக்கு நியமிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

ஒழுங்குப்படுத்தலுக்கு உட்படும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பணிப்பாளர் சபையில் தீர்மானங்களை மேற்கொள்பவர்களாக செயற்பட்டு, கூருணர்வு மிக்க தகவல்களை வெளித் தரப்பினருக்கு வழங்குவதற்கான ஆபத்து உள்ளதனால் அவ்வாறான நியமனங்கள் சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்கும் முரணானவை என்பது குழுவின் ஏகோபித்த கருத்தாக அமைந்ததுடன் பல்வேறு நாடுகளின் சட்டங்கள் மற்றும் விதிகள் அடிக்கடி மாற்றமடைவதனால் ஒழுங்குப்படுத்தும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் சுயாதீனமாக செயற்படல் மற்றும் விடயப்பரப்பு தொடர்பான அறிவினைக் கொண்டிருத்தல் என்பவற்றுக்கிடையில் சமநிலைத் தன்மை நிலவ வேண்டும் என குழுவினால் அவதானிக்கப்பட்டது.

மேலும், பணிப்பாளர் சபைக்கு முகவர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டாலும் கைத்தொழிலுக்குத் தேவையான உள்ளீடுகளை பெற்றுக் கொள்வதற்காக இந்நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட உப குழுவொன்றினை அல்லது நிபுணர் குழுவொன்றினை நியமிக்குமாறு குழுவினால் முன்மொழியப்பட்டது.

**குழுவின் விதப்புரைகள்**

i. ஒழுங்குப்படுத்தும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் தொடர்பாக தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்காக நிபுணத்துவ அறிவுடைய புத்திஜீவிகள் குழுவொன்றினை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் – தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

தலைவர் – இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 02. தொழிலாளர் நலனோம்பல் நிதியம்

தொழிலாளர் நலனோம்பல் நிதியத்திற்கும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கும் என இரண்டு நிதிக் கூற்றுக்களை வெவ்வேறாக பேணிச் செல்ல வேண்டும் என்பதுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்தின் படி தொழிலாளர் நலனோம்பல் நிதியத்தின் நிதி வேறு எப்பணிகளுக்காகவும் பயன்படுத்தக் கூடாது எனவும் குழுவினால் வலியுறுத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதி தெரிவிக்கையில்,

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொழிலாளர் நலனோம்பல் நிதியத்தின் வருமானங்கள் மற்றும் செலவுகள் என்பன சரியான முறையில் காட்டப்படவில்லை எனவும்,
- பணியகத்தின் சட்டத்திற்கு அமைவாக, வருமான மூலங்கள் மற்றும் செலவுகள் உட்பட நிதியத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய குறித்துரைக்கப்பட்ட பணிகள் சில வரையறுக்கப்பட்டுள்ளதுடன், நிதியத்திற்கென தனியான கணக்கொன்றினை பேணிச் செல்ல வேண்டும் என்பதுடன்,

அதற்கமைவாக அதனை கணக்காய்வு செய்து, சுயாதீன கணக்காய்வு அபிப்பிராயத்தையும் வெளியிட வேண்டுமெனவும்,

- எவ்வாறெனினும் நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் பணியகத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகளாக தற்போது அறிக்கையிடப்படுவதால், நிதியத்தின் நிதிப்பயன்பாடு தொடர்பாக திட்டவட்டமான முறையில் அவதானிக்க முடியாதுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இவ்விருக் கணக்குகளையும் வேறுபடுத்தி, கணக்காய்வு செய்து, கணக்குகளைத் தயாரிப்பதற்கு தற்போதைய சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லை என பணியகத்தின் பொது முகாமையாளரினால் இதன்போது குறிப்பிடப்பட்ட போதும், கணக்காய்வாளர் தலைமை அதிபதி, நிதியத்தின் வருமானம் செஸ் வரியைக் கொண்டிருப்பதாலும், அது அரச வருமானம் என்பதாலும் அதனை கணக்காய்வு செய்வதற்கு எவ்வித தடையுமில்லை என்பதுடன், இக்கணக்குகளை ஒன்றாக பதிவிடுவதன் ஊடாக நிதியத்தின் நிதி பயன்படுத்தப்பட்டதன் நோக்கத்தை கண்டறிவதில் சிரமம் ஏற்படுவதன் காரணமாக கணக்காய்வினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுவதால் சட்டத்திற்கு அமைவாக இக்கணக்குகளை வேறுபடுத்தும் நோக்கம் நிறைவேறுவதில்லை எனக் குறிப்பிட்டார்.

**<u>குழுவின் விதப்புரைகள்.</u>**

i. தொழிலாளர் நலனோம்பல் நிதியம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்காக இரண்டு நிதிக் கூற்றுக்களை வெவ்வேறாகப் பேணிச் செல்லல்.

ii. புலம்பெயர் தொழிலாளர்களின் நலன்களைச் சார்ந்ததன்றி வேறு எப்பணிக்காகவும் நலனோம்பல் நிதியத்தின் நிதியை செலவிடுவதைத் தவிர்த்தல்.

iii. தொழிலாளர் நலனோம்பல் நிதியத்திற்காக தனியான வங்கிக் கணக்கைப் பேணிச் செல்லல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் – தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

தலைவர் – இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை

## 03. <u>குவைத் இழப்பீட்டு நிதியம்</u>

குவைத் இழப்பீட்டு நிதியத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பாக பொதுத் திறைசேரியின் அபிப்பிராயம் மீது குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியினதும் பொதுத் திறைசேரியினதும் இணக்கப்பாட்டுடன் புலம் பெயர் தொழிலாளர்களின் பணவனுப்பல்களுடன் தொடர்புடைய சுழலும் நிதியம் ஒன்றை உருவாக்குவதற்காக சில முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும், அதற்காக குறைந்த வட்டி வீதத்தின் கீழ் அம்முன்மொழிவை சமர்ப்பிப்பதாகவும் பணியகத்தின் தலைவரால் இதன் போது தெரிவிக்கப்பட்டது.

வளைக்குடா யுத்தம் நிகழ்ந்த காலப்பகுதியில் இந்நிதியத்திலிருந்து மேலும் நிதியை செலுத்துவதற்காக பணியகத்தினால் யாதேனும் சந்தர்ப்பத்தில் பொதுத் திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடுகள் கோரப்பட்டுள்ளனவா என்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வினாவிற்குப் பதிலளிக்கையில், அதற்காக ரூ.1200 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது எனவும் மேலும் செலுத்துவதற்கில்லை எனவும் பணியகத்தின் பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

இதன் போது நிறுவனத் தலைவர் தெரிவிக்கையில்,

- தற்போது திறைசேரியிடமிருந்து மேலும் நிதி ஒதுக்கத்தை பெற்றுக்கொள்வதற்காக பணியகத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது எனவும்,

- அண்மையில் திறைசேரியிடமிருந்து ரூ. 3 பில்லியன் நிதி கோரப்பட்டுள்ளது எனவும்,
- அதற்கு மேலதிகமாக பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளர், வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் அமைச்சரின் பங்குபற்றுதலுடன் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது எனவும்,
- இது தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதற்குரிய அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

## 04. <u>படிகளைச் செலுத்தல்</u>

பொதுத் திறைசேரியின் அல்லது அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் மாத்திரம் உரிய சட்ட விதிகளுக்கு அமைவாக படிகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டதுடன் அவ்விதப்புரைகளைக் கவனத்திற் கொள்ளாமல் பணியகத்தினால் ஏலவே படிகள் செலுத்தப்பட்டவாறே தொடர்ந்தும் படிகள் செலுத்தப்படுகின்றமை தொடர்பாக குழுவின் அதிருப்தி வெளியிடப்பட்டது.

இதன் போது அமைச்சின் செயலாளர் தெரிவிக்கையில்,

- படிகளைச் செலுத்துவது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது குழுவின் விதப்புரைகளை புறக்கணிக்கும் நோக்கத்தில் அல்ல எனவும்,
- தொழிற்சங்கங்களால் விடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாக எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய விளைவுகளைத் தவிர்ப்பதற்கும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு கைத்தொழிலின் தற்போதைய நிலையைக் கருத்திற் கொண்டும் இப்படிகளைச் செலுத்த வேண்டி ஏற்பட்டது எனவும்,
- அது தொடர்பாக பொதுத் திறைசேரிக்குத் தெரிவித்து, அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு

எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும் 1985ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகச் சட்டத்தின் 16(2)(ஊ) உப பிரிவிற்கு அமைவாக அமைச்சரவைக்கு சம்பள அளவைத் தீர்மானிக்க முடியும் எனவும், அதனை நிறைவேற்றுவதற்கான பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதி தெரிவிக்கையில்,

- நிதிச் சட்டத்திற்கு அமைவாக தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு நிதி அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது எனவும்,
- மேற்குறிப்பிட்ட நிதிச் சட்டத்திற்கு அமைவாக, பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டும் எனவும்,
- அதற்கு மேலதிகமாக, அரச நிறுவனங்களின் சம்பளங்கள் மற்றும் படிகளில் மாற்றங்களைச் செய்வது தொடர்பாக 2009.05.26 ஆம் திகதிய 39ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபம் மற்றும் அரச துறை நிறுவனங்களுக்கு ஆட்சேர்த்தல் மற்றும் சம்பள அதிகரிப்பு தொடர்பாக 2018.07.18 திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபமும் ஏற்புடையதாகும் எனவும் தெரிவித்தார்.
- அதற்கமைவாக இவ்விடயம் தொடர்பாக உரிய சுற்றுநிருபங்களில்,
  - அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களை அமைப்பதற்காக வகுக்கப்பட்ட சட்டங்களில், பணியாட்டொகுதிக்கு சம்பளங்கள் மற்றும் படிகளைச் செலுத்துவது தொடர்பாக ஏற்பாடுகள் உள்ளன எனவும், 39ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்திற்கு அமைவாக, தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணிகள் ஆணைக்குழுவின் விதப்புரைகள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி

பணியாட்டொகுதியின் சம்பளங்கள் மற்றும் படிகளைத் தீர்மானிக்கும் நியதிச்சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதனை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் தவிர்க்க வேண்டும் எனவும்,

- அதற்கு மேலதிகமாக துரிதமான தீர்வுகள் தேவையான சந்தர்ப்பங்களில் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணிகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அவ்விதப்புரைகள் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும்,
- 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்திற்கு அமைவாக சகல அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அங்கீகாரமுடைய அதிகாரிகள் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் முன்னனுமதியின்றி ஊழியர்களை ஆட்சேர்ப்பதையும், சம்பளங்கள் படிகளை அதிகரிப்பதையும் தவிர்க்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கும் போது,

- அனுமதி வழங்க முடியாமல் போன படிகள் தொடர்பான விபரங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும்,
- 03/2022 இலக்க பொதுத் திறைசேரியின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அமைச்சரைவயின் அங்கீகாரம் இன்றி சகல படிகளையும் செலுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாகவும்,
- மேலும், படிகளைச் செலுத்துவதற்காக தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணிகள் ஆணைக்குழுவிடமிருந்து விதப்புரைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதனால் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணிகள் ஆணைக்குழுவிற்கு இப்படிகள் பற்றிய விபரங்கள் விதப்புரைக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும்,

- அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவாக செலுத்த வேண்டிய ஊக்குவிப்புப் படிகள் நீங்கலாக பல படிகளை செலுத்த முடியாதெனவும் குறிப்பிட்டார்.

மேலும் சில சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதி அமைச்சின் அனுமதியுடன் விசேடப் படிகளை செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி பணியகத்தினால் பின்வரும் படிகள் செலுத்தப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டது.

| | **படி வகை** | **அங்கீகாரம் பெறல்** |
|---|---|---|
| 1 | வருகைப் படி | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் |
| 2 | விமான நிலைய அலகின் அலுவலர்களுக்கான படி | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் |
| 3 | மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் பட்டியல்களுக்கு மீளச் செலுத்தல். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் |
| 4 | இடர்ப் படி | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் |
| 5 | சீருடைப் படி | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் |
| 6 | வருடாந்த காப்புறுதிப் படி | பொது முகாமையாளரின் அங்கீகாரம் மாத்திரம் |
| **வெளிநாட்டுத் தூதுக் குழுக்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கான படிகள்** | | |
| 7 | கல்விசார் படிகள் | 2014.05.09 ஆம் திகதிய கூட்டுத்தாபன பொது முகாமையாளரின் கடிதத்திற்கு அமைவாக |
| 8 | உபசரிப்புப் படி | வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் 82ஆம் இலக்க |

| | | |
|---|---|---|
| | | ஆலோசனைப் பத்திரத்திற்கு அமைவாக (2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்காக) |
| 9 | மருத்துவப் பட்டியல்களுக்கான கொடுப்பனவுகளை மீளளிப்புச் செய்தல். | வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக |

பணியகத்தின் பணிப்பாளர் சபையில் பொதுத் திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் இருக்கின்றாரா என குழு வினவியமைக்கு, குறுகிய காலத்திற்குள் பொதுத் திறைசேரியின் பிரதிநிதிகளை மாற்றியுள்ளதாக கணக்காய்வாளர் தலைமையதிபதி குறிப்பிட்டார்.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

i. படிகளை செலுத்தும் போது பொதுத் திறைசேரியின் சுற்றுநிருபங்களுக்கு அமைவாகவும் மற்றும் பொதுத் திறைசேரியின் அல்லது அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும் உரிய சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக படிகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

ii. கொடுப்பனவு வகை யாதாக இருப்பினும், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்பட்ட விதப்புரைகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

iii. பொதுத் திறைசேரியின் பிரதிநிதிகளாக, பணியகத்திற்கு அலுவலர்களை நியமிக்கும் போது உரிய காலப்பகுதிக்கு அவ்வலுவலர்களை நியமிக்குமாறு பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு அறிவித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் – தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

தலைவர் – இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.

## 05. <u>முதலீடுகள்</u>

முதலீடுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முறையான, மீளாய்வுக் குழுவொன்றினை நியமிப்பது தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

இதன் போது அமைச்சின் செயலாளர்,

- இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு 2022.12.29ஆம் திகதிய கடிதம் ஊடாக பணியகத்தின் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும்,
- அதற்கு மேலதிகமாக பொதுத் திறைசேரியின் வழிகாட்டல் கையேட்டின் 06ஆவது பிரிவுக்கு அமைவாக, அவ்வாறான குழுக்களை அமைக்க வேண்டியது 30 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான முதலீடொன்று உள்ள போது மாத்திரமே எனவும்,
- எவ்வாறெனினும், முதலீடுகளின் வெளிப்படைத் தன்மையைப் பாதுகாப்பதற்காக, முதலீட்டுக் குழுவொன்றினை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

இதன் போது அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் கருத்து தெரிவிக்கையில், நிதிச் சட்டத்திற்கு அமைவாக அரச முயற்சியாண்மைகளுக்கு அவசியமான செலவுகளை மேற்கொண்டதன் பின்னர் எஞ்சும் நிதியை முதலீட்டுக்காக பயன்படுத்தாமல் பொதுத் திறைசேரிக்கு அனுப்ப வேண்டும் எனக் குறிப்பிட்டார். ஆயினும், பணியகம் வருமானம் உழைக்கும் நிறுவனமன்று அது ஒரு சேவை வழங்குநர் என்பதால் பணியகத்தினால் 21 பில்லியன் ரூபா மிகையானது உயர் வட்டி வீதத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டமை தொடர்பாகவும் அவர் மேலும் வினவினார்.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்திற் கொண்டு பொதுத் திறைசேரிக்கு 3 பில்லியன் ரூபாவை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக இதன் போது கருத்துத் தெரிவித்த பணியகத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு அமைவாக சகல அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்கள் 500,000 ரூபாவை விட அதிகமான தொகையை முதலீடு செய்வதற்கு முன்னர் நிரல் அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன், தனி நபரினால் முதலீட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது என கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்டதுடன் முதலீட்டுத் தீர்மானங்கள் தொடர்பான வெளிப்படைத் தன்மையை பாதுகாப்பதற்காக மிகை விதிப்புக்குரிய அதிகாரத்துடனான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சேவை ஆணைக்குழுவை எதிர்காலத்தில் தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 06. <u>காப்புறுதி</u>

நிறுவனத்தில் நடைமுறையில் உள்ள காப்புறுதித் திட்டங்கள் தொடர்பாக குழு கவனம் செலுத்தியது.

இதன்போது அமைச்சின் செயலாளர் கீழ்க் காணும் விடயங்களைத் தெரிவித்தார்.

- தற்போது இரண்டு காப்புறுதித் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.
- உள்நாட்டு காப்புறுதித் திட்டம் மற்றும் சர்வதேச காப்புறுதித் திட்டம் என்பன அவையாகும்.
- உள்நாட்டு காப்புறுதித் திட்டமானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு உரியதாக காணப்படுவதோடு அது, 2023.02.28ஆந் திகதியுடன் முடிவுக்கு வருவதால், தற்போது எதிர்காலத்திற்கான காப்புறுதி நிறுவனத்தை தெரிவு செய்யும் பெறுகைச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழு அல்லது அமைச்சினது பெறுகைக் குழு ஆகிய இரண்டில் பொருத்தமானதொரு நிறுவனத்தைத் தெரிவுசெய்யும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- அது சாத்தியமாகாத பட்சத்தில், ஏற்கனவே நடைமுறையில் உள்ள காப்புறுதித் திட்டம் மேலும் இரண்டு மாதங்களுக்கு நீட்டிக்கப்படும்.
- சர்வதேச காப்புறுதியானது மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பணியாளர்களுக்கு மட்டும் வரையறை செய்யப்பட்டுள்ளதோடு, அதற்கென அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று பெறுகைச் செயன்முறையை முறையாக பின்பற்றியதையடுத்து 03 நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஏற்கனவே இதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்த சர்வதேச காப்புறுதி பெறுகைக் குழுவினையும், உள்நாட்டு காப்புறுதி பெறுகைக் குழுவினையும் பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினர்கள் பற்றி குழு வினவியது.

அத்தகைய பெறுகைக் குழுக்களின் பிரதிநிதித்துவம் பற்றி அமைச்சின் செயலாளர் கீழ்க் காணும் விடயங்களைத் தெரிவித்தார்.

- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் அமைப்பு – திருமதி இந்து ரத்நாயக்க தலைவர், ஏனையோர் - முன்னாள் அமைச்சின் செயலாளராகவிருந்த திரு. மாபா பத்திறண மற்றும் இந்நாள் அமைச்சின் செயலாளர்.
- அமைச்சின் பெறுகைக் குழுவின் அமைப்பு - அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. லால் சமரசேகர தலைவர். பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தலைமை நிதி அலுவலர் திரு. குணசேகர மற்றும் அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் திரு. ரசிக்க பெரேரா.

மேலும், பணியகத்தின் தலைவரது அங்கீகாம் பெறப்படாத கேள்விப் பத்திரம் பற்றி குழு அமைச்சின் செயலாளரை வினவியது.

இதன்போது, அமைச்சின் செயலாளர் கீழ்க் காணும் விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

- தற்போதுள்ள சர்வதேச காப்புறுதித் திட்டம் சார்ந்தே இந்தச் சிக்கல் தோன்றியுள்ளது.
- அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததை அடுத்து, குடிமனைகள் சார்ந்து தொழிலுக்குச் செல்கின்ற பணியாளர்களுக்கு புதிய காப்புறுதித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதோடு, பொருத்தமான நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்காக சர்வதேச ரீதியாக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டன.
- பணியகத்தின் பொது முகாமையாளர் மேற்படி கேள்விப் பத்திரத்தின் தொழில்நுட்பக் குழுவை பிரதிநிதித்துவம் செய்தார்.
- எனினும், பொது முகாமையாளரால் குழுவின் அறிக்கை அங்கீகரிக்கப்படவில்லை. .

இக் கேள்விப் பத்திரத்துடன் தொடர்புடைய பெறுகைக் குழுவின் அறிக்கையை அங்கீகரிக்காமைக்கான ஏதுக்களை குழு பொது முகாமையாளரிடம் வினவியது.

பணியகத்தின் பொது முகாமையாளர், மேலே குறிப்பிட்டுள்ள பெறுகை நடைமுறைக்கான தொழில்நுட்ப மதிப்பீடுகளில் பாரிய மாறுபடுதல் காணப்பட்டமை காரணமாக மதிப்பீட்டுச் செயன்முறையுடன் இணங்க முடியாததால் இந்த அறிக்கையை அங்கீகரிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பற்றி கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர், பொது முகாமையாளரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரதான மாறுபடுதல் பற்றி பெறுகைக் குழுவினால் கலந்துரையாடப்பட்டு, அந்த விடயங்கள் ஏற்புடையன அல்ல எனக் கருதப்பட்டுள்ளதாகவும், 2021ஆம் மே மாதத்தில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் முன்னிலைப்படுத்தப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் ஒன்றின் மூலம் இந்தக் கேள்விப் பத்திரத்திற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும், புதிய காப்புறுதித் திட்டமானது அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவானதால், அதனை பணிப்பாளர் சபையின் அதிகாரத்திற்கு ஆற்றுப்படுத்தவில்லை எனவும், தேவைப்படுத்தப்படும் பட்சத்தில் பணிப்பாளர் சபையின் தகவலுக்காக அதனைச் சமர்ப்பிக்க முடியும் எனவும் பணியகத்தின் தலைவர் தெரிவித்தார்.

அதைத்தொடர்ந்து, சர்வதேச காப்புறுதித் திட்டம் பற்றி குழு கவனம் செலுத்தியதோடு அதன்போது பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்பட்டன.

- தற்போது கடைப்பிடிக்கப்படுகின்ற பெறுகை நடவடிக்கை முறை சரியானதாக இருப்பினும், அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும் வகையில் கேள்விப் பத்திரத்தை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குதல்.
- அதன்படி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது ஒரு நிறுவனத்திலிருந்து கேள்விப் பத்திரத்தைக் கோரி அந்த நிறுவனத்திற்கே அதனை வழங்கியிருத்தல்.
- சட்டத்திற்கு அமைவாக, கேள்விப் பத்திரமானது சம்பந்தப்பட்ட நாடுகளின் தூதரகங்களில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.
- குவைத் தூதரக அலுவலகங்களில் 50 டொலர் தொகைக்கான விலைகேட்பு முன் வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த காப்புறுதித்

திட்டத்தை 100 டொலருக்கும் அதிகமான ஒரு தொகைக்கு தனியொரு காப்புறுதிக் கம்பெனிக்கு வழங்கியுள்ளமை.

- ஆகவே, பெறுகைச் செயன்முறையில் பாரிய மோசடி இடம் பெற்றுள்ளது என்பதோடு, அதனால் ஆண்டு ஒன்றுக்கு தலா ரூபாய் 300,000/- வீதம் பல ஆண்டுகளுக்கு மேலதிக செலவினை ஏற்க நேர்ந்துள்ளது.
- எவ்வாறாயினும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் இந்த விடயம் புலனாய்வு செய்யப்பட்டபோது, கேள்விப் பத்திரத்துடன் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதென இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தெரிவித்திருந்தமை.
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அப்போதைய "உப தலைவர்" இந்தப் பெறுகைச் செயன்முறையை ஒருங்கிணைத்துள்ளதால், சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பணியகத்தில் இருக்க வேண்டும்.

அமைச்சின் செயலாளர் கூறும்போது, மேற்படி காலத்தினுள் அந்த அமைச்சு இராஜாங்க அமைச்சாக தொழிற்பட்டதாகவும், அமைச்சு மாறியுள்ளதால் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து, மிக விரைவில் குழுவில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

i. வளைகுடா காப்புறுதித் திட்டம் பற்றி கணக்காய்வு ஒன்றை மேற்கொண்டு அதன் அறிக்கையை ஒரு மாத காலத்தினுள் குழுவில் முன்னிலைப்படுத்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் – தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரின் 2023.08.10 ஆந் திகதிய MFE/FIN/8/12/1 ஆம் இலக்க கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அறிக்கை குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 07. <u>நிதி முறைகேடுகள் பற்றிய புலானாய்வுச் சபை</u>

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இடம்பெற்றுள்ள நிதி முறைகேடுகள் குறித்து சுயாதீனமான புலனாய்வை மேற்கொள்வதற்காக புலனாய்வுச் சபை ஒன்றை அமைப்பது பற்றி குழு கவனம் செலுத்தியது.

அது குறித்து பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் எழுத்துமூல கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், 04 அங்கத்தவர்களுக்கான பெயர் குறித்த நியமனங்கள் கிடைத்துள்ளதாகவும், இச்செயற்பாட்டை நிறைவு செய்வதற்கு ஒரு வார காலம் எடுக்குமெனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

## 08. <u>விசேட புலனாய்வு அலகு</u>

பணியகத்தில் விசேட புலனாய்வு அலகு ஒன்றை நிறுவுவது குறித்து குழு கவனம் செலுத்தியது.

இந்த விசேட புலனாய்வு அலகினை கொண்டுநடத்த மாதத்திற்கு 15 தொடக்கம் 20 இலசட்சம் ரூபாவுக்கும் இடைப்பட்ட ஒரு தொகையைச் செலுத்த வேண்டுமெனவும், கோரப்பட்டுள்ள மேலதிக காலம் பற்றிய முடிவு எடுக்கப்பட உள்ளதெனவும் இதன்போது அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

<u>**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**</u>

2020.09.15ஆந் திகதி அமைச்சின் செயலாளர் பொலிஸ் உத்தியோகத்தர்களை மீளழைக்குமாறு பொலிஸ் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கு அறிவித்துள்ளதாக குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 09. <u>வெளி நாட்டு தூதுக் குழுவிற்கான அலுவலர்களை நியமித்தல்</u>

வெளிநாட்டு தூதுக் குழுவினை பிரதிநிதித்துவம் செய்வதற்கான அலுவலர்களைத் தெரிவு செய்யும்போது பின்பற்ற வேண்டிய செயல் நடைமுறை / வழிமுறை பற்றி குழு கவனம் செலுத்தியது.

இது தொடர்பில் அமைச்சின் செயலாளர் கீழ்க் காணும் விடயங்களைத் தெரிவித்தார்.

- மொழிபெயர்ப்பு அலுவலர்களுக்கான தட்டுப்பாடு காணப்படுகின்றது.

- அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தபோதும் ஆட்சேர்ப்புச் செய்யப்படாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியிருந்தது.
- அதன்படி, ஆட்சேர்ப்புக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதோடு, அதனுடன் சம்பந்தப்பட்டதான அறிக்கையொன்றை அமைச்சரைவைக்கு முன்னிலைப்படுத்துவதற்காக பொது நிருவாக, உள்நாட்டுலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
- அதன்படி எல்லா பதவிகளுக்கும் பகிரங்க சேவையிலிருந்து 80%யும், ஏனைய துறைகளிலிருந்து 20%யும் ஆட்சேர்ப்புச் செய்ய குழு அறிக்கையில் விதப்புரை வழங்கப்பட்டுள்ளது.
- எவ்வாறாயினும், பெரும்பாலான அரச அலுவலர்களுக்கு அரபு, யப்பான் மற்றும் கொரிய மொழிகளை திறம்பட கையால இயலாததாலும், அரசாங்கத்தால் வெளி நாட்டு நாணய அலகில் ஊதியம் செலுத்தப்படுவதாலும், தனியார் துறையில் உள்ளவர்களுக்கு விசேட கொடுப்பனவு மட்டும் கிடைப்பதாலும் தனியார் துறையில் உள்ள அலுவலர்களை அதிகளவில் இணைத்துக்கொள்ளும்போது நாட்டிலிருந்து வெளியே செல்லும் டொலரின் அளவு குறைகின்றது.
- ஆகவே, பொதுத் துறை பணியாட்டொகுதியிலிருந்து 60% யும் தனியார் துறை பணியாட்டொகுதியிலிருந்து 40% யும் ஆட்சேர்ப்புச் செய்யுமாறு கோரி மேலுமொரு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் இவ்விடயம் குறித்து பின்வரும் விடயங்களைத் தெரிவித்தார்.

- இராஜதந்திர மட்டத்திலான பதவிகளுக்கு அமைச்சிலிருந்தும் பணியகத்திலிருந்தும் 100% அரசு அலுவலர்களை இணைத்துக் கொள்ள குழு விதப்புரை வழங்கி உள்ளது.
- மேலும், இராஜதந்திர மட்டம் அல்லாத பதவிகளுக்கு அமைச்சிலிருந்தும் பணியகத்திலிருந்தும் 80% அரச அலுவலர்களையும், 20% தனியார் துறை அலுவலர்களையும் இணைத்துக்கொள்ள குழு விதப்புரை வழங்கி உள்ளது.
- எவ்வாறாயினும், ஆட்சேர்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இராஜதந்திர மட்டத்திலான பதவிகளுக்குத் தேவையான 100% ஐ அமைச்சிலிருந்தும் பணியகத்திலிருந்தும் 60%யும் 40%ஐ ஏனைய அரச நிறுவனங்களிலிருந்தும் இணைத்துக்கொள்ளுமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அமைச்சரவைக்கு முன்மொழிந்துள்ளது.

- வெளி நாட்டு பணவனுப்பலை அதிகரிக்கும் பொருட்டு அலுவலர்களுக்கு வெளி நாடு சென்று 05 வருடங்கள் தொழில் புரிவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் பற்றி கருத்துத் தெரிவித்த குழு, வெளி நாட்டுத் தூதுக் குழுக்களுக்கான அலுவலர்களைத் பக்கச்சார்பின்றி தெரிவு செய்வதற்கான நடவடிக்கை முறையினையும் முக்கிய செயல் நிறைவேற்ற குறிகாட்டி (KPI)களையும் தயாரிக்க வேண்டும் என்பதுடன், வெளி நாட்டுத் தூதரக அலுவலகங்களுக்கு அனுப்புகின்ற அலுவலர்கள்தாம் செல்லும் நாடுகளில் வசிக்கும் மக்களுடன் அந்தந்த மொழிகளில் ஊடாடும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டுமென்பதால், தேவையான திறன்களை வளர்த்துக்கொண்டுள்ள அலுவலர்களைத் தெரிவுசெய்யும் செயன்முறையில் புதியதொரு வழிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டது.

<u>**குழுவின் விதப்புரைகள்**</u>

i. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்தாலோசித்தும் நடைமுறைசார்ந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டும் வெளி நாட்டுத் தூதுக் குழுக்களுக்கான அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் சரியான வழிமுறையை ஆரம்பித்தல்.
ii. இவ்விடயத்தில் ஓர் உடன்பாட்டுக்கு வருமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தல்.

<u>**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**</u>

செயலாளர் – தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

தலைவர் – இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

<u>**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**</u>

i. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரது MFE/FIN/8/12/1 மற்றும் 2023.07.24ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முன்னேற்றம் குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளது.
ii. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்த வெளிநாடுகளில் அமைந்துள்ள தூதரகங்களின் தொழில் மற்றும் நலனோம்புகை பிரிவுகளுக்கு உத்தியோகத்தர்களை இணைப்பது தொடர்பிலான ஆட்சேர்ப்பு நடைமுறையானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2023.01.17ஆந்

திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக குழுவுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

**10. திறைசேரிக்கான பிரதிநிதியின் பணிப்பொறுப்பு**

பணியகத்தினுடைய திறைசேரிக்கான பிரதிநிதியின் பணிப்பொறுப்பு பற்றி குழு கவனம் செலுத்தியது.

**குழுவின் விதப்புரைகள்**

i. பணிப்பாளர் சபையால் எடுக்கப்படுகின்றதும் ஏற்றுக்கொள்ள முடியாததுமான தீர்மானங்கள் பற்றி, திறைசேரியின் பிரதிநிதிகளால் நிதி அமைச்சின் செயலாளர் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியை அறிவுறுத்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் – நிதி அமைச்சு

**11. நிறுவனத் திட்டத்தைத் தயாரித்தல்**

நிறுவனத் திட்டத்தை முன்னிலைப்படுத்துவதற்காக 2023 பெப்புருவரி மாதம் 09ஆந் திகதி வரை மேலதிக ஒருமாத காலத்தை வழங்குமாறான பணியகத்தின் கோரிக்கை குறித்து குழு கவனம் செலுத்தியது.

**குழுவின் விதப்புரை**

i. பணியகமானது ஒரு ஒழுங்குப்படுத்தல் நிறுவனமாக செயற்படும் விதத்தை ஆராய்வதற்காக, அடுத்தக் கூட்ட அமர்வில் நிறுவனத் திட்டம் பற்றிய சமர்ப்பணம் ஒன்றைச் செய்வதற்கு தயார்படுத்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் – தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

தலைவர் – இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரது MFE/FIN/8/12/1(VOL IV) மற்றும் 2023.02.14ஆந் திகதிய கடிதத்தில், 2023 - 2027 காலகட்டத்துக்கான இலங்கை

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நிறுவனத் திட்டம் மற்றும் தொடர்த் திட்டம் குழுவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

## 12. <u>பயிற்சி நிலையங்கள்</u>

பல பயிற்சி நிலையங்கள் போதிய தரத்தில் இல்லாதிருப்பதாக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அவதானிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் சில பயிற்சி நிலையங்கள் கூடுதலான விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பாகவும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பணியகத்தில் பதிவு செய்யப்படாது அல்லது சட்டவிரோதமான முறையில் வெளிநாடு சென்றிருப்பினும் தொழில்புரியும்போது பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றதும் தற்சமயம் தடுப்பு முகாம்களில் தங்கியுள்ளதுமான புலம்பெயர் தொழிலாளர்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி குழுவினால் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், கொரியா போன்ற நாடுகளுக்குச் செல்வதற்குத் தேவையான தொழில்நுட்ப தகைமைகளை அடைந்து கொள்வதற்காக இலங்கையின் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு வசதிகளை பெற்றுக்கொடுப்பதன் மூலம் மாணவர்களை பயிற்றுவிக்க முடியுமென குழு அவதானித்ததுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக மாணவர்களை பயிற்றுவிக்கும் இலங்கையிலுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் இலங்கையில் பயிற்சி நிலையங்கள் ஊடாக பயிற்றுவிப்பதற்குத் தேவையான திறன்களுக்கான விபரக் குறிப்புகள் பணியகத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக குழு வினவியது.

இதன்போது கருத்துரைத்த அமைச்சின் செயலாளர் கூறும்போது, புலம்பெயர் ஊழியர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு இலங்கையில் 16 பயிற்சி நிறுவனங்கள் காணப்படுவதாகவும் இதற்காக கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் பொது நிருவாக அமைச்சின் உத்தியோகத்தர்களைக் கொண்டமைந்த குழுவொன்றை இணைத்துக் கொண்டு பரந்தளவிலான ஒன்றிணைந்த பயிற்சித் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**குழுவின் விதப்புரை**

i. பயிற்சி நிலையங்களிலுள்ள வசதிகள் தொடர்பில் அறிக்கையொன்றை குழுவிடம் சமர்ப்பித்தல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர் – தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

தலைவர் – இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை

## 13. புலம்பெயர் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

புலம்பெயர் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது பற்றி குழு கவனம் செலுத்தியது.

இஸ்ரேல், தென் கொரியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் ஊழியர்களுக்கான கேள்வி அதிகளவில் காணப்படுகின்ற போதிலும், நபரொருவர் இரண்டு தடவைகள் வெளிநாட்டுக்குச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் இல்லாதிருப்பதனாலும், மொழித் திறன் பரீட்சை இலங்கையில் நடத்தப்படுவதனாலும் இவ்வாறு வெளிநாடு செல்வதற்கு ஒரு சிறு தொகுதியினருக்கு மாத்திரமே அனுமதி இருப்பதனாலும் வெளிநாட்டு பணவனுப்பல்கள் குறைந்த போதிலும், நாட்டின் தற்போதைய நிலையை கருத்திற்கொண்டு குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்கேனும் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வதற்கு விரும்பும் நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது தொடர்பாக இங்கு கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, தமது நிறுவனங்களில் இதற்கு முன்பு சேவையாற்றிய ஊழியர்களை இலங்கையிலிருந்து வரவழைப்பதற்கு அந்நாடுகளிலுள்ள தொழில் வழங்குநர்கள் இணங்கியுள்ள போதிலும் பணியகத்தின் செயற்பாடுகள் காரணமாக இவ்வாறு ஊழியர்களை அனுப்புவது தடைப்பட்டுள்ளமையால் இது பற்றி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து இங்கு ஆராயப்பட்டது.

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

*(வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு)*

**விசாரணைத் திகதி:** 2023.01.19

**கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

### 01. பணிப்பாளர் நாயகம் பதவி வெற்றிடமாக காணப்படுதல்

2010 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பதவியானது பதில் கடமையாற்றும் நிலையில் காணப்பட்டதாகவும் தற்போது அப்பதவி வெற்றிடமாக உள்ளதாகவும் குழு அவதானித்து. சட்டத்தின் படி பாரியளவிலான பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களைக் கொண்டுள்ள இப்பதவி வெற்றிடமாக காணப்படுவது தொடர்பில் குழு ஆராயந்தது.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் பதில் கடமையாற்றும் அடிப்படையில் கடமையாற்றிய பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற பின்னர் இப்பதவி வெற்றிடமாக காணப்படுவதாகவும், மீண்டும் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு பத்திரிகையில் விளம்பரம் செய்வதற்கு அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவரினால் இங்கு கருத்தரைக்கப்பட்டது.

இப்பதவியானது நீண்டகாலமாக பதில் கடமையாற்றும் அடிப்படையில் காணப்பட்டமை தொடர்பில் குழு மேலும் ஆராய்ந்தது.

இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டதெனவும், இதன் போது தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரை தெரிவு செய்ய முடியாது போனதாகவும், எனவே அப்போதிருந்த அமைச்சின் செயலாளரினால் வர்த்தக அமைச்சின் மேலதிகச் செயலாளர் பதில் கடமையாற்றும் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டதாகவும் நிறுவனத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கூறுகையில்;

- பத்திரிகை விளம்பரம் அமைச்சுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதெனவும், அதற்கமைய விளம்பரத்தை பிரசுரிக்க முடியும் எனவும்,
- ஆயினும் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் இப் பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட போதிலும், குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் மேற்படி பணிப்பாளர் நாயகம் பதவிக்குரிய சம்பளத்தை விரும்பவில்லையெனவும், இப்பதவிக்கு 18 வருட கால அனுபவம் கொண்ட சட்டத்தரணியாக இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பதாகவும்,
- எனவே எதிர்பார்த்த தகைமைகளைக் கொண்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதில்லையெனவும், குறைந்தபட்ச தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிப்பதை தாம் அவதானித்ததாகவும்,
- எனவே அரச சேவையில் உள்ள தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமையாற்றும் அடிப்படையில் இந்த பணிப்பாளர் நாயகம் பதவியை நீண்டகாலமாக வகித்து வந்துள்ளதாகவும்,
- இதற்குத் தீர்வாக தகைமை பெற்ற நபரொருவரை இப்பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்காக 2003 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தில் பணிப்பாளர் நாயகம் பதவிக்கான ஆர்சேர்ப்புக்குரிய நிபந்தனைகளில் திருத்தங்களை மேற்கொள்வது பொருத்தமானதெனவும் தெரிவித்தார்.

இலங்கையில் அடிப்படை உணவுத் தேவை மற்றும் பணவீக்கம் முதலிய விடயங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மிக முக்கிய நிறுவனமாக கருதப்படுகின்றமையால், அதில் காணப்படுகின்ற பதவிகள் நிரந்தர பதவிகளால் முழுமையாக்கப்பட வேண்டியது அவசியமெனவும், சம்பளப் பிரச்சினைகள் இருப்பின் இது தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் குழு சுட்டிக்காட்டியது.

இவ்விடயம் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய பணிப்பாளர் கூறும்போது,

- அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் அனைத்திலும் (All SOE's) பணிப்பாளர் நாயகம் பதவி தொடர்பில் சமமான சம்பள அளவுத்திட்டம் காணப்படுவதாகவும் (JM 01 சம்பள அளவுத்திட்டம்)
- விசேட தகைமைகள் வேண்டப்படுகின்ற பதவியேதும் இருப்பின் அது தொடர்பில் கோரிக்கை விடுக்க வேண்டுமெனவும், மற்றும்
- இவ்விடயம் தொடர்பாக நிதி அமைச்சில் காணப்படுகின்ற குழுவினால் ஆராயப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதற்கு அமைவாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், இதுவரையில் பதில் கடமையாற்றும் அடிப்படையில் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஒருவரை நியமிக்கும் பணியை 02 வாரங்களுக்குள் (2023.02.02 ஆம் திகதிக்கு முன்) மேற்கொள்ள முடியுமெனவும், ஆட்சேர்ப்பு நிபந்தனைகளில் திருத்தங்களை மேற்கொண்டு வழக்கமான பதவியணியில் நிரந்தர நியமனமொன்றை 02 மாத காலப்பகுதியில் (2023.03.19 ஆம் திகதிக்கு முன்) வழங்க முடியுமெனவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

## 02. <u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள்</u>

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புக்கள் பின்வருமாறு.

- பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தை இற்றைப்படுத்த வேண்டிய தேவை
- மூலோபாய திட்டம் தொடர்பில் காணப்படும் சிக்கல்கள்
- ஆட்சேர்க்கப்பட்ட 400 பட்டதாரிகள் புலனாய்வு உத்தியோகத்தர்களாக கடமையாற்றுதல் மற்றும் இவர்களை செயற்றிறன் மிக்க வகையில் பயன்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள்

- ஒழுங்குபடுத்தல் நிறுவனம் என்ற வகையில் மேற்கொள்ளும் பணிகள் மற்றும் கடமைகள் போதாமை
- விலைக் கட்டுப்பாடு மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளுக்கு அப்பாலான கடமைகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை
- நிறுவனங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு பேணப்படாமை
- தகவல் முகாமைத்துவத்திற்குத் தேவையான தரவு முறைமை காணப்படாமை

## 03. <u>பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தை இற்றைப்படுத்தல்</u>

ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை என்ற வகையில் இயங்கும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்குரிய சட்டத்தை இற்றைப்படுத்த வேண்டிய முக்கிய தேவைப்பாடு காணப்படுவதாக குழு அவதானித்தது.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சின் செயலாளர் குறிப்பிடுகையில்;

- திருத்தப்பட்ட சட்ட மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளதெனவும்,
- கடந்த வாரம் சனாதிபதி செயலகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரத்நாயக்க அவர்களின் தலைமையில், சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் பிரதிநிதிகளுடன் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும்,
- அதன்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எழுத்து மூலம் தமக்குக் கிடைத்துள்ளதாகவும், இது தொடர்பில் தேவையான தகவல்களை சட்ட ஆலோசகர் ஊடாக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்புவதாகவும் தெரிவித்தார்.

## 04. <u>மூலோபாயத் திட்டம்</u>

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் மூலோபாயத் திட்டத்தை தற்போதைய நிலைமைக்கு பொருந்தும் வகையில் திருத்துவது தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

அத்துடன் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகளின் மூலோபாயத் திட்டம் உள்ளிட்ட ஏனைய ஆவணங்கள் இற்றைப்படுத்தப்படுவதில்லை என்பதை அவதானித்த குழு, எதிர்காலத்தில் நியமிக்கப்படவுள்ள அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய உப குழுக்களில் மேற்படி விடயம் தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதாக தெரிவித்தது.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

i. நிறுவனங்களுக்கிடையில் இடைத்தொடர்பினைப் பேணல்.
ii. காலத்திற்கு காலம் ஏற்படக்கூடிய பாவனையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், பாவனையாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் புதிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்.
iii. புதிய மூலோபாயத் திட்டமொன்றைத் தொகுத்து 03 மாதங்களுக்குள் (2023.04.19 ஆம் திகதிக்கு முன்) குழுவிடம் சமர்ப்பித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்</u>**

செயலாளர் – வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

பணிப்பாளர் நாயகம் – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

தலைவர் – பாவனையாளர் அலுவல்கள் அதிசாரசபை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

i. பரிந்துரை இல. (i) இற்கான முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை
ii. நுகர்வோரின் உரிமைகளை உறுதி செய்வதற்காக நுகர்வோர் விவகார அதிகாரசபையால் ஆரம்பிக்கப்பட்ட மூலோபாயங்கள் பற்றிய அறிக்கையானது, அதிகாரசபையின் தலைவரின் இல. CAA/DG/COPE/2023 மற்றும் 27.01.2023 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.
iii. தலைவர், நுகர்வோர் விவகார அதிகாரசபை இல. CAA/CH/COPE/2023 மற்றும் 01.06.2023 தேதியிட்ட கடிதத்தின் மூலம் 2023-2025 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் மூலோபாயத் திட்ட பரிந்துரை இல. (iii) இன் கீழான தேவைப்பாடானது குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## 05. <u>பாவனையாளர் அலுவல்கள் அதிசாரசபையில் கடமையாற்றும் பட்டதாரிகள்</u>

பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் திட்டத்தின் கீழ் பாவனையாளர் அலுவல்கள் அதிசாரசபைக்கு இணைக்கப்பட்டுள்ள 400 பட்டதாரிகள் தொடர்பாகவும் இவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பாகவும் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

பதில் கடமையாற்றும் மனித வள பணிப்பாளர் கூறும்போது,

- 400 பட்டதாரிகள் பாவனையாளர் அலுவல்கள் அதிசாரசபையில் இணைந்து கடமையாற்றி வருகின்றனர் எனவும்,
- மேற்படி உத்தியோகத்தர்கள் புலனாய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும்,
- இவர்களுக்கு நியமனங்களை வழங்கும் சந்தர்ப்பத்திலேயே சந்தை சுற்றிவளைப்புகள், வழக்குத் தொடர்தல் நடவடிக்கைகள், பாவனையாளர்களின் முறைப்பாடுகளை விசாரித்தல், விலை மதிப்பீட்டு கடமைகள் என்பன பொறுப்பளிக்கப்பட்டு கடமைப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளதாகவும்,
- பாவனையாளர் அலுவல்கள் அதிசாரசபையின் மாவட்டப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாண உதவிப் பணிப்பாளர்களினால் மேற்படி உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்யப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

மாகாண உதவிப் பணிப்பாளர்கள், மாவட்டப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான மேற்பார்வை உத்தியோகத்தராக கடமையாற்றும் பணிப்பாளர் (பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்) மேலும் தெரிவிக்கையில்,

- மேற்படி 400 பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 130-150 பேர் புலனாய்வுப் பணிகளில் ஈடுபடுவதாகவும் ஏனையவர்கள் பிற கடமைகளில் ஈடுபடுவதாகவும்,
- புலனாய்வு உத்தியோகத்தர்கள் மாவட்டச் செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளதாகவும்,

- சிரேஸ்ட புலனாய்வு உத்தியோகத்தர், மாவட்ட பிரதம உத்தியோகத்தராக கடமையாற்றுவதாகவும்,
- இவர்கள் சுற்றிவளைப்புகள், வழக்குத் தொடர்தல், பாவனையாளர்களுக்கு விழிப்புணர்வூட்டல், சந்தை தகவல்களை பெற்றுக்கொள்ளல் (மூன்று நாட்களுக்கு ஒரு தடவை அத்தியாவசிய பொருட்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்) முதலிய சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட கடமைகளை மேற்கொள்ளவதாகவும்,
- மேற்படி அலுவலர்களுடைய சேவை தொடர்பில் தாம் சுமார் 70% திருப்தியடைவதாகவும் குறிப்பிட்டார்,

ஆயினும், குறித்த புலனாய்வு அலுவலர்களின் சேவை தொடர்பில் நிதமும் முறைப்பாடுகள் கிடைத்தல், மேற்படி அலுவலர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற செயற்பாடுகள் உரியவகையில் நிறைவேற்றப்படாமை, கோவிட் தொற்று நோய் பரவிய காலப்பகுதியில் நீதிமன்ற நடவடிக்கைகள் செயலிழந்திருந்த போதிலும் வழக்குகளைத் தாக்கல் செய்யக்கூடியதாகவிருந்த நிலையில் அவ்வாறு மேற்கொள்ளப்படாமை, பல்பொருள் அங்காடிகளில் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்படாமை, மொத்த விற்பனை நிலையங்களில் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்படாமை, நிர்மாண உபகரணங்களின் தரம் பரிசோதிக்கப்படாமை, ஓர் அலுவலரால் வருடாந்தம் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளினுடைய எண்ணிக்கை போதுமானதாக இல்லாமை போன்ற பல பிரச்சினைகள் குழுவினால் அவதானிக்கப்பட்டன.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

i. புலனாய்வு அலுவலர்களின் பணியை மிகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் மேற்கொள்வதற்கு வழிமுறையொன்றைத் தயாரித்து ஒரு மாத காலத்துக்குள் (2023.02.19 ஆம் திகதிக்கு முன்னர்) குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>**

தலைவர் - பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

பரிந்துரைக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

## 06. பாவனையாளர்களின் முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை குழுவிற்குச் சமர்ப்பித்துள்ள தகவல்களுக்கமைய 2022 ஆம் ஆண்டில் சுமார் 13,980 சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய ஓர் அலுவலரினால் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றி வளைப்புகளின் எண்ணிக்கை அண்ணளவாக 35 என்பதுடன் மேற்படி எண்ணிகையானது போதுமானதாக இல்லையெனவும் குழு அவதானித்தது.

இங்கு கருத்துத் தெரிவித்த பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் (பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்) கூறுகையில்;

- சுற்றி வளைப்புகளுக்காக கடந்த வருடம் 25000 இலக்குகள் வழங்கப்பட்டதாகவும்,
- 2005 ஆம் ஆண்டிலிருந்து பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சுற்றி வளைப்புகளை மேற்கொள்ள ஆரம்பித்ததாகவும்,
- 2005 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சுமார் 290,000 சுற்றிவளைப்புகளும் அவ்வெண்ணிக்கைக்கு நிகரான வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும்,
- சுமார் ஒரு பில்லியன் ரூபா தண்டப்பணமாக விதிக்கப்பட்டுள்ளதாகவும்,
- 2019ஆம் ஆண்டில் 24,061 சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்,
- 2020, 2021 ஆம் ஆண்டுகளில் கோவிட் தொற்று நிலைமை காரணமாக நீதிமன்றங்கள் மூடப்பட்டிருந்தமையாலும் எரிபொருள் பற்றாக்குறை நிலவிய காலத்திலும் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் ஓரளவு குறைந்ததாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, பாவனையாளர்களின் முறைப்பாடுகள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக அறிக்கைகள் என்பன தொடர்பில் செயற்படக்கூடிய ஊடகப் பிரிவொன்று இந்நிறுவனத்தில் இருக்க வேண்டுமென குழுவினால் அவதானிக்கப்பட்டது.

**குழுவின் விதப்புரைகள்**

i. பொதுமக்களின் முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்றினை துரிதமாகத் தயாரித்தல்.
ii. கிடைக்கப்பெறும் தொலைபேசி அழைப்புகளுக்கு துரிதமாக பதில் வழங்குவதற்கேற்ற வகையில் தொலைபேசி இயக்குனர் ஒருவரை நியமித்தல்.
iii. துறைமுக அதிகார சபையுடன் இணைந்து தகவல்களைப் பெற்று பாரியளவிலான மொத்த வியாபார நிலையங்களில் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளல்.
iv. தரவு வங்கி ஒன்றைத் தயார் செய்தல்.
v. வாரத்துக்கு ஒரு முறையேனும் ஊடக அறிவித்தலொன்றை வெளியிடுவதன் மூலம் மக்களை அறிவூட்டல்.

**விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய / பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் / நிறுவனங்கள்**

செயலாளர்- வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

தலைவர் - பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

**தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்**

முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 07. முட்டையின் கட்டுப்பாட்டு விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பற்றிய நீதிமன்ற தடைக் கட்டளை மற்றும் அது தொடர்பாக மேன்முறையீடு செய்யாமை

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் விலைகள் அதிகரிப்பது தொடர்பில் சமூகம் பாரிய குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாகவும் இதன்போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் முனைப்பான செயற்பாடு அத்தியாவசியமெனவும், அவர்கள் மக்கள் சார்பாக செயலாற்ற வேண்டுமெனவும் குழுவினால் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

முட்டையின் விலை தொடர்பில் காணப்பட்ட அதிக உயர்வினைக் கட்டுப்படுத்துவதற்காக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகபட்ச விலையை நிர்ணயித்து வெளியிட்ட வர்த்தமானப் பத்திரிகைக்கு எதிராக நீதிமன்றம் தடைக்கட்டளை விதித்தமை தொடர்பாகவும் அது

சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யாமை தொடர்பாகவும் குழு வினவியது.

முட்டையின் விலை அதிகமாக உயர்ந்து செல்வதைக் கட்டுப்படுத்துவதற்காக முட்டைகளுக்கு உத்தரவாத விலையை நிர்ணயித்தல் மற்றும் சந்தையின் கேள்வி நிரம்பல் இடைவெளியை ஈடுசெய்வதற்காக முட்டைகளை இறக்குமதி செய்தல் போன்ற இரண்டு முறைகள் காணப்படுவதாக அமைச்சின் செயலாளரினால் இங்கு தெரிவிக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

- முட்டை இறக்குமதி செய்வது தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று முன்வைக்கப்பட்டதாகவும், அதன்போது முட்டை இறக்குமதி செய்வதற்கு கொள்கையளவில் உடன்பட்டதாகவும்,
- சனாதிபதியின் செயலாளரின் தலைமையில் கூட்டப்படும் உணவு தரநிர்ணயக் குழுவுக்கு இப்பிரச்சினையை முன்வைத்து மதிப்பீட்டினை மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்குமாறு தனக்கு அறிவித்ததாகவும்,
- மேற்படி குழுவுக்கு இதனைச் சமர்ப்பித்த போது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அவதானிப்புகளையும் ஆராய்ந்து, தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகை தொடர்பில் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து 2022 பெப்ருவரி 06 ஆம் தேதிக்கு நியமிக்கப்பட்டுள்ள வழக்கு விசாரணைத் திகதியை முன்கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றதாகவும்,
- அதற்கமைய நகர்த்தல் பத்திரத்தைத் தயாரித்து சட்டமா அதிபதிக்கு சமர்ப்பிக்கும்போது இதில் மற்ற திறத்தவர்கள் விளக்கமளிப்பதற்கு மேலும் கால அவகாசம் கோரும் பட்சத்தில் இவ்வழக்கு மேற்கொண்டும் பிற்போடப்படுவதற்கு வாய்ப்புள்ளதாக சட்டமா அதிபர் சுட்டிக் காட்டியதாகவும்,
- குறிப்பிட்ட வர்த்தமானப் பத்திரிகை தொடர்பில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தற்காலிகத் தடைக்கட்டளை மூலமாக மீண்டும் உயர்ந்தபட்ச விலையை

நிர்ணயித்து வர்த்தமானப் பத்திரிகையைப் பிரசுரிப்பது தடுக்கப்படவில்லை எனவும்,

- மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள விலையை விடக் குறைந்த விலையை அதிகபட்ச விலையாகக் குறிப்பிட்டு மீண்டும் வர்த்தமானப் பத்திரிகை பிரசுரிக்க வேண்டாமென மேற்படி தடைக்கட்டளையில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும்,

குறிப்பிட்டார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) இனால் இந்நீதிமன்றத் தடைக்கட்டளை தொடர்பில் மேன்முறையீடு செய்யப்படாமை தொடர்பில் பின்வரும் அடிப்படையில் விளக்கமளிக்கப்பட்டது.

- இத்தீர்ப்பு ஓர் இறுதித் தீர்ப்பல்ல என்பதுடன் இடைக்காலக் கட்டளை மாத்திரமே கிடைக்கப் பெற்றுள்ளது என்பது,
- 2023.02.06 ஆம் தேதி மீண்டும் வழக்கு விசாரணை நடைபெறும் என்பது,
- இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் அறிவுறுத்தல்களைக் கோரிய போது உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கு அறிவுறுத்தல்களை வழங்கவில்லை என்பது,
- சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் இருப்பின் நகர்த்தல் பத்திரம் மூலமாக அவற்றைச் சமர்ப்பித்து தடைக்கட்டளையினை நீக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார் என்பது,
- தடைக்கட்டளை வழங்கப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையில் வெள்ளை முட்டை ஒன்றின் விலை ரூபா 43 மற்றும் சிவப்பு முட்டை ஒன்றின் விலை ரூபா 45 என அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது,
- அத்தொகையை விடக் குறையாத விலைக்கு அதிகபட்ச விலையை நிர்ணயித்து வர்த்தமான பத்திரிகையை வெளியிடுவதற்கோ அல்லது அத்தொகையை விடக் குறைந்த விலைக்கு அதிகபட்ச விலையை நிர்ணயிப்பதற்கோ தேவையேற்படின் 2023.01.20ஆம் தேதி வெள்ளிக்கிழமை நகர்த்தல் பத்திரம் மூலம் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு 2023.01.18ஆம் தேதி அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றது என்பது.

## 08. முட்டையொன்றின் உற்பத்திச் செலவினம்

முட்டையொன்றின் அதிகபட்ச விலையை நிர்ணயித்து பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகை தொடர்பாக முட்டை உற்பத்தியாளர்கள் நீதிமன்றத்தில் தோன்றிய சந்தர்ப்பத்தில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் ஒரு முட்டைக்கான விலை தொடர்பில் சட்டமா அதிபர் விசாரித்துள்ளதாகவும், அச்சந்தர்ப்பத்தில் முட்டையொன்றுக்கான உற்பத்திச் செலவினம் ரூபா 58 என்பதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குழு அவதானித்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் குறிப்பிடுகையில்;

- முட்டையொன்றின் விலை தொடர்பாக தாம் நீதிமன்றத்திற்கு தகவல்களை வழங்கியதாகவும்,
- தமது திணைக்களத்தினால் மாதாந்தம் வெளியிடப்படுகின்ற கோழி உற்பத்திச் செலவினத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அதனை மேற்கொண்டதாகவும்,
- முந்திய மாதத்தின் ஆய்வுத் தகவல்கள் குறிப்பிட்ட மாதத்தில் வெளியிடப்படுவதாகவும், (உதாரணமாக 2022 டிசம்பர் மாதத்தில் முட்டை விலை தொடர்பான சகல தகவல்களையும் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதனை வெளியிடுவதற்கு 2023 ஜனவரி மாதம் நடுப்பகுதி ஆகும் என்பது)
- முட்டையொன்றின் விலை என்பது மேற்படி அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்ற ஒரு தரவு என்பதோடு முட்டையொன்றின் உற்பத்திச் செலவு தொடர்பில் இவ்வாறு தரவுகளை உள்ளடக்கி 2012 ஆண்டில் இருந்தே தமது திணைக்களம் தகவல்களைத் தயாரிப்பதாகவும்,
- 2022 ஜூலை மாதத்தில் குறிப்பிட்ட தகவல்களுக்கமைய முட்டையொன்றின் உற்பத்திச் செலவினம் அண்ணளவாக ரூபா 46

என கணக்கிடப்பட்டதாகவும் அது ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டதாகவும்,

- அதிகபட்சவிலை நிர்ணயிக்கப்பட்டு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை குறிப்பிட்ட வர்த்தமானப் பத்திரிகையை வெளியிட்டதாகவும்,
- அதனுடன் தொடர்புடையதாக சட்டமா அதிபர் தகவல்களைக் கோரியபோது 2022 ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாக் கொண்டு முட்டையொன்றின் உற்பத்திச் செலவினமாகிய ரூபா 46 உடன் ரூபா 12 இனைச் சேர்த்து முட்டையொன்றின் விலை ரூபா 58 என்பதாக சட்டமா அதிபருக்கு அறிக்கையிட்டதாகவும்,
- கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் முட்டையொன்றின் உற்பத்திச் செலவினத்தினைத் தீர்மானிக்கையில் commercial feed இன் மீது விலையைத் தீர்மானித்தாகவும்,
- சிறியளவிலான வியாபாரிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் அவ்வாறு தீர்மானம் மேற்கொள்ளப்படுவதாகவும், பாரியளவிலான வியாபாரிகளை விட சிறியளவிலான வியாபாரிகளுடைய முட்டையொன்றின் உற்பத்திச் செலவினம் அதிகமென்பதாகவும், ஆகையால் பாரியளவிலான, நடுத்தரளவிலான வியாபாரிகளுடைய உற்பத்திச் செலவினத்தினை அடிப்படையாகக் கொண்டு முட்டையொன்றின் விலையைத் தீர்மானிப்பதற்கு அப்பாற் சென்று சிறியளவிலான வியாபாரிகளுடைய முட்டையொன்றின் உற்பத்திச் செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட விலை நிர்ணயிக்கப்பட்டதாகவும்,
- பாரியளவிலான மற்றும் நடுத்தரளவிலான வியாபாரிகளுடைய உற்பத்திச் செலவினத்திற்கமைய முட்டையொன்றின் உற்பத்திச் செலவினமாக தான் தகவல்களை வழங்கும் பட்சத்தில் சிறியளவிலான வியாபாரிகளுடைய கைத்தொழில் முடங்கிவிடும் எனவும்,

- கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப் பொறுப்பானது கால்நடை உற்பத்தித்துறையுடன் தொடர்புடைய உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பது எனவும்,
- எனவே, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் அடையாளம் காணப்பட்ட முட்டையொன்றின் உற்பத்திச் செலவினத்தை விட தொடர்ச்சியாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் முட்டையொன்றின் உற்பத்தி செலவினமாகக் காட்டப்பட்டுள்ள தொகைக்கு இடையில் வித்தியாசம் ஏற்பட இது காரணமாக அமைகின்றது எனவும்,
- தமது திணைக்களத்தினால் காட்டப்படும் முட்டையொன்றின் உற்பத்திச் செலவினம் எல்லா சந்தர்ப்பங்களிலும் கூடுதல் பெறுமதியாகக் காணப்படுவதற்கு இவ்விடயம் காரணமாக அமைகின்றது என்பதுடன்,
- இத்துறையில் உள்ள சிறிய, நடுத்தர மற்றும் பாரியளவிலான வியாபாரிகளுடைய உற்பத்தி செலவினங்களுக்கிடையில் பாரிய இடைவெளி காணப்படுவதாகும்.

ஆனால் குழு அவதானித்ததாவது;

- சிறியளவிலான முட்டை உற்பத்தியாளர்கள் இன்றளவில் இப்போட்டித்தன்மையை எதிர்கொள்ள முடியாமல் உற்பத்தியை மேற்கொள்ள முடியாத நிலைமைக்கு உள்ளாகியுள்ளதாகவும்,
- சிறியளவிலான வியாபாரிகளை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயித்த முட்டையொன்றின் விலையின் இலாபத்தை பாரியளவிலான வியாபாரிகள் அதிகமாக பெற்று வருவதாகவும்,
- முட்டை உற்பத்தியாளர்களைப் பாதுகாத்தல் மற்றும் முட்டைப் பாவனையாளர்களைப் பாதுகாத்தல் ஆகிய இரண்டு விடயங்களிலும் வெற்றிகரமான நடு நிலைக்கு வரவேண்டும் எனவும்,

குழுவினால் அவதானிக்கப்பட்டது.

கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் தற்போது முட்டையொன்றின் உற்பத்திச் செலவினம் அண்ணளவாக 34 ரூபா என உணவுப் பாதுகாப்பு குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டிருத்தல் தொடர்பாக

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் குழு மேலும் வினவியது.

அதன்போது,

- தற்போது காணப்படுகின்ற நிலைமையில் முட்டையொன்றின் உற்பத்திச் செலவினம் ரூபா 34 எனவும்,
- மேற்படி 34 ரூபாவுடன், முட்டை உற்பத்தியுடன் தொடர்புடைய தரப்பினருடைய இலாபமாக 12 ரூபா சேர்வதாகவும்,
- அதற்கமைய ரூபா 34 க்கு ரூபா 12 இனைச் சேர்த்து அண்ணளவாக முட்டையொன்றை தற்போது ரூபா 48 இற்கு வழங்க முடியும் எனவும்,
- இருப்பினும் சிறியளவிலான உற்பத்தியாளர்களுக்கு இதுவரையிலும் முட்டையொன்றின் உற்பத்திச் செலவாக ரூபா 45 செலவாகுவதாகவும், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கணக்கீடுகளுக்கு அமைவாக இன்றளவில் முட்டையொன்றின் உற்பத்திச் செலவினம் ரூபா 40 ஆக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் விலை முகாமைத்துவப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

**<u>குழுவின் விதப்புரைகள்</u>**

i. முட்டையொன்றின் விலையைத் தீர்மானிப்பது தொடர்பில் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விலைச் சூத்திரத்தைத் தயாரிக்கையில் மேலே கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கவனத்தைச் செலுத்துதல்.

**<u>விதப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய/ பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள்/ நிறுவனங்கள்</u>**

செயலாளர்- வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு

பணிப்பாளர் நாயகம் - கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களம்

தலைவர்- பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

**<u>தற்போதைய நிலைமையும் முன்னேற்றத்தை அறிக்கையிடலும்</u>**

முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 9. <u>முட்டை இறக்குமதி செய்தல்</u>

முட்டை இறக்குமதி செய்வது தொடர்பில் குழு மேற்கொண்ட விசாரணையில்,

- ➢ முட்டைக்கான கூடுதல்பட்சவிலையை நிர்ணயித்த வர்த்தமானப் பத்திரிகைக்கு நீதிமன்றத்தினால் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவை விஞ்ஞாபனம் முன்வைக்கப்பட்டபோது முட்டை இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும்,
- ➢ அதற்காக நிதி அமைச்சின் செயலாளர், கமத்தொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகிய மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டதாகவும்,
- ➢ மேற்கூறப்பட்ட குழுவுக்கு இறக்குமதி செய்யப்பட வேண்டிய முட்டைகளின் அளவு மற்றும் வரி விகிதத்தைத் தீர்மானிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டதாகவும் அதற்கமைய குறிப்பிட்ட அளவுகள் மற்றும் வரி விகிதம் என்பன அத்தினத்திற்கு மறுதினமே தீர்மானிக்கப்பட்டதாகவும்,
- ➢ முட்டை இறக்குமதி செய்வதற்கு, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெற வேண்டி இருந்ததாகவும் அதற்காக விண்ணப்பித்ததாகவும்,
- ➢ அதற்குப் பதிலாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டும் இது தொடர்பான தகவல்களைக்கோரி மாதிரிப் படிவமொன்றினை அனுப்பி 0

அதற்கமைய இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் தலைவர் விகக்கமளிக்கையில்;

- ➢ முட்டை கொள்வனவு செய்வதற்காக சர்வதேச விலை மனுக்கோரல் மேற்கொண்டதாகவும்,

- அதற்காக சுமார் 15 கம்பெனிகள் விலைமனுக்களை முன்வைத்ததாகவும் அதில் 12 கம்பெனிகள் இந்தியக் கம்பெனிகள் என்பதுடன், அவர்கள் பிரதான முட்டை ஏற்றுமதியாளர்கள் எனவும்,
- குறிப்பிட்ட விலைகளின் ஒப்பீடு, தொழில்நுட்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு விநியோகஸ்தர்கள் இருவர் தெரிவு செய்யப்பட்டதாகவும், அவர்கள் இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும்,
- விநியோகஸ்தர்கள் தொற்றுத் தடைகாப்பு சான்றிதழ், ஏனைய தகவல்கள், சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் போன்றவற்றைச் சமர்ப்பித்ததாகவும்,
- முட்டை இறக்குமதி செய்வதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் முன் அனுமதி அவசியம் என்பதனால் மேற்படி தகவல்களை மதிப்பிடுவதற்கும் அனுமதி வழங்குவதற்குமாக குறிப்பிட்ட தகவல்களை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்ததாகவும்,
- அதன்போது கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேற்படி விநியோகஸ்தர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு மேலதிகமாக முட்டை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்காக அவர்களிடமிருந்து மேலும் பல தகவல்கள் தேவையாயுள்ளதாக அறிவித்து இன்னும் பல தகவல்களையும் கோரி கடிதமொன்றை தனக்குச் சமர்ப்பித்திருந்ததாகவும்,
- அதற்கமைய மேற்படி தகவல்கள் அவசியமென இந்திய சுகாதார அதிகாரசபைக்கு கோரிக்கை விடுத்ததாகவும்,
- அதற்கு மேலதிகமாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளில் முட்டை இறக்குமதி செய்கின்றபோது அம்முட்டைகள் 07 நாட்கள் இலங்கையில் தொற்றுத் தடை காப்புக்குட்படுத்தப்படல் வேண்டும் எனவும், இலங்கை

ஆய்வுகூடங்களில் அவை பரிசோதிக்கப்படல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

- இறக்குமதி செய்வதற்காகவுள்ள மேற்படி முட்டைகளை அந்த நிறுவனங்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தி அனுப்புவதனால் அவற்றை 90 நாட்களுக்கு வைத்திருக்க முடியும் என்பதாகவும்,
- அந்த நிறுவனங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும் முட்டைகளை ஏற்றுமதி செய்வதோடு அதன்போது முட்டைகளை கொண்டு செல்ல 45 நாட்கள் செல்வதாகவும்,
- நாட்டின் தற்போதைய நிலைமைக்கமைய, கூடிய விரைவில் முட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதாகவும், அத்துடன்
